உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ நாதம் – 7



## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

57வது பட்டமளிப்பு விழா மலர்

ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள்

04-11-2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best compliments From ....

# கஜமுகன் ஹாட்வெயர்

# GAGAMUGAN HARDWARE

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



கட்டடப் பொருட்கள்

லங்கா கம்பி

பைப் வகைகள்

சீமேந்து

மெக்சன் மெஸ் வகைகள்

பெயின்ற் வகைகள்

Pepsioda & Accessories




அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம் ...






TEL: 021 222 2833, 021 222 7144, FAX: 021 222 2368

E-mail Kajamuganhw@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ நாதம் - 7



## அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
## 57வது பட்டமளிப்பு விழா மலர்

**04-11-2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# 2017 - 2018 ஆம் ஆண்டின் நிர்வாகசபை

**(22.01.2017ல் தெரிவு செய்யப்பட்டவர்கள்)**

| | |
|---|---|
| தலைவர் | : சைவப்புலவர் திரு.மு.திருஞானசம்பந்தப்பிள்ளை |
| உப.தலைவர் | : சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை |
| | சைவப்புலவர் திரு.சா.தில்லைநாதன் |
| | சைவப்புலவர் திரு.அ.பரசுராமன் |
| செயலாளர் | : சைவப்புலவர் திரு.க.நித்தியதசீதரன் 13.05.2017 வரை |
| | சைவப்புலவர் திரு.த.குமரன் 04.06.2017 தொடக்கம் |
| உப. செயலாளர் | : சைவப்புலவர் திரு.த.குமரன் 03.06.2017 வரை |
| | சைவப்புலவர் திரு.ந.புகன்ஶ்ரீந்திரன் 04.06.2017தொடக்கம் |
| பொருளாளர் | : சைவப்புலவர் திரு.ச.முகுந்தன் |
| தேர்வுச் செயலாளர் | : சைவப்புலவர் திரு.செ.கந்த சத்தியதாசன் |
| உப.தேர்வுச் செயலாளர் | : சைவப்புலவர் திரு.கா.கமலநாதன் |
| சமயப் பிரசாரச் செயலாளர்கள்: | சைவப்புலவர் திரு.ந.புகன்ஶ்ரீந்திரன் 03.06.2017 வரை |
| | சைவப்புலவர் திருமதி.சி.சறோஜினிதேவி |
| | சைவப்புலவர் திருமதி.ஞா.சிவானந்தஜோதி |
| | சைவப்புலவர் திரு.செ.நவநீதகுமார் |
| | சைவப்புலவர் திரு.கு.சுமுகலிங்கம் 04.06.2017 தொடக்கம் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள் | : சைவப்புலவர் திரு.சு.தேவமனோகரன் |
| | சைவப்புலவர் திரு.சி.பொன்னுத்துரை |
| | சைவப்புலவர் திரு.சி.நந்தகுமார் |
| | சைவப்புலவர் திரு.வ.தயாபரசிவம் |
| | சைவப்புலவர் திரு.சி.ரமணராஜா |
| | சைவப்புலவர் திரு.பா.திலகானந்தம் |
| | சைவப்புலவர் செல்வி.ஆனந்தி ஜெயரட்ணம் |
| | சைவப்புலவர் திருமதி.பகீரதன் உருத்திராதேவி |
| | சைவப்புலவர் திருமதி.சண்முகவடிவு தில்லைமணி |
| | சைவப்புலவர் திருமதி.கவிதா கதிரமலை |
| | சைவப்புலவர் திருமதி.புஷ்பலட்சுமி விமலகாந்தன் |
| | சைவப்புலவர் திருமதி.பத்மாவதி தங்கராஜா |

## சைவநாதம் பதிப்பாசிரியர் குழு

பிரதம பதிப்பாசிரியர் : சைவப்புலவர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை (தலைவர்)

சைவப்புலவர் திரு. த. குமரன் (செயலாளர்)

சைவப்புலவர் திரு. ச. முகுந்தன் (பொருளாளர்)

சைவப்புலவர் திரு. செ. கந்தசத்தியதாசன் (தேர்வுச் செயலாளர்)

சைவப்புலவர் திரு. சி. ரமணராஜா (நிர்வாக உறுப்பினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
# 22-01-2017இல் நடந்த 56வது பட்டமளிப்பு விழாப் பதிவுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசியுரை

அன்பு சார் பெருந்தகையினீர்!

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வருடா வருடம் நடத்தும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவைப் பெருமைப்படுத்தி வெளிவரும் சைவநாதம் மலர் இவ் ஆண்டும் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. சைவ சமயத்தில் பிறந்த ஒவ்வொருவரும் சமய நெறியில் நின்று வாழ்வது மனித தர்மம் ஆகும். இவ்வகையில் சைவப்புலவர் சங்கம் பரீட்சைகளை நடத்துவதன் மூலமாக அனைவரையும் சமய நெறி நின்று வாழ வழிநிற்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. சைவநாதம் மலர் பல செய்திகளைத் தாங்கி வெளிவருவது சைவசமய நெறி நிற்பவர்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றது. இதில் வரும் கட்டுரைகளும், செய்திகளும் பல உண்மைகளை எமக்கு எடுத்துச் சொல்கின்றன. இம் மலரை வெளியிடும் சைவப்புலவர் சங்கத்தினருக்கு நல்வாழ்த்துக்களைக் கூறுகின்றோம். அனைவரும் சைவசமய நெறி நின்று வாழ்வோம். என்னுடைய நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக,**
**ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சைவமரபு காக்கும் சைவப்புலவர்கள் வாழ்க

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற பெருமைக்கமை வாக மேன்மைகொள் சைவநாதம் உலகெங்கணும் சைவசமயத்தின் உன்னத விழுமியங்களை விளங்கச் செய்து வருவது பாராட்டிற்குரியது. இலங்கையின் பல பாகங்களில் மாத்திரமன்றி லண்டன், ஜேர்மனி அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலும் இச்சங்கத்தின் பணி விரிவு பெற்று வருகின்றது.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வருடந்தோறும் சைவப்புலவர் பட்டத்திற்கான தேர்வுகளை நடாத்தி சித்திபெற்ற மாணவர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பதுடன், "சைவ நாதம்" என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வருவது சைவ உலகுக்குப் பெருமை சேர்ப்பதாகும். இச்சங்கம் 1960 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று 2010 ஆம் ஆண்டு பொன்விழா கண்டு இன்று வரை சிறப்புடன் சைவப் பணியாற்றி வருகின்றமை மற்றுமொரு குறிப்பிடத்தக்க விடயமாகும். நல்லை நாவலர் பெருமான் தம் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்புடன் பாதுகாத்த சைவமரபு காலவோட்டத்திற் சிதைந்து போகா வண்ணம் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் பொறுப்புடன் செயற்பட்டு வருவது சைவ உலகுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இச்சங்கத்தின் வழிகாட்டலில் பட்டம் பெற்ற சைவப் புலவர்கள் நாவலர் சைவப் பிரசாரகராக விளங்கி பாதுகாத்த சைவசமயத்தையும், சைவசித்தாந்த மரபையும் தொடர்ந்தும் தளரவிடாது பாதுகாப்பதில் தம்மை அர்ப்பணித்துக் கொள்வது காலத்தின் கட்டாய தேவையாகும். சைவநாதம் அவர்களது செயற்பாட்டிற்கு உறுதுணையாக விளங்கும் வண்ணம் சைவசமயஞ் சார்ந்த அரிய விடயங்களாகிய சிவவழிபாடு, சிவதீட்சை, திருக்கோயில் மரபு, சைவ ஒழுக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய சைவக் களஞ்சியமாகத் திகழ, தில்லை நடராஜப் பெருமானின் திருவருள் என்றென்றும் துணை நிற்பதாகும் என வாழ்த்துகின்றேன். இம்மலரினை உருவாக்கிய ஆசிரியரின் அரிய பணிகள் அனைவரினதும் பாராட்டிற்குரியவை.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவசமயப்பணிகள் மேன் மேலும் சிறக்கவும், 2017 ஆம் வருடத்திற்கான சைவ நாதம் - 7 சஞ்சிகை வெளியீட்டு நிகழ்ச்சிகள் வெற்றி பெறவும் எல்லாம் வல்ல சிவன் திருவருள் துணை நிற்பதாக என எமது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றோம்.

"இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!"

பேராசிரியர் இலக்கிய கலாநிதி,
ப.கோபாலகிருஷ்ண ஐயர்,
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# சைவப்புலவர் சங்கப் பணிகள் பாராட்டுக்குரியன

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் ஐம்பத்தேழாவது ஆண்டு நிறைவில் நடைபெறும் பட்டமளிப்பு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளிக்கொண்டு வரும் வகையில் இவ்வாண்டு சைவநாதம் - 07 மலர் வெளிவருவது பாராட்டுதலுக்குரியது.

வருடந்தோறும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் சைவப்புலவர்களை இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் உருவாக்கி வருவது போற்றுதற் குரியது.

இலங்கையில் இன்று சைவத்தையும், தமிழையும் காப்பாற்ற வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். அதற்கு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் தன்னாலான பணிகளைச் செய்து வருவது மிகவும் மகிழ்வுக் குரியதாக இருக்கின்றது.

இச்சங்கம் இளைஞர்களையும் உள்வாங்கிப் புதுப்பொலிவுடன் விளங்குவது சிறப்பாகவுள்ளது. இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் பலர் பணிபுரிந்து வருவது வாழ்த்துக்குரியது. இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு முதிர்ந்த வயதிலும் பணிபுரிந்து வரும் சங்க மதிப்புமிகு தலைவர் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் சைவசித்தாந்த சிரோமணி மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்களின் ஊக்கமான செயற்பாட்டை வாழ்த்துவதோடு இச்சங்கம் மேன்மேலும் வளர தில்லை நடராஜப் பெருமானை வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**பேராசிரியர் டாக்டர் மா.வேதநாதன்,**
**இந்துநாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்,**
**தலைவர் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# சைவப்புலவர்களை உருவாக்குவது எமது முக்கிய பணி

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஐம்பத்தேழு வருடங்களைப் பூர்த்தி செய்து இன்று (2017-11-04) பட்டமளிப்பு, "சைவ நாதம் - 7" வெளியீட்டு விழாவினை யா/வண்.நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில், நடாத்துகின்றது. இச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினராக விளங்கிச் செயலாளர் பதவியினைப் பொறுப்பேற்று அளப்பரிய பணிகளைத் திறம்பட நிறைவாகச் செய்த அமரர் "சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் நித்தியதசீதரன் M.A. (சைவசித்தாந்தம்)" அரங்கில் இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

முதற்கண் அமரராகிய அன்பன் தசீதரனின் ஆத்மா பேராவின்பப் பெருநிலையில் அமர்ந்து இன்புற்றிருக்க பிரார்த்தனை செய்வதோடு, அன்னார் சங்கத்துக்காற்றிய பணிகளை யாம் அனைவரும் தொடர்ந்து திரிகரண சுத்தியுடன் தொடர்வோமாக என வேண்டுகின்றேன்.

எமது சைவசமயத்தினதும் தமிழ்மொழியினதும் தொன்மை, நுண்மை, பெருமை என்பவற்றை ஆழஅகலமாக அறிய முற்படுவோருக்கு எமது பழந்தமிழ் இலக்கண, இலக்கிய சமய நூல்களை ஐயந்திரிபறக் கற்பது மிக இன்றியமையாததாகும். அவ்வாறு கற்கும் போதுதான் நமது மொழியினதும் சமயத்தினதும் முதன்மை நிலையை உணர்ந்து கொள்ளலாம்.

இந்நோக்கத்தினை எய்த முயல்வோருக்கு உந்துதலாக இருக்கும் நோக்குடனே நம் முன்னோர் முதல் இன்றுள்ள சைவப்புலவர் சங்க நிர்வாகிகள் வரை சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளை நடத்திக் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக, நமது நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் சைவநெறியும் புலமையும் நிறைந்த சைவப்புலவர்களை உருவாக்கிச் சமூகத்திற்குச் செந்நெறிகாட்டும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களை முன்னிலைப் படுத்தி வருகின்றனர்.

சங்கத் தேர்வுகள் உரிய பாடத்திட்டப்படியும், வரையறுக்கப்பட்ட தராதரத் தகுதியினையும் கொண்டனவாக அமைந்துள்ளன. இச்சங்கத் தேர்வுகளில் சித்தி பெற்றோர் சமூகத்தாலும், உயர்கல்வி நிறுவனங்களாலும் கணிக்கப் பெற்று உரிய கௌரவமும், மதிப்பும் அளிக்கப்படுவது நிதர்சனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
# 22-01-2017இல் நடந்த 56வது பட்டமளிப்பு விழாப் பதிவுகள்










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் பொன்விழாவின் போது (2010) முதன்முதலாக "சைவநாதம்" மலராக மலர்ந்தது. ஆண்டுதோறும் நடத்தப்பெற்ற பட்டமளிப்பு விழாக்களில் வெளியிடப்பட்ட மலர் வரிசையில் இன்று "சைவநாதம் மலர்-7" வெளி வருகின்றது.

இம்மலர் பல்லாற்றானும் பயனுறத்தக்க வகையில் சங்கச் செய்திகளையும், ஆழ்ந்த கருத்துணர் கட்டுரைகளையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது எனலாம்.

"சைவநாதம் மலர் - 7" இன் ஆக்கத்திற்கு நுண்மான் நுழைபுலக் கருத்துடைக் கட்டுரைகளைத் தந்த கட்டுரையாளர்கள், மலர் வெளிவர முன்னின்றுழைத்த சங்க உறுப்பினர், மலரினைக் கவின்பெற அச்சுப் பதித்துத் தந்த அச்சகத்தினர், மலரினைப் பெற்றுப் பயன்பெற முந்தும் பெரியோர் ஆகிய அனைவர்க்கும் எனது பாராட்டினையும், நன்றியினையும் சங்கத் தலைவர் என்ற தகைமையில் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**கலைஞானச்சுடர், சைவசித்தாந்த பண்டிதர்,**
**சைவசித்தாந்த சிரோமணி, சைவப்புலவர்,**
**மு.திருஞானசம்பந்தபிள்ளை,**
**தலைவர்,**
**அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்.**

**ஏவிளம்பி வருடம்**
**ஐப்பசி மாதம் 18ஆம் நாள்**
**ஐப்பசிப் பரணி**
**04-11-2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# செயலாளரின் கருத்துரை

## மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

இலங்கையில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கடந்த 57 வருடங்கள் சைவமும் தமிழும் வளர சைவப்புலவர்களை உருவாக்கி அரும் பணியாற்றி வருகின்றது. அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் 1960 ஆம் ஆண்டு மல்லாகத்தில் மூத்த சைவப்புலவர்களினால் தோற்றுவிக்கப்பட்டு இன்று பெரு விருட்சம் கண்டுள்ளது. இச் சங்கத்தின் 57 ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் நித்தியதசீதரன் அரங்கில் நடைபெறுகின்றது. சைவப்புலவர் சங்கம் என்பது வெறுமனே பட்டத்தினை மட்டும் வழங்கும் சங்கமன்று. பட்டத்துடன் இணைந்து சைவவாழ்வியலையும் சைவத்தமிழ் புலமையையும் கற்று அதன் படி வாழ உணர்த்துகின்ற சங்கமாகும். அவ்வகையில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் தன் பணிகளினை இடையறாது ஆற்றி வருகின்றது.

வருடாந்தம் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகளினை நம்பகத்தன்மையுடன் மிக உயர்தரத்தில் நடாத்தி தரம்மிக்க சைவப்புலமையும் தமிழ்புலமையும் மிக்க சைவப்புலவர்களினை உருவாக்கி கொண்டிருக்கின்றது. சைவப்புலவனானவன் சைவத்துடன் தமிழிலும் புலமை மிக்கவனாக மிளிர வேண்டும் அத்துடன் சைவவாழ்வு வாழ்பவனாகவும் இருத்தல் வேண்டும்.. சைவப்புலவனின் உயர் நாதமாக சாத்திர நூல்களின் ஆழ்ந்த அறிவும் பழந்தமிழ் இலக்கண நூல்களின் ஆழ்ந்த புலமையும் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது.

சைவப்புலவர் சங்கம் இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் சைவப்புவர்களை உருவாக்கியுள்ளது. சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் சங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதன் ஊடாக மேலும் பல புலமைமிக்க சைவப்புலவர்களை உருவாக்க முடியும். சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பட்டம் பெறுதலுடன் மட்டும் நின்று விடாது சைவப் புலவர்சங்கத்தின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்க்கும் உழைப்பவர்களாக இருக்கவேண்டும். தங்களை சைவப்புலவர்களாக உருவாக்கிய தாய்ச்சங்கத்திற்க்கு உண்மையுள்ளவர்களாகவும் சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

கடந்த வருடங்களைப் போன்று சைவப்பணியாற்றிவருகின்ற புரவலர்களையும் சைவவாழ்வியலில் உயர் நெறியினைக் கடைப்பிடிக்கின்ற குருமார்களையும் கௌரவிக்கின்ற கைங்கரியத்தினை சங்கம் ஆற்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வருடார்ந்தம் வெளியீடு செய்யப்படுகின்ற சைவநாதம் மலர் வரிசையில் 7 ஆவது மலரினை இவ்வருடமும் வெளியிடுகின்றது.

தற்பொழுது இலங்கையின் பல பாகங்களிலும் வெளிநாடுகளிலும் சைவப்புலவர்கள் அதிகம் வாழ்ந்து வருகின்றார்கள். தற்போதும் பலர் பரீட்சைக்கான விண்ணப்பங்களினை அனுப்பியுள்ளார்கள். இவ்வாறு எமது சங்கத்தின் செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் சைவத்தமிழ் அன்பர்களிடம் சைவ உணர்வுகளினை வெளிக்கொணர்வதனைக் காணலாம். 2017 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப்புவவர் பரீட்சையில் சித்தியடைந்து பட்டமளிப்பு நிகழ்வில் பட்டம் பெறுகின்ற அன்பர்கள். கற்றாங்கு ஒழுகு என்பதற்கு அமைய புலமை மிக்கவர்களாக வளரவும் சைவமரபு பண்பாடு பேணி வருபவாராகவும் செயற்படுதலும் அவசியமாகும். அத்துடன் பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் திருமுறை சைவசித்தாந்த சாத்திர நூல்களையும் சைவசமய வரலாறு உரை நடைநூல்களையும் ஆழ்ந்து அகன்று கற்று சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றி சைவப்புலவர்களாக உருவாக வேண்டும் என்பது சங்கத்தின் பெரு விருப்பாகும்.

புதிதாக பட்டம் பெறுகின்ற சைவப்புலவர்கள் சங்கத்துடன் இணைந்து தம் பணிகளை ஆற்றுவதற்கான வாயில்கள் திறந்த வண்ணமே உள்ளன. இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும். சங்கத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றுகின்ற அனைவருக்கும் நன்றிகள். மேலும் சங்கத்தின் பணிகள் இறையருளால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

**சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர் கலைமாமணி**
**தவராசா குமரன்**
**கௌரவ செயலாளர்**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்**

**குறிப்பு:-**

**இம்மலரில் இடம்பெறும் கட்டுரைகளின் கருத்துகளுக்கு கட்டுரையாளர்களே பொறுப்பாவர்.**

**- பதிப்பாசிரியர் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# அன்பராம் மணிவாசகரின் இரு பாடல்கள்

சைவப்புலவர் சித்தாந்த சிரோமணி,
மு.திருஞானசம்பந்தபிள்ளை.

சைவம் சிவசம்பந்தமுடையது. சைவசித்தாந்தம் சிவசம்பந்தத்தை விளக்குவது. அவ்விளக்கம் உயர் நிலையான முப்பொருள் விளக்கமாக மிளிர்கின்றது.

முப்பொருள் விளக்கத்தினை முழுமையாக விளக்குவதற்கு உரியனவாக விளங்குபவை சைவத்திருமுறைகள் பன்னிரண்டும், சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் என்பர்.

திருமுறைகள் பன்னிரண்டனுள் செந்நெறி முதல்வர் மூவர் அருளியவை ஏழு திருமுறைகளாகும். இம் மூவர் பாடல்களும் முறையே இன்பமும், பொருளும், அறமும் எடுத்துரைக்கும் தனித்தமிழ் மறைகளாகும். எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் அம்மறைகளின் முடியாகிய ஞானப் பனுவலாகும்.

செந்நெறி முதல்வராகிய நால்வரும் தமக்குத்தாமே ஒப்பாகிய ஒரு நீர்மையரே. இவர்கள் ஆண்டவன் ஆட்கொண்டருளிய அருளிப்பாட்டாலும், திருவடி சேர்ந்து பேரின்பம் திளைக்குஞ் சிறப்பாலும் ஒரு தன்மையரே ஆவர்.

நம் செந்நெறி முதல்வர் நால்வரும் நன்னெறி நான்கின் திருவருள் வழிகாட்டியாக அமைந்துள்ளனர். நன்னெறி நான்காவன சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பனவாம். இந்நெறி நின்று எமக்கு உணர்த்தியவர்களாக முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரையும் எடுத்தியம்புவர்.

ஞான மெய்ந்நெறியாம் அறிவு நெறியை விளக்கும் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக நான்கு அகவல்களும், ஐம்பத்தொரு பதிகங்களும் கொண்டு மொத்தச் செய்யுள் அறுநூற்றைபம்பத்தெட்டுடையதாக அமைந்துள்ளது.

ஐம்பத்தொரு பதிகங்களுள் இரு செய்யுள்களை மாத்திரம் கொண்டு விளங்குவது தில்லையில் அருளிய "திருப்படையெழுச்சி" பதிகமாகும். திருப்படையெழுச்சி என்பதன் உட்பொருளாக உணர்த்தப்படுவது "பிரபஞ்சப் போர்" என்பதாகும்.

அடிகளார் இருளாகிய ஆணவ மலத்துடன் சார்ந்து மயக்கத்தைச் செய்யும் மருளாகிய மாயாகாரியங்களை ஆணவச் சார்பினின்றும் அகற்றி அருட்சார் பினுக்குத் துணையாம் வண்ணம் பொருதற் பொருட்டுத் திருப்படையெழுச்சி பாடினார் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்படையெழுச்சியாவது அன்பரானாய படை திரண்டு வான நாட்டினைக் கைக்கொண்டு அந்நாட்டின் மாயப்படை வந்து மயக்கிக் கலக்காது அந்நாட்டினை அகப்படுத்தி ஆளுதற் பொருட்டு எழுதல்.

அன்பரானாய படை என்பது தோன்ற அது திருப்படை எனச் சிறப்பிக்கப்பட்டது. இப்படை இன்னா செய்யாமை ஆகிய கோட்பாடுடையது என்பது தோன்ற மெய்யறிவு வாளாகவும்; நுண்ணொலி செய்யும் உடுக்கை போர்ப்பறையாகவும், தொண்டர் முதலியோர் போர்ப்படை வீரராகவும், இறைவன் போர்த் தலைவராகவும் உருவகிக்கப்பட்டமை உணரத்தக்கது.

போரின் மேற் செல்பவர்கள் அணிந்துகொள்ள வேண்டியனவற்றை அணிந்தும், கைக்கொள்ள வேண்டியவற்றை எடுத்துத் தாங்கியும், முறைப்படி அணிவகுத்துச் செல்வர்.

அணிந்துகொள்ள வேண்டியவற்றை அணிந்து கொள்ளுங்கள் எனவும், அங்ஙனம் அணிந்து கொண்டவரே ஆங்காங்குப் பின் முன்னாகப் படை சூழ்ந்து போதற்கு உரியராதலின் "தூசி செல்வீர்", "சூழப் போகீர்", "கடைக்கூழை செல்மின்கள்" எனக் காரணகாரிய இயைபுபடப் பதிகம் அமைந்துள்ளது.

"ஞான வாளேந்துமையர் நாதப் பறையறை மின்
மான மா ஏறுமையர் மதிவெண்குடைகவி மின்
ஆன நீற்றுக் கவசம் அடையப் புகு மின்கள்
வானவூர் கொள்வோம் நாம் மாயப் படைவாராமே."

திருவடியுணர்வே சிவஞானம் எனவும், மெய்யுணர்வு எனவும் கூறப்படும். பாயிருள் நீங்கச் சிவஞானம் ஓங்குதல் வேண்டும். அதற்கு ஓசை பெறும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரித்தல் வேண்டும். அதுவே இங்கு நாதப் பறை என ஓதப்பெற்றுள்ளது. அஞ்செழுத்தோத மெய்யான திருவெண்ணீற்றை "முழுநீறு பூசிய முனிவர்" போன்று மெய்யெலாம் பூசி, "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியராய்த்" திகழ்தல் வேண்டும்.

நாதப் பறை அறைதற்கும், மதிக்குடை கவித்தற்கும், நீற்றுக்கவசம் புகுதற்கும் உரிமை பெற்றவரே இறைவன் தன் படையாளர் ஆவதற்கு அருகதையுடையவராவர் என்பது இதனால் புலப்படுகின்றது. நம் கடனை நிறைவேற்றின் அவனும் தன் கடனைத் தானே வந்து தீர்ப்பான்.

ஆனேறூர்தலும், வாளேந்துதலும் அவன் தொழில். பாதுகாப்புக் கானவற்றைச் செய்தலே நம் கடன். தற்பாதுகாப்புக்கு அவனது இலச்சினையிட்ட பொருள்களே வேண்டப்பட்டன. அவன் பெருமை நினைந்து அவன் அடிமைகளை மாயப்பகைவர் வந்து நெருங்கார். ஆதலால் அவைகளே எமது உரிமையும் காப்பும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இரண்டாம் பாடலாக,

"தொண்டர்காள் தூசி செல்வீர்! பக்தர் காள் சூழப் போகீர்!
ஒண் திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்!
திண் திறல் சித்தர்களே கடைக் கூழை செல் மின்கள்!
அண்டர் நாடாள்வோம் நாம் அல்லற்படை வாராமே."

"தொண்டர்களே முன்னிலையாகச் செல்லுங்கள்; அன்பர்களே புடைசூழ்ந்து செல்லுங்கள்; அகத் தவப் பயிற்சியால் சிவவொளிபெற்று மிகத் திறலுற்று விளங்கும் யோகியரே பேரணிப் பகுதியைச் செலுத்துங்கள்; திருவடியுணர்வின் திறம் சித்தியாகிய சித்தர்களே கடைக்கூழைப் படையாகிய பின்னணிப் படையிற் செல்லுங்கள்; மலம்மாயை கன்மங்களாகிய நீங்காத்துன்பந் தரும் அல்லற் படை நம்மை வந்து அண்டாமல் இருத்தற் பொருட்டு மேலோதியவாறு சென்று சிவபரத்தினை எய்தித் திருவருளால் இன்புறுவோம் என்பது பாடலின் பொழிப்பாகும்.

தொண்டர்கள் என்னும் பொதுச்சொல் இங்கு செந்நெறி நான்கில் சீலநெறியினைக் குறிப்பதாகும். பற்றுடையராம் பக்தர்கள் எனப்படுவோர் முட்டின்றி ஒழுகும் நோன்பினர் ஆவர். அகத்தவத்தராய யோகியர் என்பார் செறிவினராவர். சிவஞான ஒளித்திறம் எய்திய சித்தர்கள் திருவடி நுகர்வு திருவருளால் கைகூடப் பெற்றவர்கள். எனவே இவர்கள் அறிவு நிலையினராவர்.

இங்கு சுட்டப்பட்ட நான்கு நெறியும் அறிவுநெறிப் பாகுபாடாகிய அறிவிற்சீலம், அறிவில் நோன்பு, அறிவிற் செறிவு , அறிவின் அறிவு என்பனவாம்.

அறிவின் அறிவு நிலை கைவந்தவர்கள் மேலே கூறப்பெற்ற மூன்று நிலையிலும் பயின்று முடிந்த முடிபாகிய அறிவின் அறிவுநிலை நிற்பவராதலின் கடைக்கூழை செல்மின்கள் என ஓதப்பெற்றனர்.

அண்டர் என்பார் முடிந்த முடிபாகிய அறிவின் அறிவெனப்படும் நிலையால் எய்தும் சிவபெருமானின் திருவடிப் பேரின்பப் பெருவாழ்வினை அண்டி அவ்வன்பினை நுகர்வார். எனவே அவர்கள் உவந்துறையும் உலகம் சிவபுரம் எனப்படும். அதுவே ஈண்டு அண்டர் நாடு எனப்பட்டது.

தூசி - கொடிப்படை. பேரணி என்பது பின்னணி, நடுப்படை என்பவற்றைக் குறிக்குமாயினும் பின்னணியாகிய கடைக்கூழைப் படையென்று சொல்லப் படுவதால் ஈண்டு பேரணி என்பது நடுப்படையைக் குறிக்கும் எனலாம்.

ஒண்திறல் யோகியர் :- இம்பராலும் உம்பராலும் இயம்பப்படும். புகழினைத் தருவதற்குக் காரணமாகிய திறல் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்திறல் சித்தர் :- நெறிச் சென்று பூரண அருளைப் பெற்றவர்.

தொண்டர் :- அடியவர் - எது நேரினும் தாம் மேற்கொண்ட தொண்டினையே சாதித்து முடிக்கும் வல்லவர்.

பக்தர் :- அன்பு நெறிகை வரப் பெற்றவர்.

யோகியர் அன்பு நெறிக்குப் புதியவர் ஆதலின் அவர்கள் பிறரால் இழுக்குப் படாதிருக்குமாறு அவர் தமக்கு முன்னர் தொண்டரும், பின்னர் சித்தரும் பத்தரும் ஆகப் புடைசூழ அணிவகுத்துச் செல்லக் கட்டளையிட்டார் போலும்.

அன்பு நெறி முற்றிய பூரண அடிமைகள் ஆவார் தொண்டர் எனப்பட்டனர். பக்தர்களுக்குள்ள கடமை தொண்டராலும், சித்தராலும் புதிய யோகியர்களுக்கும் அவர் தமக்கும் ஊறுவராது காத்தலாகும்.

தொண்டர், சித்தர், யோகியர் ஆகிய அனைவர்க்கும் மேற்பட்டவர் அன்பர் என்பதும் அன்பர்க்குத் தலைவர் அடிகளே என்பதும் ஈண்டு உணர்ந்து கொள்ளத் தக்கதாம்.

## விரதம்

நாம் கடைப்பிடிக்கும் விரதம் ஒவ்வொன்றுக்கும் ஐந்து படிமுறைகள் உண்டு. அவையாவன சங்கற்பம், உபவாசம், சிவவழிபாடு, தீர்த்தமாடுதல், சங்கமர் வழிபாடு என்பனவாம்.

சங்கற்பம்:- குறித்த பலன் வேண்டி இத்தனை ஆண்டுகள் இன்ன வகையில் விரதம் இருப்பேன் என உறுதிகொள்ளல் ஆகும்.

உபவாசம்:- உப என்றால் கிட்ட அல்லது நெருங்கி என்றும் வாசம் என்றால் வசித்தல், இருத்தல் எனப் பொருள்படும். எந்தத் தெய்வத்தை நோக்கி விரதம் இருக்கின்றோமோ அந்தத் தெய்வத்தோடு விரத நாட்களில் நெருங்கியிருத்தல் வேண்டும். ஆலயத்திற்கு சென்று அத்தெய்வத்தைப் பார்த்து தியானம் செய்தல், அத்தெய்வத்திற்குரிய மந்திரங்களைச் செபித்தல், அத்தெய்வத்திற்குரிய திருமுறைப்பாடல்கள், தோத்திரப் பாடல்களை ஓதல் புராணம் படித்தல், கேட்டல் என்பனவாகும். (பட்டினி கிடப்பதை உபவாசம் என கூற முடியாது)

தீர்த்தமாடல்:- விரத காலங்களில் அதிகாலையில் புனித தீர்த்தங்களில் நீராடல், முழுகுதல் இன்றியமையாதது. முழுநாள் பட்டினி கிடந்து, நித்திரை விழித்தால் மறுநாள் அதிகாலையிலும் தீர்த்தமாடுதல் முக்கியமானது.

சிவவழிபாடு:- எந்த விரதத்தைக் கடைப்பிடித்தாலும் சமய தீட்சை பெற்று கர்ம அனுஷ்டானங்களை அதாவது சந்தியாவந்தனங்களை முடித்து சிவாலயம் சென்று சரியைத் தொண்டாற்றி அர்ச்சனை செய்வித்து வழிபாடுகளில் ஈடுபடல் வேண்டும். இயன்றவரை திருமுறைப் பாடல்களை ஓதல் வேண்டும். சிவாலய வழிபாடு இன்றேல் விரதம் விரதமாகாது. பலனும் மிகச் சொற்பமே.

8334(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முருகப்பெருமானின் பதித்துவப் பெருமை மிக்க திருப்பெருவடிவம் பற்றிய கந்தபுராணப்பார்வை

சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர்
கலைமாமணி செஞ்சொற்வேந்தர்
த. குமரன்
BA(Hons) , M.A, PGDE, Dip.in.psy, Dip.in.EM
செயலாளர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

முருகப்பெருமானுடைய தோற்றம் , வீரம் , அருள் என்பவற்றினை தமிழில் கூறும் புராணமாக கந்தபுராணம் அமைகின்றது. காஞ்சிபுரத்துக் குமரகோட்டத்தில் பூசகராக இருந்த கச்சியப்பசிவாச்சாரியாரால் கந்தபுராணம் அருளப்பட்டது.

கந்தபுராணத்தில் உள்ள தத்துவம் எந்தப் புராணத்திலும் இல்லை என்னும் அளவிற்கு உயர் சிறப்புடையது. மற்றைய நூல்கள் இலங்கியங்கள் எல்லாம் பகைவர்கள் அழிக்கப்படுவதாக சுட்டி நிற்க்கின்றது. ஆனால் மாறாக கந்தபுராணம் உயர் தத்துவ நெறியினை போதித்து நிற்கின்றது. முருகன் சூரனை கொல்ல வில்லை சேவலும் மயிலும் ஆக்கிக்கொண்டான். முருகக் கடவுள் கொடிவனை அடியவன் ஆக்கிக் கொண்டார். இது கந்தபுராணம் கூறும் உயர் தத்துவம்

சூரபத்மன் 1008 அண்டங்களையும் அடக்கி ஆண்ட போது அச்சத்தில் தேவர்கள் அவனை வணங்கினார்கள். சுரபத்மன் சேவலும் மயிலும் ஆன பின்பு அண்ட கோடிகளெல்லாம் அன்பினால் அவனை வழிபட்டன. கொடியவனை அடியவன் ஆக்கி அருள் புரிகின்ற தத்துவத்தினை கந்தபுராணம் சுட்டி நிற்கின்றது. . இப்புராணமானது உற்பத்திக்காண்டம் ,அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம், என்னும் ஆறு காண்டங்களையும் 10346 விருத்தப்பாக்களையும் கொண்டமைந்துள்ளது. பதி, பசு. பாசம் இயல்புகளை தெளிவுற விளக்கி நிற்க்கும் நூலாகவும் சைவ சித்தாந்த உண்மைகளினை தெளிவுறுத்துகின்ற வகையிலும் சிறப்புப்பெறுகின்றது.

நன்றி மறத்தலால் வரும் பெரும்கேடு எல்லாவற்றையும் அழிக்கும் என்ற சிறந்த அறக்கருத்தினை கந்தபுராணம் தெளிவுறுத்துகின்றது. நன்றி மறந்தவனைக் கொல்ல கூற்றுவன் வேண்டாம். அவன் மறந்த நன்றியே அவனை அழிக்கும். சிவபெருமான் வழங்கிய எண்ணில்லாத வரங்களையும் பெற்ற சூரபதுமன் அந்த நன்றியை மறந்து சிவகுமாரனுடன் போர் புரிந்தான். சூரபத்மன் தனக்குக்கிடைத்த வாழ்வு தந்த சிவபெருமானுடைய திருக்குமாரனாகிய முருகப்பெருமானை வணங்கி நன்றி பாராட்டாது சிவனும் முருகனும் ஒருவரே என்பதனை ஏற்க்க மறுத்து சிவத்துரோகிகளுடன் சேர்ந்து சிவநிந்தனை புரிந்து அழிவுற்றான் என்பதனை கந்தபுராணம் தெளிவுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகு சிறப்புப்பெறுகின்ற கந்தபுராணத்தில் வருகின்ற யுத்தகாண்டத்தில் முருகப்பெருமானுடைய திருப்பெருவஃடிவம் தெளிவுறுத்தப்படுகின்றது. திருப்பெருவடிவத்தினூடாக முருகப்பெருமானுடைய பரத்துவம் காட்டப்படுகின்றது. சைவ சித்தாந்த தத்துவத்தின் பதியிலக்கணமாக முருகன் போற்றப்படுகின்றான். சிவன் மணி முருகன் ஒலி இரண்டையும் பிரிக்க முடியாது. சிவனே முருகன் முருகனே சிவன் என்பதனை அறியாது சூரன் அழிந்தான். எண்ணில்லாப் பாவம் அந்தப் பாவத்தைச் செய்து சூரபத்மன் அழிந்தான்.

கந்தபுராணத்தில் கச்சியப்பர் காட்டும் முருகன் சிவபிரானின் அம்சம். சிவனுக்குரிய ஆளுமைகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டவன். சிவன் தேவை நிமித்தம் முருகனாக வடிவம் கொண்டான். ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் கொண்ட உயர் பரம்பொருளாக சிவனின் அம்சமாக முருகன் கொள்ளப்படுகின்றான்.

போரிலே சூரனுடைய சேனைகள் எல்லாம் அழிந்தன இறுதியில் அவன் மட்டும் எஞ்சியிருந்தான் சூரன் போர்க்களத்திற்கு சென்று முருகப்பெருமானுடன் போர்புரிந்தான் தந்திரங்கள் பல செய்தான். மாயைகள் கொண்டு பல உருவங்கள் வகுத்தான். பல உருவங்கள் கொண்டு எதிர்த்தான் குமாரக்கடவுளும் சூரனுடன் தொடர்ந்து போராடித்தளர்வுறச் செய்கின்றான். பின்னர் அவனுக்கு உணர்ச்சி கொடுத்து தம் திருப்பெருவடிவத்தை காட்டுகின்றான்.

"உடல்சினமொடு சூரனொருவனாயங்க ணின்றான்
அடல்வலி கொண்டவாளி யந்தர நெறியான் மீண்டு
புடையுறு சரங்களோடு பொள்ளெனத் தூணிபுக்க
சுடர்நெடுந்தனி வேலண்ணல் அவன் முகநோக்கிச் செல்வான்"

சூரபன்மன் சினத்துடன் முருகப்பெருமானுடன் போர் செய்கின்றான் அவனுடைய முகத்தைப் பார்த்து நீ மாய வடிவங்களை எடுத்தாய் அதன் மூலம் என்னுடன் போர் செய்தாய். இனி என்னுடைய பரமேஸ்வர வடிவத்தை காட்டுகின்றேன். என்று முருகப்பெருமான் காணுதற்கரிய பரமேஸ்வர வடிவத்தை சூரனுக்கு காட்டுகின்றார்.

முருகனின் இப் பரமேஸ்வர வடிவம் பிரபஞ்சப்பொருட்கள் அனைத்தையும் கொண்டது. இதனைக்கண்ட சூரன் அதிசயிக்கின்றான். இவ்வடிவமானது பிரம்மா விஷ்ணு தேவர்கள் அனைவராலும் அறிதற்கரிய அனைவருக்கும் மூல காரமாகிய பரமசிவ வடிவமாகும். சிவனே முருகனாக வந்தான் என்பதனை தான் அறியவில்லை என மனம் வருந்துகின்றான்.

"கோலமா மஞ்சை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென்றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்த்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனைவாணவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற மூர்த்தி அன்றோ?.."

என்னும் கந்தபுராணப்பாடல் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. பரமேஸ்வர வடிவத்தின் மொத்த உருவை எக்காலம் சென்றாலும் காணமுடியாது என்னுடைய ஆணவம் கெட்டது. எல்லாப்பொருட்களிலும் இவ்வடிவத்தையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கின்றேன். எனது கால்கள் இவ்வடிவத்தையே வலம்வர விரும்புகின்றன. நாதுதி பாட விரும்புகின்றது. மனம் விரும்பினாலும் என் மானம் இவற்றைச் செய்ய விடவில்லை.என்பதனை சூரன்பன் பின்வருமாறு கூறுகின்றான்.

"சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆளுதல் வேண்டும் தீமை அகன்று நான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே"

என வருகின்றது. முருகனோடு நான் போர் புரிந்தது அவனது திருவிளையாடல்தான். என்னைக் கொல்ல வேண்டும் என அவன் நினைத்தால் யாரும் தடுக்க முடியதாது என்று சூரபத்மன் நினைக்கின்ற போது முருகப்பெருமான் மயில்வாகனத்தில் பாலனாகத் தோன்றி ஞானத்தைக் கொடுக்க முற்படுகின்றார். அவ்வேளையில் சூரன் மாய மரமாகின்றான். இவ்வேளை சூரனது ஆணவத்தை அடக்கி ஞானத்தைக் கொடுக்கின்றான் இச்சந்தர்ப்பத்தில் சூரனுடைய கூற்றினூடாக முருகப்பெருமானது சிறப்பு விளக்கப்படுகின்றது.

"ஒன்றொரு முதல்வனாகி உறை தரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினில் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்று மிப்புகழே நிற்க்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ"

என்பதனூடாக முருகப்பெருமானால் எனது ஆணவம் அடங்கியது. இவ்வுலகின் பயனை அடைந்தேன் முருகப்பெருமானே ஒப்பற்ற முதல்வன் என்பதனை உணர்ந்து கொண்டேன். எடுத்தற்கரிய முருகப்பெருமானுடைய பரமேசுவர வடிவத்தினை கண்டு தரிசித்தது எனது வாழ்வின் கிடைத்தற்கரிய பேறு என எண்ணுகின்றான்.

எனக்கு அகங்காரம் அடங்கி விட்டது. எனக்கு ஞானம் பிறந்துள்ளது. வலது தோளும் வலது கண்ணும் துடித்தன. எல்ல அண்டங்களும் அவற்றிலுள்ள பொருட்கள் அனைத்தும் வெளிப்படுவதற்க்கு இடமாகிய தேவ நாயகராம் முருகவேளின் திருப்பெருவடிவத்தை தரிசிக்கும் பேறு பெற்றேன். இது நான் முன்பு செய்த தவத்தின் பயனேயாகும் என்கின்றான் சூரன்

பதித்துவப்பெருமை மிக்க முருகன் கொண்ட இவ் விசுவரூபத்தின் அடி முதல் முடி வரையுள்ள அங்கங்களை எத்தகைய நுட்பமாகப் பலகாலம் பார்த்தாலும் கண்பார்வையால் முழுமையாகக் காணமுடியாது. மனத்தாலும் முழுமையாகக் காண முடியாது. அத்தகைய பெரியோன் என்னுடன் போரிட வந்தது. என் மீது வைத்த கருணை என்று சூரபன்மன் கூறுகின்றான்.

கந்தபுராணத்திலே சுட்டப்படும் முருகப்பெருமானுடைய திருப் பெருவடிவத்தின் சிறப்பினை கச்சியப்பர் சிவாச்சாரியாருடைய பாடல்கள் மூலம் தெளிவுற அறிந்து கொள்கின்றோம்.

பதியாகிய முருகப்பெருமான் மேலானவன் அவனை மீறி நான் எனது என்ற அகங்கார மமகாரம் கொண்டால் இறுதியில் பதியால் அடக்கப்படும் என்னும் சிந்தனையை திருப்பெருவடிவம் உணர்த்தி நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவார் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா வருள் பெற்றுய்ந்தான்."

எனும் கந்தபுராணப் பாடலின் ஊடாக பெரிய பாவிகள் எனினும் முருகப் பெருமானின் திருச்சந்நிதியை அடைந்தால் பாவநீக்கம் பெற்று வீடு பேறு எய்துவர் என்பது ஆராய வேண்டிய தொன்றல்ல.

ஏனெனில் பெரிய தீச் செயலான போர்த்தொழிலை இந்நாட்களில் செய்த சூரபன்மனும் முருகப்பெருமானது திருவருட்பேறெய்தி உய்வடைந்தான் என அறிந்து கொள்ள முடிகின்றது.

எனவே கந்தபுராணம் காட்டுகின்ற முருகப்பெருமானுடைய போற்றுதற்கரிய பரமேசுவர வடிவத்தின் சிறப்பினை நாம் அறிந்து போற்றி வழிபாடாற்றி இம்மை மறுமைப் பயன்களை அடைந்து கொள்வோமாக.

சங்கமர் வழிபாடு:- சங்கமர் என்றால் சிவனடியார் கூட்டமாகும். விரத காலத்தில் உணவு உண்ணும் போது வேறு ஒரு சிவனடியாருக்காவது உணவு கொடுத்து உண்ணல் வேண்டும். "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி..." என்பது திருமந்திரம்.

பட்டினி இருத்தல் என்பது விரத நாட்களில் எதுவித உணவும் அருந்தாது 24 மணித்தியாலமும் உண்ணாது இருப்பதாகும். மேலும் பட்டினி இருக்கும் விரத நாளுக்கு முதன் நாள் மதியம் மட்டும் உணவு உண்ணல் வேண்டும். விரத தினத்திற்கு அடுத்தநாள் காலை 8.30மணிக்கு முன் உணவு உண்ணல் வேண்டும். இது பாறணை எனப்படும்.

சந்தியாவந்தனம்:- சூரியன் உதிக்க சந்திரன் விலகும் காலை சூரியன் மறைய சந்திரன் உதிக்கும் மாலை, காலையும் மாலையும் சந்திக்கும் நண்பகல் 12.00மணி பிரம்ம முகூர்த்தம் என்பன ஒரு நாளில் வரும் மூன்று சந்திகள் ஆகும். சைவசமய தீட்சை பெற்றவர்கள் இச்சந்திகளில் அதற்குரிய வழிபாடுகளைத் தினமும் செய்தல் வேண்டும். சூரியன் சிவனின் இருப்பிடம். சந்திரன் சக்தியின் இருப்பிடம் ஆகும். மேலும் சம்ஸ் என்ற வடமொழிச் சொல் நல்லதாக்குவது எனப் பொருள்படும். எனவே சந்தியாவந்தனம் செய்பவர்களை அது நல்லதாக்கும்.

ஆசமனம்:- வலது கையின் நடுவிரல் சுட்டுவிரல்களை மடக்கி பெருவிரலினால் அவ்விரல்களை அமத்தி உள்ளங்கையில் உழுந்து அளவு தண்ணீர் விட்டு ஆத்ம தத்துவாய சுவத, என்று அத்தண்ணீரை கைப் பெருவிரல் அடியால் குடித்தல் வேண்டும். இதேபோல் வித்தியா தத்துவாய சுவத, சிவதத்துவாய சுவத என்றும் மூன்று முறை தண்ணீரை உறிஞ்சிக் குடித்துவிட்டு அஸ்த்திராயபட் என்ற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு வலது கை பெருவிரல் அடியால் வாய் அகரங்களை வலமிருந்து இடமாக இரண்டு தரமுமம் உள்ளங்கை அடிப்புறத்தால் மேலிருந்து கீழாக ஒரு தரமும் கைகழுவுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வேற்றுமை பற்றிய தொல்காப்பியர் கருத்துக்கள் - சுருக்கத் தொகுப்பு

சைவப்புலவர் காலநிதி சா.தில்லைநாதன் Ph.D.
உப தலைவர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்.

வேற்றுமை எனப்படுவது செயற்படுபொருள் முதலாக பெயர்ப்பொருளை வேறுபடுத்திக் காட்டுவதாகும். வேற்றுமை வகைகளைக் கூறவந்த தொல்காப்பியர் முதலில் முன்னோர் கருத்தினைக் கூறிப் பின்னர் தனது கருத்தினைக் கூறினார். "வேற்றுமை தாமே ஏழென மொழிப..." மொழிப என்பதற்கு "முன்னோர் சொல்வர்" என்பது பொருள். வேற்றுமைகளை ஏழென்று முன்னோர் கூறுவர் எனக் கூறிய தொல்காப்பியர் பின்பு "விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" எனத் தனது கருத்தை நிறுவினார். விளிகொள்வதன் கண்ணதாகிய விளியோடு தலைப் பெய்ய வேற்றுமை எட்டெனத் தொல்காப்பியர் தந்துணிபுரைத்தார். இதனைச் சேனாவரையர் "பிறர்மதங் கூறி இச்சூத்திரத்தால் தந்துணிபுரைத்தார்" எனக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் மூன்று இயல்களில் வேற்றுமைகளைப் பற்றி நன்கு புலப்படக் கூறியுள்ளார். அவற்றுள் தொல்காப்பியர் விளியைப் பற்றித் தனியே ஒரு இயலை அமைத்துள்ளார். தொல்காப்பியர் வேற்றுமையைச் சொல்லும் போது ஏழென்றும் விளியென்றும் பிரித்துக் கூறுகிறார். எழுவாய் வேற்றுமை முதலான ஏழு வேற்றுமைகளும் ஒரு வகை, விளி வேற்றுமை தனிவகை என்பது தொல்காப்பியரது கருத்தாகும். எட்டெனப்பட்ட வேற்றுமையாவன பெயர் ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்பன.

## முதலாம் வேற்றுமை

செயப்படுபொருள் முதலானவற்றின் வேறுபடுத்தி பொருண்மாத்திரம் உணர்த்தலின் எழுவாயும் வேற்றுமையாயிற்று. "எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே" (தொல்.வேற்.4) என்கிறார் தொல்காப்பியர். பெயர் தோன்றிய நிற்கும் நிலையாவது உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றலோடு தொகாது நிற்கும் நிலையென்பார் சேனாவரையர் "பெயர் தோன்றிய துணையாய் என்பார். உருபேற்றல் பெயர் வருமொழியோடு சேர்ந்து தொக்கு வேற்றுமைத் தொகையாகி வருதல் என்பவற்றை விளக்குதற் பொருட்டே அவ்வாறு உரை கூறினார்.

நன்னூலார் வினை பெயர் வினாக் கொள வருதல் எனச் சுட்டுவது ஏலவே தொல்காப்பியர் பொருண்மை சுட்டல் வியங்கொள வரதல் வினைநிலை உரைத்தல் வினாவிற்கேற்றல் பண்புகொள வருதல் பெயர் கொள வருதல் முதலாக அறுவகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக் கூறியுள்ளார். அதாவது பொருளின் உண்மைத் தன்மையைக் கூறல், ஏவுதலைக் கொள்ள வருதல், வினைநிலை உணரைத்தல், வினாப்பொருளோடு தொடர்தல், பண்பு கொள வருதல், பெயரினைக் கொண்டு முடிதல் என்பவற்றைக் கொண்டு முடியும் என்பார். தொல்காப்பியர் கூறிய ஆறினையும் நன்னூலார் கூறிய மூன்றனுள் அடக்கலாம் என்பர் பின்வந்த இலக்கணகாரர்.

இரு பெயர்கள் ஒட்டிவந்து பயனிலை கொள்வதையும் தொல்காப்பியர் முதலாம் வேற்றுமைக்கு உரியது என்கிறார். யானை கிடந்தது என்று ஒரு பெயர் மட்டுமல்லாமல் யானைக்கோடு கிடந்தது என இருபெயரொட்டி எழுவாயாக வருதலையே அவர் குறிப்பிட்டுள்ளார் என்பார் செந்தமிழ் இலக்கண விளக்க ஆசிரியர். பெயர்ச்சொல் பயனிலை கொள்ளும் போது அது எழுவாய் ஆகிறது.

## இரண்டாம் வேற்றுமை

"இரண்டாகுவதே
யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக் குறிப்பு
அவ்விரு முதலில் தோன்றும் அதுவே" (தொல்.66)

என்கிறார் தொல்காப்பியர்.

வேற்றுமைச் சொல் எங்கு வரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டும் இடத்துத் தோன்றுமவை பொருளாக வரும் என்பது அதன் பொருள்.

இரண்டாம் வேற்றுமைப் பொருள் செயப்படு பொருளாய் வரும் என்பர் இலக்கண ஆசிரியர்கள். தொல்காப்பியர் காப்பின், ஒப்பின், ஊர்தியின், இழையின், புகழின், பழியின் என்பன முதலாக சிதைப்பின் ஈறாக இருபத்தெட்டினை எண்ணி அவை போன்ற பிறவும், அந்தச் செயப்படு பொருள் மேல் வருகின்ற எல்லாச் சொல்லும் என்றுங் கூறியுள்ளார். இவைகள் செயப்படுபொருள் என்னும் ஒன்றினுள் அமைவுறும். இயற்றப்படுவதும் வேறுபடுத்தப்படுவதும் எய்தப்படுவதுமெனச் செயப்படுபொருள் மூன்று வகையென எடுத்தோதிய சேனாவரையர், தொல் காப்பியர் கூறிய இருபத்தெட்டும் தான் கூறிய மூன்றினதும் விரிவே என்கிறார். இயற்றப்படுதலாவது முன்னில்லதனை உண்டாக்குதல். வேறுபடுத்தலாவது முன்னில்லாததனை திரித்தல். ஏய்தப்படுதலாவது இயற்றுதலும் வேறு படுத்தலுமின்றி தொழிற் பயனுறுந் துணையாய் நிற்றலையுங் குறிக்கும். பின் தொடரும் வினைச் சொற்களால் நிலைமொழி செயப்படுபொருள் உணர்த்தும் சொல்லாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் வேற்றுமை

தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமையை ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி என்றார். அது வினை முதலுங் (கருத்தா) கருவியுமாகிய இரண்டு பொருளையும் பொருளாக உடையதெனவும் அவர் கூறுவார். ஆனால் உரையாசிரியர்கள் ஆன் உருபையுந் தழுவி அவ்வேற்றுமைக்கு ஒடு, ஆன் என்ற உருபுகளை உரிமையாக்குவர். சேனாவரையர் வினை முதலுக்குங் கருவிக்கும் ஒடுவுருபு இக்காலத்தில் அருகி அல்லது வராது எனக் கூறுதலின் மூன்றாம் வேற்றுமைக்கு ஆல் உருபும் ஆன் உருபுமே இக்காலத்தில் பெரிதும் பயன்படுத்தப்ப படுகிறது என்பது புலனாகும். தொல்காப்பியர் ஒடுவெனப் பெரிய வேற்றுமை என்றதனால் ஒடுவுருபே அவர் காலத்தில் மூன்றாம் வேற்றுமைக்கு வழக்கில் இருந்துள்ளது என்பது நன்கு புலனாகிறது. மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பார் நன்னூலார்.

தொல்காப்பியர் “ஒரு வினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே” (தொல்.வேற்.மய8) என்று கூறியுள்ளார். ஒடு உருபு பயன்படுமிடத்து உயர்ந்த பொருளை முன் வைத்தும் அதனிலும் தாழ்ந்த பொருளைப் பின் வைத்தும் கூறுதல் வழமையாகும். தந்தை, மகன் என்ற இருவரிலும் தந்தை உயர்தவனாதலால் தந்தையை முன்வைத்து தந்தையொடு மகன் வந்தான் எனத் தந்தையை முன்வைத்துச் சொல்லுதல் மரபு. நாயொடு வந்தான் என தாழ்ந்த பொருள் முன்வைத்துச் சொல்லுவதும் வழக்கு. இதனை எடுத்துக்காட்டி வேட்டைக்கு நாய் சிறந்ததால் நாய் முன் வைக்கப்பட்டதாக இலக்கணகாரர் விளக்கம் கூறுவர்.

தொல்காப்பியர் “அதனினியறல் அதற்றகு கிளவி” (தொல்.வேற் 12) என வருஞ் சூத்திரத்தில் மூன்றாம் வேற்றுமைப் பொருளை நன்கு பாகுபடுத்தி விரித்துள்ளார்.

## நான்காம் வேற்றுமை

தொல்காப்பியர்,

> “நான்கா குவதே
> கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே” (தொல்.வேற் 14)

நான்காம் வேற்றுமைக்கு உருபு “கு” என்பது, இலக்கண ஆசிரியர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. “எப்பொருளாயினும் கொள்ளுமதுவே” எனக் கூறுந் தொல்காப்பியர் கோடற் பொருளையே நான்காம் வேற்றுமைக்குரிய சிறப்புப் பொருளெனக் கூறுவார். அவர் மேலும் அப்பொருளின் பாகுபாடுகளையும் கூறியுள்ளார். எப்பொருளையும் கொள்ளும் என்பதற்குக் கொடைப் பொருள் என்று உரையாசிரியர்கள் மொழிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் வேற்றுமை

தொல்காப்பியர்,

"ஐந்தாகுவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே"

எனக் கூறுவார் தொல்காப்பியர், "இதனின் இற்று இது" எனும் அமைப்பாலேயே இவ் வேற்றமையின் பொருள் அமைகிறது என்பர். இதனின் இற்று என்று அமையும் தொடரால் பெறப்படும் பொருள்களே இதன் பொருள்களாகும். அது இப்பொருள் இத்தன்மையுடையது இப்பொருளென்னும் பொருண்மையை உணர்த்தும் என்பர். அதன் பொருண்மையானது பொருவும் எல்லையும் நீக்கமும் ஏதுவுமென நான்காம்.

தொல்காப்பியர் "இன்" என்பதே ஐந்தாம் வேற்றுமை உருபு என்கிறார். அவர் ஐந்தாம் வேற்றுமைப் பொருளை விரித்துக் கூறுமிடத்து வண்ணம், வடிவு, அளவு, சுவை, தன்மை, வெம்மை, அச்சம் முதலாக இருபத்தெட்டுப் பொருளில் வருமெனக் கூறி அதன் மேலும் அன்ன பிறவும் எனக்கூறி அவை போன்ற பிறவற்றையுங் கொள்க எனச் சுட்டினார்.

## ஆறாம் வேற்றுமை

தொல்காப்பியர்,

"ஆறாகுவதே - அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி"

(தொல்.வேற்.மய 15) என்பார். ஆறாவது வேற்றுமை அது வென்னும் வேற்றுமைச் சொல்லால் வருவதென்பது அச்சூத்திரப் பொருள். அவர் தன்னினும் பிறிதினும் இதனது இதுவென வருதலே அவ்வேற்றுமையின் இயல்பெனக் குறிப்பிடுகின்றார்.

தன்னினும் பிறிதினும் என்பதைத் தற்கிழமை பிறிதின்கிழமைகளில் உரையாசிரியர்கள் அடக்குவர். ஆறாம் வேற்றுமை தன்னான் வந்த தற்கிழமையும் பிறிதான் வந்த பிறிதின்கிழமையும் என இரண்டு கிழமைப் பொருள்களில் வருமெனவும் உரையாசிரியர்கள் விரித்துரைப்பர்.

தொல்காப்பியர் ஆறாம் வேற்றுமைப் பொருளை இயற்கை முதலாக வாழ்த்தி இறுதியாக குறிப்பிட்டனவும் திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப் பொருட்கண் தோன்றுஞ் சொல்லெல்லாம் இவ்வேற்றமைப் பாற்பட்டதே என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் வேற்றுமை

தொல்காப்பியர்,

"ஏழாகுவதே
கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்திற் காலத்தின்
அனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே" (தொல்.81) என்பார். அஃது வினை செய்யிடம், நிலம், காலம் ஆகிய இடப்பொருள்களின் அடிப்படையில் வருமெனக் கூறுவார். அவர் "கண்" என்னும் உருபே ஏழாம் வேற்றுமைக்கு உரியதென்பர். தட்டுப் புடைக்கண் வந்தான், மாடத்தின் கண் இருந்தான் எனச் சேனாவரையர் காட்டுவார். "கண், கால், புறம், அகம்... அன்ன பிறவும்" (தொல்.சூத். 81) "இவை வேற்றுமை உருபுகள் அல்ல, அண்மைச் சொற்களேயாகும்" எனச் சேனாவரையர் உரை செய்வார். நன்னூலார் இவற்றை உருபுகளாகக் கூறுவார்.

## விளி வேற்றுமை

இவ்வேற்றுமையை எட்டாம் வேற்றுமை எனவுஞ் சொல்வர். விளி என்றதனால் அஃது பெயருமன்று பெயரின் வேறுமன்று. விளி வேற்றுமையாவது திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறுதி என்பதாகும். விளிக்கும் பொழுது ஏற்படும் அசை அழுத்தத்தால் ஈடு ஒழிதலும் ஈற்றில் உயிர் அமைதலும் அயல் நீடலும் இயல்பு. இது எழுவாயைப் போல் வேற்றுமை உருபேற்பதில்லை.

படர்க்கைப் பெயர்களே விளி உருபேற்கத் தகுதியுடையனவாயினும் அவற்றுள்ளுஞ் சில விளி உருபேற்பதில்லை. விளி உருபோற் படர்க்கைப் பெயர்களையும் தொல்காப்பியரும் நன்னூலாரும் எடுத்துக் காட்டியுள்ளனர். வினாப் பெயர்கள், சுட்டுப்பெயர்கள், யான், யாம் முதலிய தன்மைப் பெயர்கள், நீர் முதலான முன்னிலைப் பெயர்கள், தூ, வை என்பவற்றை இறுதியாகக் கொண்ட அஃறிணை இருபாற் பெயர்கள், தான், தாம் என்பனவும் இவை போல்வன பிறவும் விளிக்கப்படா என்று கூறுவர்.

## முடிவுரை

இங்ஙனம் தொல்காப்பியர் தன் அறிவின் வன்மையால் வேற்றுமைப் பொருள்களைத் தனிச் சொற்களைக் கொண்டும், வாய்ப்பாடுகளைக் கொண்டும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காட்டியுள்ளார். அவரது வேற்றுமை பற்றிய அறிவியல் சார்ந்த கருத்துக்கள் பிற்கால ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வேதங்கள் ஓர் அறிமுகம்

சைவப்புலவர்மணி
கலாபூஷணம், சைவசித்தாந்த பண்டிதர்
சைவப்புலவர் அருணாசலம் பரசுராமன்
உபதலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

வேதங்கள் சைவத்தின் முதனூல்கள். இவை வடமொழியில் உள்ளன. மனித அறிவுக்கு எட்டாத உயர்ந்த உண்மைகளைக் கூறுவதால் "வேதம்" எனவும், உயர்ந்த தத்துவங்களைத் தெரிவிப்பதால் "மறை" எனவும், மனிதனால் ஆக்கப்படாததால் "அபௌரு சேயம்" எனவும், பல காலமாக செவி வழியாகக் கேட்கப்பட்டு வந்தமையால் "சுருதி" எனவும், எழுதப்படாமலிருந்ததால் "எழுதாக் கிழவி" எனவும் பெயர் பெறும்.

வேதங்கள் பழமையானது. அவை இறைவனால் ஆக்கப்பட்டவை. அவைகளை முனிவர்கள் அவர்பாற் கேட்டு உலகுக்கு வழங்கினர். "வேதம் நான்கும் பதினெட்டொடும் விரித்தார்" என்பது திருஞானசம்பந்தரின் அருள்வாக்கு.

இவை இருக்கு, யசூர், சாமம், அதர்வம் என நான்காகும். ஒவ்வொரு வேதமும் தனித்தனி சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்னும் பகுதிகளை உடையன. இவை ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றியவை.

ஆதிகால மக்கள் இயற்கைச் சக்திகளையே தெய்வமாக வணங்கினர். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு சக்திகள் இருப்பதாக அவர்கள் எண்ணினர். காலப்போக்கில் அவைகளுக்கு மூலகாரணமான ஒரு பொருள் உண்டு எனவும், இயற்கைச் சக்திகள் ஒவ்வொரு பொருளின் கூறுகளே எனவும் அவர்கள் உணர்த்தினர்.

வேதங்களின் அருளைப் பெறுவதனால் இம்மைப் பயனையும், மறுமைப் பயனையும் பெறலாமென மக்கள் நம்பினர். வேதங்களிலுள்ள பாடல்களின் சொற்கள் சக்தி வாய்ந்தமையினால் அவை மந்திரங்களாகக் கொள்ளப்பட்டன. வேதங்களின் பாடல்களை ஒழுங்குபட அமைத்துக் கூறுவன சங்கிதைகள் எனப்படும்.

வேதங்களுக்கு ஆறு அங்கங்கள் உண்டென பின்னெழுந்த உபநிடதங்கள் கூறுகின்றன. இவை "வேதாங்கங்கள்" என அழைப்பர். சிட்டை, கல்பம், வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம் என்பன அவையாகும்.

### இருக்கு வேதம்

வேதங்களுள் பழமையானதும், முதன்மையானதும் இருக்கு வேதமாகும். உலகின் பழைய சிறந்த இலக்கியமும் இதுவாகும். இந்திரன், அக்கினி, சூரியன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரன், வருணன், உசஸ் ஆகிய தெய்வங்களின் பெயர்கள் இதில் இடம் பெறுகின்றன. இருக்கு வேதப்பாடல்கள் தெய்வங்களை அழைத்தல், துதித்தல், வேண்டல் ஆகிய பகுதிகளையுடையன. தெய்வங்களை முன்னிலைப்படுத்தி அழைத்தல் ஒரு கிரியையாக அமைகின்றது. இருக்கு வேதம் கிரியையின் தொடக்க நிலையாகவும், பக்தி நிலையின் ஆரம்ப இடமாகவும் விளங்குகின்றது. இருக்கு வேதம் கடவுளை இயற்கையிலும், இயற்கைக்கு அப்பாலும் வைத்து வழிபடுகின்றது. மந்திரங்களின் தோற்றத்திற்கும், இருக்கு வேதமே மூலமாகும். இருக்கு வேதம் எடுத்துக்கூறும் வழிபாட்டை இயற்கை வழிபாடு எனக் கூறுவர். நீர், நிலம், தீ, காற்று, விண், சூரியன், சந்திரன், விடியற்பொழுது முதலிய இயற்கைக் கூறுகளை வேதகால மக்கள் வழிபட்டு வந்தனர்.

இருக்கு வேத ஆரம்பகால பாடல்களிலும், ஒரு தெய்வக் கோட்பாடு காணப்படவில்லை. இருக்கு வேதத்திற்குச் சிறப்பாக எடுத்துக்கூறும் அதே பண்புகள் வேறு தெய்வத்திற்கும் உரியனவாகக் கூறப்படுகின்றன. இருக்கு வேதம் பல தெய்வ வழிபாட்டை ஆதரித்துக் காணப்பட்ட போதிலும் எல்லாம் ஒரு பொருளின் வேறு வேறு தோற்றங்கள் என்பதை பத்தாம் மண்டல சுலோகம் குறிப்பிடுகின்றது. ஒன்றுதான் உளது. அறிஞர்கள் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றனர், என்பது அச்சுலோகம் தரும் செய்தியாகும்.

## யசூர் வேதம்

இருக்கு வேத வழிபாட்டு முறையை விரித்தும் ஒழுங்குபடுத்தியும் கூறுவது "யசூர் வேதம்". யசூர் வேதமுறை புதியதோர் அம்சமாக அமைகிறது. தெய்வங்களை மேலும் பிரீதிப் படுத்துவதற்காக வேள்வி செய்து வழிபடும் முறையையே இது கூறுகிறது. வேள்வி வேட்டு வழிபடும் முறைமையை விளக்குவதற்காகவே "யசூர் வேதம்" அமைந்துள்ளது. தெய்வங்களைப் பிரீதிப்படுத்தி உலகுக்கு நன்மைகளை உண்டாக்குவதே வேள்வியின் நோக்கமாகும். மந்திரங்களை ஓதுவதால் உள்ளமும், இடமும் தூய்மை அடைகின்றது.

சிவபெருமானின் பெருமையைக் கூறும் "ஸ்ரீருத்திரம்" யசூர் வேதத்தில் இடம் பெறுகிறது. பஞ்சாட்சர மந்திரமும், பிரணவ மந்திரமும் ஸ்ரீருத்திர மந்திரங்களுக்குள் உள்ளன. யசூர் வேதம் உரைநடையிலுள்ளது. இதில் தெய்வங்களுக்குப் பல பெயர்கள் கூறப்படுகின்றன. இவை பின்னர் அஷ்டோத்திரசதநாம, அஷ்டோத்திரசகஸ்ரநாம அர்ச்சனை முதலியவை தோன்றுவதற்கு வழியாய் அமைந்துள்ளது.

பிற்காலத்தில் தென்னாட்டுக் கோயில்களில் அர்ச்சனை வழிபாடுகள் வளர்ச்சியடைய சதருத்திரிய பகுதியே முன்னோடியாக அமைந்துள்ளது எனலாம். அஷ்டதோத்திரசதநாம வழிபாடு (108), அஷ்டதோத்திரசகஸ்ரநாம உச்சாடனம் (1008), திரிசதி (300) அர்ச்சனை முறைகள் தெய்வங்கள் மீது எழுந்த நாமாவளிகள் வழிபாட்டில் செல்வாக்கைப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம வேதம்

வேதத்தில் இசை வரலாறுகளை விளக்குவது "சாமவேதமாகும்". "சாமம்" என்ற சொல் இசை கலந்த பாட்டைக் குறிக்கும். இவை வேள்வி முறையிலே பயன்படுத்தப்பட்டன. சாம சங்கிதைகளில் கௌதம சாம சங்கிதை பிரசித்தி பெற்றது. இதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. இவற்றை "ஆர்ச்சிகம்", "உத்தராச்சிகம்" என அழைப்பர். இவ்விரு பகுதிகளும் இசை அறிவைப் பெருக்குதலை தனி நோக்கமாக உடையவை. இவற்றை ஓதுதற்கு உரிமையுள்ளவர்களைச் "சாம உத்காதர்" என அழைக்கின்றது.

"ஆர்ச்சிகம்" என்பது பாட்டுக்களின் முதல் தொகுதி எனப் பொருள்படும். உத்காதாவகப் பயிற்சி பெறுவர். முதன் முதலாக இராகங்களைப்பாடும் அறிவைப் பெறுதல் வேண்டும். இதற்குத் துணை புரிவது ஆர்ச்சிகம் ஆகும். இதில் 585 தனிப்பாடல்கள் உள்ளன. இவற்றிற்குப் பல வகையான இசைகள் இருக்கின்றன. இருக்கு வேத பாட்டுக் கருவை கொண்டமைந்த தொகுதியே ஆர்ச்சிக இசைப் பாடல்களாகும்.

"உத்தரார்ச்சிகம்" என்பது பாட்டுக்களின் பின் தொகுதி என்பது பொருளாகும். ஆர்ச்சிகத்தை அறிந்த பின்னர் அதைப் போற்றிக் கூறும் பாட்டுக்கள் அனைத்தையும் மனனம் செய்தல் முறை. வேள்விகளில் பயன்படும் பாடல்கள் உத்தரார்ச்சிகத்தில் அடங்கியுள்ளன. இதில் 400 பாடல்கள் உள்ளன.

## அதர்வ வேதம் (அதர்வண வேதம்)

அதர்வண வேதத்திற்கு அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ், பிரமவேதம் எனும் பல பெயர்களும் உண்டு. காலத்தின் அருமை, பிரமச்சரியம், செல்வத்தைப் பெருக்கல், பூமிவிருத்தி, போர்முறை, நோய் நீக்கம், தீமை விலகல், வயப்படுத்தல் முதலியவைகளைப் பற்றிக் கூறுவது.

அதர்வண வேதம் மாந்திரிக நூலாகவே அமைந்துள்ளது. இவ்வேதம் கூறும் கிரியை, மாந்திரியமாகவே உள்ளது. ஆரம்பத்தில் தீமை பயக்கக் கூடிய காரியங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தன. பின்னர் இது நன்மையான காரியங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவ்வேதத்திலுள்ள மந்திரங்கள் பெரும் சக்தி வாய்ந்தவை. சில நோய் நீக்கக் கூடியவை.

சில நீண்ட வாழ்வை அளிப்பன. சில பிரிந்த குடும்பங்களை ஒன்றிணைப்பன. சில பகைவரை அழித்து அரசருக்கு வெற்றியையும் புகழையும் கொடுப்பவை. இவ்வேதம் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும், கிரியைகளையும், மந்திரங்களின் பிரயோகங்களையும் உயர்ந்த கருத்துக்களையும் விரிவாகக் கூறுகிறது. மந்திர சக்தியின் பயனை உணரவும் இவ் வேதம் உதவுகிறது. இவ் வேதம் செய்யுள் நடையிலும், உரை நடையிலும் எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதசங்கிதைகளின் விளக்கமே **பிராமணங்கள்**. இவை உரைநடையில் உள்ளன. ஆரணியகங்கள் வானப்பிரத்த நிலையில் காடுகளில் தனித்தனி தங்கி வழிபாடு செய்வதற்காக அமைந்தவை. இவை பிராமணங்கள் கூறும் நிலைக்கும் உபநிடதம் கூறும் நிலைக்கும் இடைப்பட்ட நிலையைக் கூறுகின்றன. **உபநிடதங்களில்** உயர்ந்த ஞானம் முக்கிய இடம் பெறுகிறது. இவை இதனையே வலியுறுத்துகின்றன. கிரியைகளும், வேள்விகளும் இவைகளில் இல்லை. ஞானமே வேள்வியாகின்றது. தவம் செய்தலே கிரியை. பிரமம் என்னும் பெயர் முதன்மை பெறுகிறது.

ஆகம வழிபாடுகளின் விரிவுக்கு வேதங்களின் வழிபாடு துணையாகின எனலாம். வேதங்களின் பெருமைகளைத் தெய்வத்தமிழ் திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும் நன்கு உணர்த்துகின்றன. வேதங்களுக்கு, தரும சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், வேத அங்கங்கள், வேததரிசனங்கள், உபவேதங்கள் என்பன துணை நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

இதிகாசங்கள் வரலாற்றுக்கு முந்திய அரசர்களின் வரலாறுகளையும், வேதங்களின் முறைப்படியான வாழ்க்கை முறைகளையும் கூறுவனவாம். புராணங்களும் இதிகாசங்களும் வேத கிரியைகளினதும், வழிபாடுகளினதும் வளர்ச்சி நிலையை உணர்த்துகின்றன எனலாம்.

## மந்திரம்

ஒரு மந்திரத்தில் 3 பகுதிகள் உண்டு. முதலில் பீஜ மந்திரங்களும் மத்தியில் தெய்வத்தின் நாமம் அல்லது மகத்துவம் உணர்த்தும் சொல்லும் பிற்பகுதியில் யசூர் வேதம் கூறும் சப்தகோடி மகாமந்திரத்தில் ஒன்றும் காணப்படும்.

உதாரணமாக ஓம் ஐம் ஹ்றீம் ஸ்ரீம் தெட்சணாமூர்த்தி மனோஜ்ஞாயை நமோ நம(க) என்பதில் முதலில் ஓம் பிரணவம் இதுவும் பீஜம்தான், ஐம் ஹ்றீம் ஸ்ரீம் என்பது பீய மந்திரங்களே. தெட்சணாமூர்த்தி மனோஜ்ஞாயை என்பது சக்தியின் மகத்துவத்தைக் குறிக்கும். நமோ நம(க) என்பது சப்தகோடி (முடிவு) மந்திரம்.

யசூர் வேதம் குறிப்பிடும் சப்தகோடி மகாமந்திரங்கள்:- சப்த என்றால் ஏழு, கோடி என்றால் பின்பக்கம் என்பதாகும். யசூர் வேதத்தில் இவை காணப்படுகின் றது. அவவையாவன நம, ஸ்வாஹ, ஸ்வதா, வௌஷட், வஷட், பட், ஹூம்பட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவன் எலும்பு மாலை சுடலைச் சாம்பல் போன்றன அணிவதேன்?

## கந்தபுராணத்தில் ததீசி முனிவரின்விளக்கம்

சைவசித்தாந்த பண்டிதர், வித்துவ சிரோமணி,
சைவப்புலவர். செ.கந்த சத்தியதாசன் M.A.
தேர்வுச் செயலாளர்
ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்

சிவன் எலும்பு மாலை, சுடலைச் சாம்பல் போன்றன அணிவதேன்?

பிரமதேவர் செய்த யாகத்தில் மகன் தக்கன் சிவனுக்குக் கொடுத்த அவிப்பாகத்தை தடுத்தான். நந்தி தேவர் அந்நேரம் வந்து சாபமிட்டார். இதற்கும் பயப்படாமல் சிவனுக்கு அவிப்பாகம் கொடாது தக்கன் யாகம் செய்யத் தொடங்கினான். தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் வந்த வேளையில் ததீசி முனிவரும் அந்த யாகசாலையில் வந்து உரையாடினார். "தக்கனே தேவர்களுக்குக் கொடுக்கும் அவிப்பாகத்தை ஏற்றுக் கொள்பவரும் அக்கினிக்கு முதல்வரும் யாகாதிபரும், யாகரட்சகரும், சிவபெருமானே" என அறிவுரை கூறினார். மேலும் "சிவன் அநாதி மல முத்தன், பிரம விஷ்ணுக்களுக்கு செல்வங்களைக் கொடுத்தவர். எல்லோருக்கும் மூலகாரணர். தனக்கு மூலகாரணம் இல்லாதவர். சிவனைத் தேவ தேவன், மகாதேவன், ஈசன், நாயகன், மும்மூர்த்திகளுக்கும் முதல்வன், சர்வ அந்தர்யாமி, ஆதி" எனப் பல பெயர்களால் வேதங்கள் துதிக்கின்றன. "நீயோ சிவனைக் கடவுள் என ஏற்காது பிறகடவுள் என ஏற்றால் உனது அம்மா, அப்பாவை விட்டு வேறொரு தாய் தந்தையரை அம்மா, அப்பா என்று ஏற்றுக் கொள்வது பெரிய தப்பாகுமல்லவா? பிரமா, விஷ்ணு முதலிய தேவர்கள் பசுக்களே. சிவபெருமான் ஒருவரே பதி. எனவே பரமசிவனை இகழாதே" என ததீசி முனிவர் கூறியபோது தக்கனோ "சிருஷ்டி, திதிகளைச் செய்யும் பிரம, விஷ்ணுக்களை விட அழித்தலைச் செய்யும் உருத்திரன் முழுமுதற் கடவுள் என்பது எப்படிப் பொருந்தும்" என்றான்.

"ஆதியந்தமில்லா சிவபெருமான் அநாதியே ஆணவ மலத்தாற் கட்டுண்ட ஆன்மாக்களுடைய வினைகளை நீக்க வேண்டும் எனும் கருணையினால் தனது சிவசிற்சக்தி கொண்டு காலம் முதலிய தத்துவங்கள் வாயிலாக உயிர்களின் "இச்சா, ஞானா கிரியைகளை விளக்கி பிரமா, விஷ்ணுக்களை உண்டாக்கி அவரவர்களுக்கேற்ற சிருஷ்டி, திதி தொழில்களைக் கொடுத்து அவற்றை நடத்தும் முறைகளையும் உபதேசித்து சர்வகாரத் தொழிலைச் செய்யும் உருத்திரனாக தான் மிளிர்கிறார்". மேலும் திவ்வியப் பரப்பிரம்ம மகா உருத்திரருக்கும் அவர் குமாரர்களுக்கும் அவரைத் தியானிப்பவர்களுக்கும் அவர் திருமேனியைத் தரித்த காலக்னி உருத்திரர்களுக்கும் அக்கினி தேவனுக்கும் உருத்திரன் எனும் நாமம் பொருந்துகிறது. பிறவிக் கடலில் அகப்பட்டோரின் கவலைகளை ஒடுக்கி ஒழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை உயர்த்திவிடலால் சிவபிரானுக்கு உருத்திரன் எனும் நாமம் உருவானது.

மேலும், ஒரு சமயம் பிரமா கூறும் போது "நால் வேதங்களைத் தந்தவரும் யாவர்க்கும் அவரவர் பணிகளைத் தந்தவரும் சிருஷ்டி முதலிய தொழில்களை நமக்குக் கற்பித்தவரும் ஆன்மாக்கள் மீது வைத்த கருணையினால் ஐந்தொழிலைச் செய்பவரும் அநாதி கடவுளும் நிமலரும் காரணங்களுக்கு காரணமாகவும், பிறவாதவரும், இறவாதவரும், அருவம், அருவுருவம், உருவமும் கொண்டு அகண்டாகார நித்த வியாபகரும் யாவருக்கும் ஈசராகவும் சேதன, அசேதனப் பிரபஞ்ச முடிவுக்கு முடிவாயுள்ளவரும், என்றுமுள்ளவரும், அனைத்தையும் உடையவரும், பெரும் கீர்த்தியுடையவரும், ஞானியர்களுக்கன்றி மற்றவர்களுக்கு அறிய முடியாதவர் சிவனே" எனக் கூறியுள்ளார். "நீ சிவனது பெருமையை அறிந்து தானே தவம்செய்து உமையம்மையை மகளாகப் பெற்று தாட்சாயணியாக வளர்த்தாயே" என்றும் கூறினார்.

ஆனால் தக்கனோ நகைத்து எல்லாமே உள்ள பரம்பொருளாகிய சிவபெருமான் எலும்பையும், தலைமாலையையும் அணிந்தது ஏன்? சுடலைச் சாம்பலைப் பூசியதேன்? கங்காளத்தை ஏந்தியதேன்? பிறர் தலைமுடியைப் பூணூலாக அணிந்ததேன்? பன்றிக் கோட்டையும் ஆமையோட்டையும் அணிந்ததேன்? புலித்தோலை உடுத்ததேன்? யானைத் தோலைப் போர்த்ததேன்? அக்கினி, மழுமான், சூலம் தாங்கியதேன்? நாகத்தை தரித்ததேன்? பிச்சையேற்பதேன்? கூத்தாடியதேன்? வெண்டலையை அணிந்ததேன்? நிர்வாணமாய் நின்றதேன்? ரிஷபத்தில் ஏறியதேன்? நஞ்சை உண்டதேன்? கங்கையைத் தலையில் சூடியதேன்? என வினவினான். இவ்வினாக்களுக்கு ததீசி முனிவர் பின்வரும் பதில்களைக் கூறினார். இவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

சிவபெருமான் தன் திருவருளையே திருமேனியாகக் கொண்டு பிரம விஷ்ணுக்களை முன்தோற்றுவித்து தாம் அவர்களை அதிஷ்டித்து நின்று உயிர் களுக்காகப் படைத்தல், காத்தல்களைச் செய்து உயிர்கள் வினைப் பயனை நுகர்விக்கச் செய்து; இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம் வரப்பெற்று முத்தியடையச் செய்கின்றார். பின் உயிர்களையும், உலகங்களையும் சங்கரித்து அதன்பின் பிரமா, விஷ்ணுவை ஒடுக்கி தான் முன்போல் ஒருவராக மட்டும் இருப்பர். இக்காலமே பிரளய காலம் எனப்படும். இதனையே சிவஞான போதம், "தோற்றிய திதியே ஒடுங்கி..." என்பதால் விளக்குகின்றது. இவ் வேளையிலேயே பிரமா, விஷ்ணு முதலாய தேவர்களுடைய எலும்புகளைத் தரிப்பர். மண்டையோட்டை மாலையாக அணிவர். அவர்களது சிகையாகிய முடியை பூணூலாக அணிவர். அவர்களை நெற்றிக் கண்ணால் சாம்பலாக்கி தம் திருமேனியில் பூசுவர். சிவன் இவ்வாறு செய்வது தேவர்கள் செய்த பெருந்தவத்தால் ஆகும். மேலும் சிவன் உயிர்கள் மீது வைத்த திருவருட்செயலாகும். சிவன் எல்லோருக்கும் தலைவர். எனவே தம்மை வழிபட்டவரது பாவங்களை எரித்து அவர்களுக்கு முத்தி கொடுத்தலாகும். பிரளய காலத்தில் இவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொருட்களைத் தாம் தாங்கி நிற்பதால் பிரளய முடிவில் மீண்டும் இவர்களைத் தோற்றுவிக்க இவை வித்தாகிறது. அதாவது நவீன விஞ்ஞான நோக்கில் ஒரு இழையத்திலிருந்து உயிர்களைத் தோற்றுவிப்பது போலாகும். இவற்றினைப் போன்று பூவுலகில் வாழும் உயிர்களின் எலும்பை அணிவதுமில்லை. பூலோக சுடலைச் சாம்பரை அணிவதுமில்லை என்பதை உணர்தல் வேண்டும்.

தேவர்களுக்கு துன்பத்தைக் கொடுத்த இரணியாட்சன் உலகத்தையே நடுங்கச் செய்தான். விஷ்ணு இரணியாட்சகன் நாசியில் புகுந்து பன்றி வடிவம் எடுத்துக் கொன்றார். அப்பன்றியாகிய விஷ்ணு பூமியை உரியவாறு நிறுத்தியது மட்டுமன்றித் தானே பரம்பொருள் என பன்றிக்கோட்டால் பூமியையும் சமுத்திரங் களையும் சீரழித்தார். இவ்வேளை சிவன் அங்கு தோன்றி பன்றிக்கோட்டைப் பிடுங்கி விஷ்ணுவின் அகந்தையை அழித்தார். இப்பன்றிக்கோட்டை திருமார்பில் பிறை போல் அணிந்துள்ளார்.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த போது மந்திர மலையை நிலைநிறுத்த விஷ்ணு ஆமை வடிவம் எடுத்து தாங்கினார். தேவர்களும், அசுரர்களும் அமிர்தத்தைப் பெற்று சண்டை செய்ய ஆமையோ சமுத்திரம் முழுவதும் ஒடித்திரிந்தவேளை சுனாமி உண்டானது போல் சமுத்திர நீரால் பூமிக்கு அழிவுண்டாகியது. இவ்வேளை சிவன் சென்று ஆமையை அடக்கி மீண்டும் விஷ்ணுவாக்கினார். இவ்வெற்றியையே ஆமையோட்டை அணிந்து காட்டினார்.

தாருகாவனத்து முனிவர்கள் சிவனை மதிக்காது வேதங்கள் கூறும் யாகங்களைச் செய்து எல்லாவற்றையும் பெறமுடியும் என வாழ்ந்தார்கள். சிவபெருமான் தன்னை யார் என உணர்த்தும் முகமாக பேரழகனாக நிர்வாணியாக பிட்சா பாத்திரத்தையும் மூவிலைச் சூலத்தையும் ஏந்தி வந்தார். விஷ்ணுவை அழகிய பெண் வடிவம் எடுக்கச் செய்தும் வரச் செய்தார். சிவனது அழகில் மயங்கிய இருடி கன்னியர்கள் சிவனைச் சூழ்ந்து அவர் பின்னும் முன்னும் சென்றார்கள். சிவனோ வீணை வாசித்தும், வேதங்களைப் பாடியும், பிச்சை கேட்டும், சிவனடியார் போல் சிவனது புகழ்களையே எடுத்துச் சொல்லியும் சிவன் மீது அன்பு கொள்ளச் செய்தார். மேலும், இருடிகன்னியர் கர்ப்பமுற்று 48 ஆயிரம் புதல்வர்களைப் பெற அவர்கள் சிவனே உயர்ந்த தெய்வம் என்பதை அறிந்து தவமியற்றினார்கள்.

விஷ்ணுவினுடைய மோகினி வடிவைக் கண்ட முனிவர்கள் தம் தவத்தைக் கைவிட்டு மோகினியில் மயங்கினார். சிவனே பிச்சாடனராக வந்தார். விஷ்ணுவை மோகினியாக்கினார் என்பதை உணர்ந்தார்கள்.

தாருகாவன முனிவர்களோ அபிசார ஹோமம் செய்து சிவனை அழிப்போம் என்று ஹோமம் செய்து கொடிய புலியைத் தோற்றுவித்து சிவனிடத்து அனுப்பினார்கள். சிவன் புலியைக் கொன்று தோலை அரைக்கச்சை ஆக்கினார். யாக குண்டத்திலிருந்து மூவிலைச் சூலத்தை உருவாக்கி அனுப்பினார்கள். சிவன் கையிலேந்தினார். மானை அனுப்பினார்கள் சிவன் இடது கரத்தால் பற்றி ஏந்தினார். கொடிய பாம்புகளை யாகத்தீயிலிருந்து உருவாக்கி அனுப்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாகங்களைச் சிவன் ஆபரணமாக அணிந்தார். பூதவெள்ளத்தை அனுப் பினார்கள். அவை சிவனுக்கு பூதசேனையாகின. வெண்டலையை அனுப்பி னார்கள். அதை தலைமுடியில் தரித்தார். பெரிய ஒலியோடு டமருகம் தோன்றியது. அதை அனுப்ப நம்முடைய கட்டளைக்கமைய ஒலி எழுப்பு என்று வலது கரத்தில் தாங்கினார். அபஸ்மார புருஷனாகிய முயலகனை அனுப்பச் சிவன் அவனை வலது காலினால் மிதித்தார். யாகாக்கினியை அனுப்ப அதனை இடது கரத்தில் ஏந்தினார். முயலகன் தப்பிக்க முயன்றவேளை சிவன் உலகமே நடுங்கும் படியாக திருநடன மியற்றினார். இருடிகள் சிவனே உலகத்தின் கர்த்தா, பரம்பொருள் என்பதை உணர்ந்து சிவாகம நெறியில் ஒழுகத் தலைப்பட்டார்கள்.

காயாசுரன் பிரமாவின் அருளால் பெரும் வரம் பெற்றான். காயாசுரன் சிவனடியார்கள் தேவர்கள் எல்லோருக்கும் துன்பம் செய்தான். முனிவர்களுக்கு துன்பம் செய்ய முனிவர்கள் காசி மணிகர்ணிகையை அடைந்து விசுவநாதரைத் தொழுது நின்றனர். காயாசுரன் அங்கு உக்கிரத்தோடு வந்த வேளையில் சிவன் பெரிய அக்கினி சோதியாகத் தோன்றித் தனது திருக்கரங்களால் முதுகைக் கிழித்து அழித்து யானைத் தோலைப்போர்த்தார்.

பிரம விஷ்ணுக்களுக்கு முன்னே பல முனிவர்கள் வந்து அநாதியான பரம் பொருள் யார் என்ற போது பிரமா, விஷ்ணு தாங்களே என ஒருவருக்கொருவர் சண்டை செய்தார்கள். இவ்வேளை சிவன் உமாசமேதரராய் சோதிக்குள் தோன்றினார். இதனைக் கண்டு விஷ்ணு கைதொழுது வணங்கினார். பிரமா உச்சித் தலையால் சிவனை இகழ்ந்தார். இவ்வேளை சிவன் வயிரவக் கடவுளாக வடிவமெடுத்தார். நீலநிற மேனியோடு சிலம்பொலிக்கும் திருவடி பாம்பு பொருந்திய திருஅரை, தலைமாலை, சூலம், மழு, பாசம், உடுக்கு ஏந்திய கரங்கள், முக்கண், இருகோரப்பல், செஞ்சடையோடு திருநகை புரிந்து பிரமனது உச்சிச்சிரசை நகத்தால் கிள்ளினார். தொடர்ந்து காடு மலை எல்லாம் சென்று தருக்குற்ற முனிவர்களிடமும் தேவலோகம் சென்று தேவர்களிடமும் இரத்தத்தை பிச்சையாக ஏற்றார். விஷ்ணுவிடமும் குருதியை பிச்சையாக ஏற்றார். வயிரவ கடவுளே பரமசிவனது ஆணையினால் பிரமா முதலிய தேவர்களுடைய, உயிர்களுடைய சிரங்களைத் துணிந்து புவனங்கள் எல்லாவற்றையும் பொடியாக்குவர். மகா பிரளய காலத்தில் வேதமாகிய நாய் வாகனத்தில் உலாவுவர்.

தரும தேவதையே இடபமாக மாறி பிரளய காலத்திலும் சிவபெருமானைத் தாங்கி வருகின்றார். முப்புரங்களை எரிக்கச் சென்ற சமயம் தேர்அச்சுடைய விஷ்ணுதான், இடப வடிவம் எடுத்து சிவனைத் தாங்கினார். பிரளய காலத்திலும் தருமத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற நிலையில் சிவன் இடபத்தில் ஊர்கின்றார்.

தேவர்களும் அசுரர்களும் சாகாவரம் வேண்டி வாழத் திருப்பாற்கடலைக் கடையமுற்பட்டார்கள். மந்தரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை நாணாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய நஞ்சை கருணைக் கடலாகிய சிவன் உண்டு தேவ அசுரர்களைப் பாதுகாத்தார். இந் நஞ்சே கண்டத்தில் விஷ ஆபரணம் போலக் காட்சி தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் உமை சிவனது இருகண்களையும் தன் கைகளால் பொத்தினார். புவனமெங்கும் இருள் மயமாகின. உயிர்களுக்கு இது ஊழிக்கால மாகியது. சிவனோ நெற்றிக்கண்ணைத் திறந்து ஒளிபரப்ப உமையம்மை பயந்து கைகளை எடுக்க அச்சத்தினால் பத்து விரல் நுனியிலிருந்தும் வியர்வை உண்டாகி பத்து கங்கையாகி எங்கும் பரந்தன. இந்நீர் எங்கணும் பரவி விடுமோ என்று அரிபிரமேந்திராதி தேவர்கள் சிவனை வழிபட அக்கங்கையினைத் தன் திருச்சடை உச்சியில் வைத்தார். எனினும் அதன் புனிதம் சிறப்புக் கருதி எங்களுக்கும் சிறிதளவு கங்கை தாருங்கள் என வேண்ட அரிபிரமேந்திராதியினருக்கு சிவன் சிறிதளவை அள்ளிக் கொடுத்தார். அவற்றை பிரம லோகத்தில் விட்டனர். பகீரதன் தன் தவ வலிமையால் ஆகாய கங்கையை பூமிக்கழைத்தான். எனினும் அதன் வேகம் தாங்க முடியாமல் போனபோது சிவன் மீண்டும் கங்கையை சடையில் தரித்தார். இதனாலேயே கங்கையும் பெண்ணாகப் போற்றப்படுகிறது. இன்றும் இக்கங்கை புனித நீராகப் பாய்ந்து மூழ்குபவரின் பாவங்களைக் கழுவி வருகின்றது.

இவ்வாறு உலகத்தின் கர்த்தாவாக, கடவுளாக, பரம்பொருளாக விளங்கும் சிவபெருமான் உலக உயிர்களின் நன்மையை வேண்டி காலத்துக்குக் காலம் பல திருவிளையாடல்களை நிகழ்த்தி வருகின்றார். இவையே சிவனது திருவுருவத்தில் காணப்படும் ஒவ்வொரு அடையாளங்களாகும்.

## நைவேத்தியம்

நிவேதனம் என்பது தெய்வங்களுக்குப் படைக்கும் உணவுப்பண்டங்கள், பழ வர்க்கங்கள், பால், தயிர், தேன், நெய், கரும்பு, வெற்றிலை, பாக்கு, ஏலக்காய், கறுவா, கராம்பு போன்றவற்றை நிவேதனப் பொருட்கள் என்று குறிப்பிடலாம்.

இறைவனுக்கு நிவேதனம் செய்யும்போது ஒவ்வொரு பொருட்களிலும் பூவால் நீர் விட்டு பூவால் தொட்டு பூவை சுவாமியின் பாதத்தில் மந்திரசகிதமாகச் சேர்க்க வேண்டும்.

உதாரணமாக அன்னவகைகளை தெய்வங்களுக்கு படைத்து நிவேதிக்கும் போது "வம் அம்ரு தாத் மநே அம்ரு த மயம் மஹா நைவேத்தியம் நிவேத யாமே" எனக்கூறல் வேண்டும். அதாவது அன்னத்தின் தன்மை விளங்க இருக்கிறவனாகிய உனக்கு ஜீவனச் சத்துமயமான அமிர்தகுணச் சார்பாய் இருக்கும் நைவேத்தியத்தை நிவேதிக்கின்றேன் ஏற்றுக்கொள்க என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகரின் சிவபுராணம் கூறும் சைவசித்தாந்தம்

சைவப்புலவர் திருமதி.புஷ்பலட்சுமி விமலகாந்தன்,
நிர்வாகசபை உறுப்பினர்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதே உயர்ஞான நூல்களாகும். மாணிக்கவாசகப் பெருமானால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகம் அனைவருக்கும் தோன்றாத் துணையாய், பிறவிப்பிணி தீர்க்கும் அரிய மருந்தாய், இறைவன் அடிசேர்க்கும் இனிய ஆற்றுப்படையாய் விளங்குகின்றது. கருங்கல் மனத்தையும் கனிவித்துக் கடவுளின்பால் ஈடுபடுத்தும் இவ்வாசகம், ஆசா இன்பப் பனுவலாக, இதற்குப் பொருளறிய விரும்பிய தில்லைவாழ் அந்தணர்களுக்கு, திருவாதவூரடிகள் தில்லையம்பதியில் எல்லையில்லா இன்பநடம் புரியும் நடராசப் பெருமானையே காட்டினாரென்று அவர் புராணம் கூறுகின்றது.

தெய்வத் தண்டமிழ் திருப்பாக்கள் பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையான திருவாசகம் பக்திச் சுவை சொட்டச் சொட்ட மணிவாசகர் பாடியதைக் கூறும் பொழுது, **தில்லைத் திருச்சிற்றம்பலமுடையார்** தமது **திருக்கரத்தால் எழுதிக் கைச்சாத்திட்டு,** திருச்சிற்றம்பலத்துள் வைக்கப் பெற்ற பெருமையுடையது. இந்நூலானது சுத்தாத்துவித சைவசித்தாந்த வீட்டுநெறிக்குச் சிறந்த சிவநூலாகப் போற்றப்படுகின்றது. திருவாசகப் பாட்டனைத்தும் **சிவபுராணம்** எனப்படும். திருவாசகம் ஆகிய சிவபுராணம் உள் நின்று உணர்த்துவ தொன்றால், முன்னமே சொல்லப்பட்ட பாட்டாகும். இதன் பொருள் **"நமசிவாய"** என்பதாகும். இச்சிவபுராணம் **இறைவனின் அநாதி முறையிலான பழமையைக் கூறுகின்றது.** திருப்பெருந்துறையிலே தன்னை ஆட்கொண்ட கருமணியை தூல பஞ்சாட்சர மந்திர வாழ்த்து கூறுகின்றார். சைவசித்தாந்த நூலார், இவ்வைந் தெழுத்து மகாமந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளை உணர்த்து வதாகக் கொள்வர். இது "பதத்தெழுமந்திரம் அஞ்செழுத்தோதி" (5 - 107 - 2) என அப்பரடிகளும், "அந்தியும் நண்பகவும் அஞ்சுபதஞ்சொல்லி" (7 - 83 - 1) என ஆளுடைய நம்பிகளும் அருளியுள்ளமை நோக்கற்பாலது. நமசிவாய என்பதில் நகரம் - திரோதான சக்தியையும், மகரம் - மலத்தினையும், சிகரம் - சிவனையும், வகரம் - திருவருட்சக்தியையும், யகரம் - உயிரையும் குறிக்கும். இத்தன்மையானது பந்த நிலையிலுள்ள உயிர்களைப் பிறவிக்கண் உய்த்து இருவினைப்படுத்தி, மலம் நீங்கும் வரை அருள் வாயிலாக வீடடைதலை உணர்த்துவது. இதுவும் இறைவனது கைமாறு கருதாத பேரருளையே குறித்தலால், இதனை வாழ்த்தவே **"நமசிவாய வாழ்க"** என்று முதல் வாழ்த்துச் சொன்னார். சைவசித்தாந்தம் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாததத்துவத்தை வெளிப்படுத்தவே **"நாதன் தாள் வாழ்க"** என்று பாடியருளினார். கண் இமைப்பொழுதுகூட என் நெஞ்சை விட்டு நீங்காதவன் என்றும், பதினெண் வித்தைகளுக்கும் சூலபாணியாகிய இறைவன் என்று கூறப்படுவதாலும், ஈண்டு வீட்டு நெறியைக் கூறும் **சிவாகமங்கள்** என்பதாலும்,

"பொறி வாயில் ஐந்தவித்தான் பொய் தீரொழுக்கநெறி" (திருக்குறள்) என்றதும் ஆகம நூலையே என்பதால்,

**"ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"** என்று பாடியருளினார்.

ஓருருவான இறைவன் உயிர்களுக்கு அருள் செய்ய வேண்டி சிவம், சக்தி என இரு உருவாயும், பின்னர் அச்சிவம் சக்தி சேர்ந்து ஐவகை சாதாக்கிய வடிவங்களையும், அச்சாதாக்கியத்திலிருந்து ஈசுவர வடிவங்கள் இருபத்தைந்தாயும், காருணேசுர வடிவங்கள் ஐந்தாயும், பிறவாயும் ஆனமையால், **"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க"** எனப் பாடியருளினார். இவையெல்லாம் **சிவாகமங்கள்** கூறும் சிறப்புகளாகும். இதனை மனவாசகம் கடந்தார்,

"உள்ளபடி இத்தை உரைக்கக் கேள் உன்தனக்கு
வள்ளல் அருளால் அன்று வாய் மலர்ந்தது - தென்னியசீர்
**ஆகமங்கள்** சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ் புதல்வர் உற்று." உண்மை விளக்கம் - 3 பாடல் எனக்

கூறுவதால் அறிய முடிகின்றது. ஆணவமலத்தின் வெம்மையைக் கெடுத்தும், பிறவியாகிய மரத்தை வேரொடு அறுத்து, உயிருக்கு நோய் தீர்க்கும் மருந்தாகியவனும், அன்பிலாதவர்க்கு தூரத்தே உள்ளவனும், அன்பர்களுக்கு மனம் மகிழும்படி செய்பவனும் அடியாரின் தலைகள் தம்தாளில் ஒருங்கப் பெறுபவரை உய்வடையச் செய்யும் சிறப்பை உடையவருமாகிய சிவன் திருவடிகள் வெற்றி பெற வேண்டும் என உயர் ஞானம் பெற்ற மணிவாசகர்,

"வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க"

என்று வாழ்த்திப் பாடியுள்ளார். திருவருட்பயனில் உமாபதி சிவாசாரியர்,

"உன்னும் உளது ஐயம் இலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் **தீர்க்கும் மருந்து."** என்றும்,
"நலமிலன் நண்ணார்க்கு **நண்ணினர்க்கு நல்லன்**
சலமிலன் பேர் சங்கரன்." என்றும் கூறுவது நோக்கற்பாலது.

மேலும் சிவன் பிரமன் தலையையும், அந்தகாசுரனையும், முப்புரங்களையும், தக்கனையும், சலந்தரனையும், கஜம் என்னும் யானையையும், காமனையும், யமனையும் அழித்து வெற்றி கொண்ட பெருவீரனாதலின் வீரக்கழல் அணிந்த திருவடியினான் என்றார். இவ்வெட்டு வீரங்களையும் அட்ட வீரட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். இங்கு கழல் என்பது மலவாற்றல் தவிர்க்கும் வெற்றிப்பாடு உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் விண்ணுலகம், மண்ணுலகம் முதலாகிய எல்லா உலகங்களும் தன்னுள் அடங்கத் தான் அவற்றிற்கு அப்பாலுமாய் நிறைந்து ஒளி வடிவினனாய் உள்ளான் என்பதை மணிவாசகர் "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்" என்றார். இதனை உமாபதி சிவாசாரியார் திருவருட்பயனில்

"எங்கும் எவையும் ஏரியுறு நீர்போல் ஏகம்
**தங்குமவன் தானே தனி."** என்று குறிப்பிடுகின்றார்.

தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து, அப்போகங்களில் மூழ்கச் செய்து, பின் அவற்றில் உவர்ப்பு உண்டானவிடத்து, தனது திருத்தொண்டில் புகும்படி செய்து, பக்குவம் உண்டான போது, மலக்கட்டினை கெடுத்து, நித்திய இன்ப நிலையை அருளுவான் என்பதை சிவபுராணம்

"ஆக்குவாய், காப்பா யழிப்பா யருடருவாய்
**போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்றொழும்பின்"**

என்று கூறுகின்றது. இதனை சிவஞான சித்தியாரில்

"அழிப்பு, இளைப்பு, ஆற்றல், ஆக்கம், அவ்வவர் **கன்மம் எல்லாம்**
கழித்திடல்; நுகரச் செய்தல்; காப்பது; கன்ம ஒப்பில்
தெழித்திடல்; மலங்கள் எல்லாம்; மறைப்பு, அருள் செய்திதானும்
பழிப்பு ஒழி; பந்தம் வீடு பார்த்திடில் அருளே, எல்லாம்"

எனக் கூறப்படுவதையும் நோக்கற்பாலது.

சிவன் நள்ளிருளில் ஆடும் திருக்கூத்தினை புறத்தே குறிப்பது **தில்லைத் திருச்சிற்றம்பலக் கூத்தாதலின்**

"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே" என்றார்.

இங்கு மனவாசகம் கடந்தார் உண்மை விளக்க நூலில்

"எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேன் -- சிட்டன்
**சிவாய நம** என்னும் திருவெழுத்து அஞ்சாலே
**அவாயமற நின்றாடுவான்."** (உண்மை விளக்கம் 31)

எனக் கூறுகின்றார்.

இத்தகைய தெய்வத்தன்மை பொருந்திய திருவாசப் பொருளை உணர்ந்து பாடுபவர்கள், எல்லோரும் போற்றிப் புகழ்ந்து வணங்க சிவபுரத்திலுள்ள சிவனின் திருவடிக்கீழ் சென்று சேருவர். இதனைச் சிவஞான போதம்

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயரா அன்பின் அரன்கழல் செலுமே" (சிவஞான போம் - 11)

என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றதை ஒப்ப நோக்கலாம்.

**நிறைவுரை:-**

"போதலர்ந்து தேன் சொரியும் பொன்னம்பலத்துறை
வாதவூர் எம்கோமான் வாசகத்தை - - ஓதிப்
பிறவிப் பிணி நீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவிற்குள் செல்வர் சிறந்து."

## சமயம்

சமயமானது ஆன்மாக்கள் தத்தம் பக்குவத்திற்கேற்ப அறிவு விளக்கம் பெற்று உறுதி எய்தி இன்ப வாழ்வு அடைவதற்கு சாதனமாயுள்ளது. இதனை மார்க்கம், நெறி, பாதை என்றும் கூறலாம். உலகத்திலுள்ள சமயங்களைச் சைவசித்தாந்தம் நான்கு வகைப்படுத்தி அதன் உட்பிரிவுகளாக (6x4=24) இருபத்தினான்கு வகைகளைக் கூறுகின்றது.

01. புறப்புறச் சமயம்:- உலோகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌராத்திகம், வைபாடிகம் (என நான்கு வகைப் பௌத்தம்) ஆருகதம் (சமணம்)

02. புறச்சமயம்:- தருக்கம் (நியாயம்), மீமாம்சை, ஏகான்மவாதம் (சங்கரர் அத்வைதம்), சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் (வைஷ்ணவம்)

03. அகப்புறச் சமயம்:- பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம் (வைரவரை வழிபடல்), ஐக்கிய வாத சைவம் (வீர சைவம்)

04. அகச்சமயம்:- பாடாணவாதசைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈஸ்வர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் சைவசித்தாந்தம் சுத்தாத்துவித சைவசித்தாந்தமாகும். இது 25ஆவது சமயம்.

## உயிர்களின் நால்வகைத் தோற்றம்

01. அண்டசம் (முட்டையிலிருந்து தோன்றுபவன) உதாரணம் தவளை, முதலை, ஆமை, உடும்பு, பல்லி, பாம்பு, மீன், பறவைகள்.

02. சுவேதசங்கள் (அழுக்கு, வேர்வையிற் தோன்றுபவை) உதாரணம் நுண்ணங்கிகள், விட்டில், பேன், கீடம்

03. உப்பிச்சம் (துண்டு, வித்து, வேர், கிழங்கிலிருந்து தோன்றுபவை) உதாரணம் செடி, கொடி, மரங்கள்

04. சராயுசம் (கருப்பையிலிருந்து தோன்றுபவை) உதாரணம் மனிதர், விலங்குகள் அதாவது முலையூட்டிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பெரியபுராண சூசனம் கூறும் சீவன் முத்தி

தர்மாசிரியர், சைவப்புலவர்
திருமதி.பத்மாவதி தங்கராஜா
B.A. Dip in Ed. M.A. (Music),
நிர்வாகசபை உறுப்பினர்

ஆன்மாவுக்கு ஆணவ மலபரிபாகத்தினாலே தீவிரதர சத்திநிபாதம் உண்டாகும் கருணாநிதி ஆகிய சிவன் திருவருளினாலே சிவஞானத்தை உதிப்பித்து, சிவானந்தம் அனுபவிப்பித்து, மேல்வரும் பிறப்புக்கு ஏதுவாகிய சஞ்சித ஆகாமியங்களைக் கொடுத்து எடுத்த சரீரத்திலே பிராரத்துவம் புசிக்கும்படி கொடுத்தருளுவர். சத்திநிபாதமாவது திரோதான சத்தி நீங்கி அனுக்கிரக சக்தி பதிதலாம். திருநாவுக்கரசுநாயனார் தீவிரதர சத்திநிபாதமுடையவராய் சிவனது திருவருளினாலே மலவிருள் நீக்கிச் சிவத்தும் விளங்கப் பெற்று சிவானந்தம் மேலிட்டு சீவன் முத்தராய் இருந்தார். பரவசமும், இடையறாது எழும் அதி அற்புதமான பாடலுமாம். இந்நாயனார் தமது தமக்கையாராலே விபூதி அணியப் பெற்றுச் சிவசந்நிதியை அடைந்தவுடனே சிவனது திருவருளினாலே மலநீக்கமும், சிவத்துவ விளக்கமும் இவருக்கு உண்டாயின என்பது "நீறணிந்தாரகத்திருளும்" என்பது முதல் "அங்கங்களடங்க" என்பது இறுதியாய் உள்ள ஐந்து திருவிருத்தங் களும் சான்று பகர்கின்றன.

சிவன் முத்தராவார். அளத்திற்பட்ட புற்போலச் சிவப்பிரகாசத்தினாலே போக சாதனையுள்ள உட்கரணங்களும், புறக்கரணங்களும் ஆகிய பசு கரணங்கள் எல்லாம் சிவகரணமாய் நிகழப் பெற்று சகல கருவிகளோடும் கூடியிருக்கும் சாக்கிராவத்தையிலே நிருமலதுரியா தீதத்தைப் பொருந்தினோர்களாய் பூமியின்கண் உள்ள ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டுச் சஞ்சரிக்கும் இயல்புடையோர் அது,

"இந்நிலை தானில்லையே லெல் லாமீசனிடத் தினினு மீசனெல்லாம்
- விடத்தினினு நின்ற
வந் நிலையையறிந் தந்தக்கரணங் களடக்கி யறி வதொருகுறி
- குருவினருளினாலறிந்து
மன்னுசிவன்றனை யடைந்து நின்ற வன்றனாலே மருவுபசு
- கரணங்கள் சிவகரண மாகத்
துன்னிய சாக்கிரம தனிற் றுரியா தீதந் தோன்ற முயல்
- சிவானு பவஞ்சுவானு பூதி யாம்"

என்னும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தினாலும்

"காணுங்கரணங்க ளெல்லாதம் பேரின்ப மெனப்
பேணுமடியார் பிறப் பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறை யிலென்றும்
பிரியானை வாயாரப் பேசு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருவாசகத்தானும் உணர்க. திருநாவுக்கரசர் இவ்வியல்பினையுடையவரே ஆதலால் அவர் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய தேவாரம் சிவாக்கியம், பசுவாக்கியம் என்று துணிந்து கூறலாம். அதனை சர்வான்மாக்களும் ஓதி உணர்ந்து முத்தி பெறுதற் பொருட்டேயாம்.

திருநாவுக்கரசர் சிவத்தலங்கள் தோறும் சென்று சிவனைத் தரிசித்து, வலம் வந்து வணங்கி புற்செதுக்குதல், பிறவும் செய்தமை என்னவெனில் இவர் பசுத்துவம் நீங்கித் தன் செயலற்றுச் சிவனேயாய் நின்றமையால் இவை எல்லாம் இவர் செயலாகாது, சிவன் செயலாய் நிகழ்ந்தன அது

"நஞ்செயலற்றிந்த நாமற்ற பின்னர் தன்
றன் செயறானே யென்று ந் தீ பற
தன்னை யே தந்தா னென்றுந் தீ பற"

என்ற திருவுந்தியார் பாடலுக்கு ஒப்பிடலாம். இங்ஙனம் இவையெல்லாம் சிவன் செயலாய் நிகழ்தல் ஆன்மாக்களுக்கு அறிவுறுத்தி அவர்களை உய்வித்தற் பொருட்டேயாம்.

சமணர்கள் நாயனாரை நீற்றறையில் ஏழுநாள் இருத்தியும் நஞ்சு கலந்த பாலும் அன்னமும் உண்பித்தும், கொல்லும் படி யானையை ஏவியும், கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளியும், இவை சிறிதாயினும் அவரைப் பாதிக் காமையால் சிவனது திருவருளினாலே தமது தோளிலே சூலக்குறியும் இடபக் குறியும் பொறிக்கப்பட்டமையாலும், அப்பூதியடிகளது புத்திரர் விஷத்தினால் இறந்த போது அவரை உயிர்ப்பித்தமையாலும், திருவீழிமிழலையிலே சிவனடி யார்களை அமுது செய்வித்தற் பொருட்டு சிவனிடத்தே படிக்காசு பெற்றமை யாலும் வேதாரணியத்திலே திருக்காப்புச் செய்யப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடியமையாலும், திருவையாற்றிலே கைலாசந் தரிசித்தமையாலும் உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் இவர் சிவனது கிருபையினாலே தனது உழவாரம் நுழைந்த இடங்களெங்கும் பொன்னும், நவரத்தினங்களும் கிடக்கக் கண்டும் அவைகளைப் பருக்கைக் கற்களோடு சமமாக எண்ணி உழவாரத்தால் ஏந்திக் குளத்திலே எறிந்தும், அரம்பையர்கள் அவர் முன் நின்று மயக்கும் பொருட்டுப் பல முயற்சிகள் செய்தும், தமது சித்தநிலை சிறிதும் வேறுபடாது தாம் செய்யும் திருப்பணியிலேயே உறுதி கொண்டு நின்றமையாலும், இவரது பெருமை தெரியப்படுகிறது. இவ்வருமை "ஓடுஞ் செம் பொனு மொக்கவே நோக்குவார்" "ஏந்திழையார் தஞ்சயனத் தெய்திடினும் மெய் தொடினுங், காய்ந்துவர்த்த லேதுறவு காண்" என்னும் திருவாக்குகளால் அறியலாம். இவர் பரமுத்தி பெற்றமை இங்கே "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப் புகன்றிறு நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி யண்ணலார் சேவடிக் கீழாண்டரசு எய்தினார்" என்பதனால் உணர்த்தப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகாறும் கூறியவற்றால் திருநாவுக்கரசநாயனார் ஆன்மாக்கள் புறச்சமயப் படுகுழியில் வீழாது, சைவமே சற்சமயம் என்று தெளிந்து அதன்வழி நின்று சிவனை வழிபட்டு உய்யும் பொருட்டு தமது செயல்களாலும், திருவாக்குகளினாலும் மெய்யறிவுச்சுடர் கொளுத்திய சமயகுரவராயினார். ஆதலால் புறச்சமயங்களிற் புகாது சிவனே பரமபதி எனத் துணிந்து வீபூதி, உருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்து, சிவனை இடையறாது மேன்மேலும் பெருகிவரும் மெய்யன்பினோடு மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றினாலும் வழிபட்டு உய்தலே நாம் அருமையாகப் பெற்ற இச்சரீரத்தினால் பெறப்படும் பயன் என்பது தெளிவு. இந்நாயனாரது தேவாரத்தைச் சித்த சமாதானத்தோடும் மெய்யன்போடும் விதிப்படி ஓதி சீவன் முத்தி நிலை அடைவோமாக.

## சிவலிங்கம்

பரார்த்தலிங்கம்:- பரார்த்தலிங்கம் என்றால் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு எல்லா நன்மைக்காக பூசிக்கப்படும் சிவலிங்கத் திருமேனிகளாகும். இவை ஐந்து வகைப்படும்.

01. கானலிங்கம்:- கணபதி முதலிய கணங்கள் பூசித்தது.
02. தைவகலிங்கம்:- பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் பூசித்தது.
03. ஆரிடலிங்கம்:- அகத்தியர் முதலிய ரிஷிகள் பூசித்தது.
04. மானிடலிங்கம்:- மனிதர்கள் பூசித்தது.
05. சுயம்புலிங்கம்:- தானாகத் தோன்றியது

இந்தியாவில் பல சுயம்புலிங்கத் தலங்கள் உண்டு. சங்கராச்சாரியார் 12 யோதிர்லிங்கங் களைப் பூசித்துள்ளார். இலங்கையில் கொக்கட்டிச்சோலை, ஒட்டிசுட்டான் ஆகிய இடங்களில் தான்தோன்றிஈஸ்வரராக சுயம்புலிங்கம் காணப்படுகின்றது.

ஆன்மார்த்தலிங்கம்:- ஆன்மார்த்தலிங்கம் என்றால் ஒவ்வொரு மனிதரும் இரண்டாவது தீட்சையாகிய விசேட தீட்சை பெற்று தன் ஆத்மாவின் முன்னேற்றத் திற்காக தினமும் அவரவரே பூசிக்கும் சிவலிங்கங்கள் ஆகும். தாம்தாம் தம் இஷ்ட வரங்களைப் பெறுவதற்காக பூசிப்பதால் ஆன்மார்த்த லிங்கங்கள் இட்ட லிங்கங்கள் என அழைக்கப்படுகிறது.

ஆன்மார்த்த லிங்கங்கள் அமைக்கும் பொருட்கள்:- மா, சந்தனம், மஞ்சள் மா, அன்னம், சர்க்கரை, படிகம், பஞ்சலோகம், பொன்வெள்ளி, இரத்தினக்கற்கள்.

சஷணிகலிங்கம்:- சஷணிகலிங்கம் என்றால் ஆன்மார்த்த பூசைக்காக உடனுக்குடன் அமைத்து செய்யப்படும் லிங்கங்கள் ஆகும். பூசை செய்த பின்னர் புனித கங்கைகளில் (நீர் நிலைகள்) சேர்க்கப்படும் சிவலிங்கங்களாகும்.

சஷணிகலிங்கங்கள் அமைக்கும் பொருட்கள்:- அரிசிமா, கோமயம், சந்தனம், மஞ்சள் மா, சர்க்கரை, அன்னம்

சைவசமய தீட்சை பெற்றோர் திரிபுண்டரமாக (மூன்று குறி) மந்திரத்தோடு திருநீறு தரிக்கும் இடங்கள் 16 ஆகும். இவையாவன தலை, நெற்றி, நெஞ்சு, வயிறு, இரு முழுந்தாள், இருபுயம், இருமுழுங்கை, இரு மணிக்கட்டு, இருவிலாப்புறம், முதுகு, கழுத்தின் பின்புறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பெரியபுராணத்தில் பக்தி

சைவசித்தாந்த ரத்தினம்,
சைவப்புலர் கவிதா கதிரமலை,
நிர்வாகசபை உறுப்பினர்.

63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் நூல் பெரியபுராணமாகும். இதனை சேக்கிழார் அருளிச் செய்தார். பன்னிரண்டாந் திருமுறையாகப் பெரிய புராணம் போற்றப்படுகின்றது. இந்நூலானது பல்வேறு நிலைகளில் வாழ்ந்தவர்ளின் வரலாற்றைக் கூறுகிறது. அந்தணர்களாகிய சம்பந்தர், சுந்தரையும், வேளாளராகிய அப்பரையும், அரசராகிய சேரமான் பெருமான் நாயனார், ஐயடிகள் காடவர்கோன் போன்றோரையும் மீனவரையும், எறிபத்தரையும், இடையராகிய ஆனாயரையும், புலையர் பாடியில் பிறந்த நந்தனாரையும் இவ்வாறு பல்வேறு சமூகப் பிரிவுகளில் வாழ்ந்தோரையும் இணைத்து சிவனாடியார்களாக பெரியபுராணம் சித்திரிக்கிறது. "தொண்டர் குலமே தொழு குலம்" என்பது பெரிய புராணம் காட்டும் முடிபாகும். சைவத் தமிழ் மக்களிடையே குடிமக்கள் காப்பியமாக ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நூலே பெரியபுராணம் ஆகும்.

பெரியபுராண அடியார்களில் பலர் பக்தி மார்க்கத்தையே இறைவனை அடைவதற்குரிய வழியாக மேற்காட்டினர். பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வேயாகும். உண்மைச் சமயத்தின் உயிர் நாடியாக விளங்குவது பக்தியாகும். ஆன்மாவிற்கும், இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தியாகும். ஞானமே வீடுபேறு அடைவதற்குரிய வழியெனக் கூறும் சங்கரர் தனது தோத்திர நூலாகிய சிவானந்த லகரியில் பக்தியின் சிறப்பைப் பின்வருமாறு போற்றுகிறார். "இறைவனே! என்னுடைய மனம் உன்னுடைய பாத தாமரைகளில் பதிவாக எனது வார்த்தைகள் உன் புகழ் பாடட்டும்; என் இரு கைகளும் உன்னை அர்ச்சிக்கட்டும்; இரு செவிகளும் உன் பராக்கிரமங்களை செவிமடுக்கட்டும்; என்னுடைய புத்தி தியானத்திலும் எனது கண்ணிமைகள் உன்னுடைய அருட்கோலப் பொலிவைக் கண்டின்புறுவதிலும் திளைக்கட்டும். இவ்வாறு சரீரம் முழுவதும் உன்னிடம் ஈடுபடும் நிலையில் நூல்களால், சாத்திரங்களால் தத்துவ விசாரணைகளால் யாது பலன்? எதுவுமே இல்லை என்கிறார் சங்கரர்.

அடியார்களின் செயல்கள் அனைத்தும் ஆண்டவனின் செயல்கள் என்பதை "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" என திருவாசகம் கூறுகிறது. பௌத்த மதத்தினரான சாக்கியர் சிவபெருமானை நாள்தோறும் சிவலிங்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லெறிந்து வழிபட்டார். எந்த வேடம் கொண்டாலும், எந்த நிலையில் நின்றாலும் சங்கரன் தாள் மறவாமை ஒன்றையே சாக்கியர் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார். பக்தி வயப்பட்டுச் செய்யும் செயல்கள் எதுவாக இருந்தாலும அது இறைவனுக்கு ஏற்றதாகும். பக்தி நிலையில் நின்று செய்யும் செயல்களை அறிவாராய்ச்சியால் ஆராய முடியாது. சாக்கியர் நின்ற கோலம் முக்கியமல்ல அவர் நின்ற நிலையே முக்கியம் என்பதைப் பின்வரும் பெரியபுராணப் பாடல் விளக்குகிறது.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர்ச்சங்கரன் தாள் மறவாமை பொருள் என்றே
துன்னிய வேடந் தன்னைத் துறவாதே தூய சிவம்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார்.

பெரியபுராண அடியார்களில் பக்தியின் உயர்வு நிலையில் நின்றவர்களில் கண்ணப்பர் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறார். குடும்பித் தேவரைக் கண்ட மாத்திரத்தில் கண்ணப்பர் அன்புருவாக மாறினார் என்பதை "பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்" எனப் பெரியபுராணம் கூறுகிறது. கண்ணப்பனுடைய வடிவம், அன்பின் வடிவம், அவனுடைய அறிவு, இறைவனை அறியும் அறிவு, அவனுடைய செயல்கள் அனைத்தும் இறைவனுக்கு இனிய செயல்கள் எனக் கண்ணப்பரின் தன்மையைப் பின்வரும் பெரியபுராணப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறி நீ என்றருள் செய்வார்.

கண்ணப்பனுடைய பக்தி வைராக்கியத்தின் சிறப்பை முற்றுமுணர்ந்த துறவியாகிய பட்டினத்தடிகள் "நாள் ஆறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லேன்" என்று குறிப்பிடுகின்றார். மணிவாசகர் கண்ணப்பனைப் போன்ற அன்பு தன்னிடம் இல்லை என்பதை திருக்கோத்தும்பிப் பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வா என்ற வான் கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத் தும்பி.

பெரியபுராண அடியார்களில் பலர் சிவத்தொண்டும், பசுத்தொண்டும் செய்து வாழ்ந்தார்கள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கையே ஆதாரமாகக் கொண்டே வாக்காலும், வாழ்வாலும் அப்பர் பெருமான் ஒருமித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தார். நாவுக்கரசரின் திருத்தொண்டு நெறியின் சிறப்பினைப் பின்வரும் பெரிய புராணப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெருநாமச் சீர்பரவலுறு கிறேன் பேருலகில்
ஒரு நாவுக்குரை செப்ப ஒண்ணாமை உணராதேன்.

நாவுக்கரசர் கையில் உழவாரம் ஏந்தி புல் பூண்டுகளைச் செதுக்கி ஆலயங்களில் சிவப்பணி செய்து வந்தார். உலக மக்கள் அனைவரும் சிறப்பாக வாழ்வதற்காக அப்பர் பெருமான் திருத்தொண்டு செய்தார் என்பதைப் பெரிய புராணப் பாடல் தெளிவாக விளக்குகிறது. நாவுக்கரசர் சிவபெருமானுடைய திருப்பாதங்களில் லயித்திருக்கும் மனமும் உடையவராக வாழ்ந்து வந்தார். பெரிய புராணப் பாடலில்

"மார்பாரப் பொழிகண்ணீர்.....
பார்வாழத் திருவீதிப் பணி செய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்"

காஞ்சிப்புராணம் அப்பரை "நடமாடும் கோயில்" என குறிப்பிடுகிறது. இளையான் குடிமாறர், அப்பூதியடிகள், இடங்கழியார், அமர்நீதிநாயனார் போன்ற முப்பது நாயன்மார்கள் தாம் செய்யும் சிவப்பணிகளோடு அன்னதானப் பணிகளையும் சிறப்புடன் செய்தனர். இளையான்குடிமாறநாயனார் வறுமை வந்துற்ற போதும் மனச்சோர்வு அடையாது சிவனடியாருக்கு அமுதளித்தார். இதனைப் பெரிய புராணப் பாடலில்

"அன்பனே அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என் பெரும் உலகை எய்தி இரு நிதிக் கிழவன் தானே
முன் பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க என்றே அருள் செய்தான் எவர்க்கு மிக்கான்"

எனவே தொகுத்து நோக்கில் பெரியபுராணத்தில் பக்தி என்பது இறைவனை அடைவதற்குரிய வழி என நோக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புராணங்களின் சிறப்புக்கள்

சைவசித்தாந்தபண்டிதர், இந்து தர்மாசிரியர்
கலாபூஷணம், சைவப்புலவர்
திருமதி.சரோஜினிதேவி சிவஞானம் M.A.
சைவப்பிரசாரகர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

சைவசமயம் சிவசம்பந்தமுடையது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு "சிவமே சைவம்", "சைவமே சிவம்" என்ற பெருமையுடன் விளங்குவதும் ஆகும். சைவசித்தாந்த நெறிமுறைகளை உள்ஈடாகவும், உத்தம வழியாகவும் தன்னகத்தே கொண்டு விளங்குவது சைவசமயம் ஆகும். திருமூலநாயனார் திருமந்திரத்திலே "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்றார். இதே போன்று அன்புநெறி, அறநெறி, சைவநெறி, சிவநெறி, ஒழுக்கநெறி, பக்திநெறி என்பவைகளே சைவசமயத்தின் மூலாதாரக் கருவாகும். இந்த நெறி முறைகைளைத் தவறாத நிலையில் நின்று ஒழுகினால் பரமனடி சேரும் பேரின்ப நிலையினைப் பெறமுடியும். இவற்றையெல்லாம் நமக்கு "புராணக்கதைகள்" மிகவும் சிறப்பாக உணர்த்துகிறது.

சைவ சமயத்திலே "புராணம்" என்பது? வேத உபநிடதங்களில் பொதிந்து இருக்கும் உண்மைக் கருத்துக்களை அப்படியே கூறி அனைவருக்கும் அறிவுறுத்த முடியாது. ஆகையால் **வேதத்தின் நுண்பொருளை** சாதாரண மக்களுக்கு (வேதப் பொருளை) விளக்க எழுந்த கதைகளே "பதினென் புராணங்களாக" அமைந்திருக்கின்றன. பழைய கதைகளையும், வரலாறுகளையும் கூறுவதே புராணமாகும். புராணம் என்பதன் பொருள்? "புராணம்" அதாவது மிகவும் பழமையானதும், தொன்மையானதும் என்பதுவும் அல்லாமல் தெய்வீகம் பெற்று முழுவதும் புராணங்களிலே நிறைந்திருக்கின்றது. புராண படலங்களால் புராணக் கதைகளால் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அவற்றை கேள்வி ஞானத்தாலேயே விளங்கிக் கொள்ளக்கூடியதாக கதைக்களஞ்சியங்களாக அமைந்துள்ளன. புராணங்கள் சைவசமய இலக்கியங்களிலே சிறப்பிடம் பெறுபவை என்பதை நாம் உணர்வோமாக".

"புராணத் புராணம் இதி உச்சியதே" இதன் பொருள் என்னவெனில்? முழுமையானது "புராணம்" என்ற கருத்தாகும். பலதரப்பட்ட முழுமையானதும் மிகவும் பழமையானதுமான புராணங்கள் எமது முன்னோர்கள் எமக்குத் தந்தார்கள். இதனால் சைவ சமயத்தின் பெருமையையும், தத்துவங்களையும் நாம் புரிந்து கொள்வதற்கும், வாழ்க்கை நெறிமுறைகளை சிறப்பாக்கி அறவழி, அன்புவழி, அறிவியல் வழியிலே நடந்து கொள்வதற்கும் புராணங்கள் எமக்கு சிறந்த வழிமுறைகளை வகுத்துத் தருகின்றன என்பது மிகவும் உன்னதமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மையுடைதொன்றாகும். மேலும் பலதரப்பட்ட புராணங்களின் அறிவினை நாம் அறிந்து கொள்வதால் மனிதன் தூய்மைக்கும், சொல்லின் வாய்மைக்கும், செயலின் செம்மைக்கும் என அமைந்தவையே புராணங்கள் ஆகும். யாவரும் நலம்பெறத்தக்க வகையிலே புராணங்களும், இதிகாசங்களும் நிரம்பிய சமய தத்துவக் கருத்தக்களை தந்துள்ளன. இவற்றை அன்றும், இன்றும், என்றும் அழியாச் செல்வங்களாக பாதுகாத்து காக்க வேண்டியது சைவ உலகின் கடமையாகும். இவ்வகைப் புராணங்களின் தோற்றத்தினாலேயே இந்துப்பண்பாடு இன்னும் பக்திவளம் குன்றாது சிறப்புற்றிருக்கின்றது.

மேலும் புராணங்களின் வகையினையும் தொகையினையும் நாம் சற்று நோக்குவோமாயின், புராணங்கள் பதினெட்டும் வடமொழியில் எழிச்சி பெற்றிருந்தது. அவையே மகாபுராணங்கள் அல்லது ஆதிபுராணங்கள் அல்லது அஸ்டதச புராணங்கள் என்று அழைக்கப்பட்டு வந்தன. சமய வளர்ச்சியைம், சமய பக்தியையும், சமய அறிவையும் பரவச் செய்வதில் புராணங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அத்தோடு இன்றும் புராணபடணம் செய்வதும் சிறப்பம்சமாக கடைப்பிடிக்கப்படுகின்றது.

**1. பதினென் புராணங்கள் பின்வருமாறு**

| | | |
|---|---|---|
| 01. பிரம புராணம் | 07. நாரதீய புராணம் | 13. காந்த புராணம் |
| 02. பதும புராணம் | 08. மார்க்கண்டேய புராணம் | 14. வாமன புராணம் |
| 03. வைணவ புராணம் | 09. ஆக்கிநேய புராணம் | 15. மச்ச புராணம் |
| 04. சைவ புராணம் | 10. பிரம கைவர்த்தன புராணம் | 16. கூர்ம புராணம் |
| 05. பாகவத புராணம் | 11. இலிங்க புராணம் | 17. கருட புராணம் |
| 06. பவுடிய புராணம் | 12. வராக புராணம் | 18. பிரமாண்ட புராணம் |

**2. இவற்றுள் பத்து புராணங்கள் சைவ புராணங்களாகும். (10)**

**இவை சிவபுராணங்கள் எனப்படும்.**

| | |
|---|---|
| 01. சைவ புராணம் | 06. வராக புராணம் |
| 02. பவுடிய புராணம் | 07. வாமன புராணம் |
| 03. மார்கண்டேய புராணம் | 08. மச்ச புராணம் |
| 04. இலிங்க புராணம் | 09. கூர்ம புராணம் |
| 05. காந்த புராணம் | 10. பிரமாண்ட புராணம் |

8334(P)

சிவபுராணம் படிப்பதனால் சாத்வீக குணங்களே அமையும். எனவே தலை சிறந்தவை சிவபுராணங்களே! சுகத்திற்கும், ஞானத்திற்கும் இடமானது சிவபுராணங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. விஷ்ணு புராணங்கள் - 4**

01. கருட புராணம்
02. பாகவத புராணம்
03. வைணவ புராணம்
04. நாரதீய புராணம்

விஷ்ணு புராணம் படிப்பதனால் தாமச குணங்களே அமையும்.

**4. பிரம புராணங்கள் - 2**

01. பிரம புராணம்
02. பதும புராணம்

பிரம புராணங்கள் இரண்டும் இராசத குணங்களே அமையும்.

**5. சூரிய புராணம் - 1**

பிரம கைவர்த்தன புராணம்

**6. அக்கினி புராணம் - 1**

ஆக்கிநேய புராணம்

சூரிய புராணமும் அக்கினி புராணமும் முக்குண சேர்க்கையும் உடையனவாகும்.

இன்றைய காலகட்டத்தில் படிப்பதிலும், மனனம் செய்வதிலும், புராண படலம் செய்வதிலும் முதன்மையுடையதும், புராண நாயகமாக விளங்குவதும் "ஸ்கந்த புராணமாகும்" யாழ்ப்பாண மண்ணினை "கந்தபுராண கலாசாரம்" என்று கூறி வைத்தவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். இறைவனின் முக்கண்களைப் போன்று தமிழிலே முதன்மை பெற்று விளங்குவதான புராணங்கள் மூன்று. அவையாவன, பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், "கந்த புராணம்" என்பவையாகும். பதினெண் புராணங்களையும் பாடியவர் வேதவியாசராகும். வேதவியாசர் பாடியவற்றை சூதமுனிவரும் நைமிசாரணி முனிவர் போன்றோராலும் அவை பரப்பப்பட்டது என்பதுவும் அறியக் கூடியதாகவுள்ளது.

மகா புராணங்களைத் தழுவியே தமிழிலே பல உப புராணங்களும் எழுச்சி பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. பதினெண் மகா புராணங்களையும், பதினெண் உப புராணங்களையும் தவிர பெரும், பெரும் பகுதிகளாகத் தல புராணங்களும் தோன்றின. இறைவன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இடம் "தலம்" எனப்படும். தலத்தில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் பெருமையையும் தலத்திற்குரிய பெருமையையும் பாடுவது தான் தலபுராணமாகும். அத்தலத்திலே வழிபட்டு அருள்பெற்ற அருளாளர்களின் கதைகளை தலச் சிறப்போடு சேர்த்துக் காணக்கூடியதாவும் தல புராணம் அமைந்திருக்கும். பக்தியின் வளர்ச்சியும், உயர்ச்சியுமே பல தல புராணங்கள் தோன்றுவதற்கு காரணமாயின. தல புராணங்களிலே நாட்டு வரலாறு, நகர வரலாறு, ஊர் வரலாறு, மன்னர் வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை அறியக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு படைக்கப்பட்டுள்ள இத் தல புராணங்களில் அக்கால அரசியல் அமைப்பையும் ஓரளவு பார்க்கக் கூடியதா கவுள்ளது. தலபுராணங்களைப் பாடிய புலவர்கள் அக்கோயிலைப் பற்றிய பல தெய்வ வடிவங்களையும் கதை வடிவமாக விளக்குகின்றனர். எனவே தல புராணத்தின் மரபு வழியைப் பார்க்கும் போது நாட்டுப்படலம், நகரப்படலம் எல்லாம் பார்க்கக்கூடியதாகவும், நாட்டு வரலாறுகளையும் அறியமுடிகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் முறையாக அமைத்த ஆலயமே பக்தர்களை எல்லாம் கவர்ந்திருளுக்கும் ஆலயமாக விளங்குகின்றது. தலபுராணத்தின் மேலோங்கிய சிறப்பும், மேலோங்கிய நோக்கமும் என்னவெனில் சாதாரண மக்களிடமும் சாமானியமாக சமயத்தைப் பரப்ப வேண்டும். பக்திநெறி மென் மேலும் வளர வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு தலத்தினுடைய தல புராணங்களும் அத்தலத்தினுடைய மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பவற்றைப் போற்றும் தலபுராணங்களாகவே எழிச்சி பெற்றுள்ளன என்பது கண்கூடு.

சித்தாந்த அட்டகத்தைத் தந்த உமாபதி சிவாச்சாரியார் திருத்தொண்டர் புராணசாரம், சேக்கிழார் புராணம், திருமுறைகண்ட புராணம் என்று பல பல புராணங்களை இவ்வுலகுக்ககு தந்துள்ளார். இந்த வகையிலே பெரியோர்கள் வரலாற்றைப் பாடுவதும் எடுத்து இயம்புவதும் ஒருவகைப் புராணமாகும். பெரியார்களைப் பாடும் புராணங்களும் மிகவும் சிறப்புற விளங்குகின்றன. இதிலே அறுபத்துமூவர் அருள் உள்பாங்கினையும், பக்தி நெறியையும், வாழ்க்கை வரலாற்றையும் சேக்கிழார் பெருமான் எம் கண்முன்னே என்றும் நிலைத்திருக்கச் செய்துள்ளார் என்பதும் இந்துமக்கள் போற்றுதற்குரிய சிறப்பம்சமாகும்.

உதாரணமாக சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம், திருவாதவூர் அடிகள் புராணம் முருகதாச சுவாமிகள் பாடிய புலவர் புராணம் ஆகியவையும் இவற்றிற்கு உதாரணமாகும். இவற்றோடு இலங்கையிலுள்ள பல கோயிலகளிலும் தலபுராணங்கள் மிகச் சிறப்பாகவும், மிகவும் உருக்கத்தோடும், பக்திபூர்வமாகவும் அமைந்துள்ளன என்பது இலங்கையராகிய நாம் பக்தியுடன் நோக்கத்தக்கது. இந்து சமயத்தினுடைய சகலவிதமான வரலாற்று அம்சங்களையும் தலபுராணங்கள் விளக்கி நிற்கின்றன. தர்மம், பக்தி, சமயநெறி உண்மைகளைப் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக கதைக்களஞ்சியங்களாக எடுத்துக்கூறி விளங்க வைப்பது புராணக்கதைகளாகும். மக்களது உள்ளங்களில் பதித்து சமயத்தை வளரச்சியுறச் செய்வதனை நோக்கமாகக் கொண்ட காரணத்தால் புராண இலக்கியம் மேலும் மேலும் வளர்ச்சியுற்றது என்பது புராணங்களால் வரும் சிறப்புக்குரியது ஒன்றாகும்.

இந்த வகையில் 19ம் நூற்றாண்டின் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் திருப்பெருந்துறைப்புராணம், பட்டீசுவரப்புராணம், திருமயிலைப்புராணம் என்று பதினைந்துக்கு மேற்பட்ட புராணங்களைப் பாடியுள்ளார். புராணங்களை அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியவர் இவரென்பது இங்கே நாம் மனதில் இருத்த வேண்டிய விடயமாகும். அத்தோடு அவர் ஈழத்து தமிழறிஞர் என்பதும் நாம் எம் மனதில் இருத்தி எண்ணிப் பார்க்கக்கூடிய விடயமாகும். அது மட்டுமல்லாது அவர் பாடிய புராணங்கள் முழுவதும் காலத்தால் அழியாத சிறப்புடையனவாகும். உபதேசக் கருத்துக்கள் யாவையும் அடங்கியவையாகவும் காணப்படுகின்றன. புராணங்கள் பழைமை வாய்ந்த ஆதிபுராணங்கள் என்பதோடு மறைகள் கூறும் செய்திகளை வலியுறுத்திக்காட்டும் கதைகள் என்றும் கூறலாம். சிவாகமங்களிலே கருத்தாழமாகப் பதிந்துள்ள சிவனின் மகிமையை நாயன்மார்கள் நன்கு புரிந்துகொண்டு பக்தி நெறியின் மூலகங்களாகவும் அன்புநெறியின் ஆழமான கருத்துக்களாகவும் பன்னிரு திருமுறைகளையும் நமக்கு தருவதற்கு "புராண வரலாறுகளே" மூலக்கருவாக அமைந்திருந்தன.

இறைவனின் மகிமையை கூறும் புராணங்களில் மேலோங்கிதமானது என்னவெனில் ஐவகை நிலங்களிலும் உள்ள ஆலயங்களின் புராண வரலாறுகளை நாம் நேரே சென்று பார்த்தது போன்றே ஐவகை நிலங்களையும் இலக்கிய நயம் சொட்டச் சொட்ட பக்திலயம் பேணத்தக்க வகையில் எடுத்துரைக்கின்றன. இந்த வகையிலே புராணங்கள் மக்கள் மனதைப் பண்படுத்தி இறையின் தனிப்பெரும் கருணை பேற்றினை பெற வைக்கின்றன. மேலும் புராணங்களில் வரும் கதைகளின் சாராம்சங்களை தெய்வங்களின் தெய்வீக மகிமைகளையெல்லாம் சிற்பக் கலைஞர்கள் கருத்தமைவோடு சிறப்புற சிற்பங்களிலே பதிக்கின்றார்கள். புராணங்களுடாக வெளிப்படுத்தப்படும் இந்துப் பண்பாட்டுக் கருத்துக்கள் சமய வளர்ச்சியிலே போற்றுதற்குரியதாகும். எனவே சிற்பக்கலை வண்ணமும் புராணங்களைத் தழுவியதாகவே அமைகின்றது எனலாம். "புராணம்" பஞ்ச இலட்ஷணம் என்பது கோட்பாடு. அதாவது ஐந்து இலட்சணங்கள் ஒரு புராணத்தில் அமைந்திருத்தல் வேண்டும். ஆனால் மகா புராணங்களில் குறிக்கப்படும் இலட்சணங்கள் பத்து. அவையாவன,

| | | |
|---|---|---|
| **01.** சர்க்கம் | - | சிருஷ்டி பற்றிக் கூறுவது |
| **02.** பிரதிசர்க்கம் | - | மீள் படைப்பு |
| **03.** வம்சம் | - | தெய்வ பரம்பரை |
| **04.** மன்வந்தரம் | - | மக்களுடைய காலம் |
| **05.** வம்சானு சரிதம் | - | அரச வரலாறு |
| **06.** விருத்தி | - | தொழில் |
| **07.** ரக்ஷா | - | தெய்வங்களின் அவதாரம் |
| **08.** கேது | - | அவ்வியத்தமான உயிர் |
| **09.** துயர்ஷயா | - | பிரமம் |
| **10.** முத்தி | - | வீடுபேறு என்பனவாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே புராணங்களில் கூறப்பட்ட சமயநிலை, தத்துவநிலை, கலையின் முக்கியத்துவம், அறத்தின் முக்கியத்துவம் என்பவற்றோடு! தானம், தவம், விரதம், மூர்த்தி, தலம், தீர்த்தம், சிரார்த்தம் முதலியவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் எமது இந்து சமயப் பண்பாட்டில் புராணங்கள் "பூர்வீக புராண பூரணமே" ஆகும். சமய தத்துவங்கள், சமயக் கோட்பாடுகள் எல்லாவற்றிற்கும் கருவூலங்களாக இருப்பவை மகாபுராணங்களே ஆகும். புராணங்கள் புராதனமானவை என்றாலும் புத்தம் புதிதாகவே இந்துப் பண்பாட்டில் மிளிர்கின்றன. புராணங்களை கற்றோரும், மற்றோரும் போற்றுகின்றனர் என்பதும் என்றுமே காணக்கூடியதாக இருக்கும் என்பதும் உண்மையாகும்.

"போற்றி போற்றி புராணகாரணா"
போற்றி போற்றி சயசய போற்றி!

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஆறுமுகநாவலர் எழுதிய கண்டன நூல்கள்:- சைவதூசன பரிகாரம், வச்சிரதண்டம், சுப்பிரபோதம்.

ஆறுமுகநாவலர் எழுதிய வசன நூல்கள்:- சிவாலய தரிசன விதி, பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண சூசனம், முதலாம் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம்.

ஆறுமுகநாவலர் எழுதிய வினாவிடை நூல்கள்:- முதலாம் சைவ வினாவிடை, இரண்டாம் சைவ வினாவிடை, தமிழ் இலக்கண வினாவிடை முதற் புத்தகம், தமிழ் இலக்கண வினாவிடை இரண்டாம் புத்தகம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அமைத்த பாடசாலைகள்

வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை - 1848

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை - 1864

வண்ணார்பண்ணை சைவ ஆங்கிலப் பாடசாலை - 1872

ஆறுமுகநாவலர் அமைத்த அச்சியந்திர சாலைகள்

இலங்கை - வண்ணார்பண்ணை - சைவப்பிரகாச வித்தியானுபாலன அச்சியந்திர சாலை.

இந்தியா - சென்னை - சைவப்பிரகாச வித்தியானுபாலன அச்சியந்திர சாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சிவாயநம"

# செய்யுள் இலக்கணம் அகவற்பாவும் அதன் வகையும், இனமும்

சைவப்புலர் வ.தயாபரசிவம்
ஓய்வுநிலைப் பொறியியலாளர்
நிர்வாகசபை உறுப்பினர்

செய்யுளின் உறுப்புக்கள் பற்றி விபரத்தினையும், வெண்பாவும், அதன் வகைகள், இனங்கள் பற்றிய விபரத்தினையும் சைவநாதம் - 5 இலும் சைவநாதம் - 6 இலும் குறிப்பிட்டிருந்தோம்.

செய்யுளின் உறுப்புக்களாவன,

1. எழுத்து
2. அசை
3. சீர்
4. தளை
5. அடி
6. தொடை

செய்யுளின் வகைகளாவன

1. பாவும்
2. பாவினமுமாம்

பா :

1. வெண்பா
2. அகவற்பா (ஆசிரியப்பா)
3. கலிப்பா
4. வஞ்சிப்பா

என நான்கு வகைப்படும்

பாவினம்

1. தாழிசை 2. துறை 3. விருத்தம் என மூன்று வகைப்படும்.

இவை மூன்றையும் பா நான்குடனும் உறழ பாவினம் (4x3=12) பன்னிரண்டாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. வெண்தாழிசை | 4. ஆசிரியத்தாழிசை | 7. கலித்தாழிசை | 10. வஞ்சித்தாழிசை |
| 2. வெண்துறை | 5. ஆசிரியத்துறை | 8. கலித்துறை | 11. வஞ்சித்துறை |
| 3. வெளிவிருத்தம் | 6. ஆசிரியவிருத்தம் | 9. கலிவிருத்தம் | 12. வஞ்சி விருத்தம் |

**குறிப்பு:-** செய்யுளின் உறுப்புக்களில், எழுத்து, அசை, தொடை என்னும் மூன்றும் எல்லாப் பாக்களுக்கும் பாவினங்களுக்கும் பொது, சீர், தளை, அடி என்னும் மூன்றுறுப்பினைக் கொண்டே பா வேறுபாடுகள் அமைவதாகும்.

1. வெண்பா - செப்பலோசை உடையது.
இருவர் உரையாடல் போன்ற ஓசை.

2. அகவற்பா (ஆசிரியப்பா) - அகவல் ஓசையுடையது.
ஒருவர் பேசுதல் போன்ற ஓசை, சொற்பொழிவாற்றுதல் போன்ற ஓசை.

3. கலிப்பா - துள்ளலோசை உடையது.
கன்று துள்ளினாற் போல் சீர் தோறும் துள்ள வருவது. அதாவது தாழ்ந்தும் உயர்ந்தும் வருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வஞ்சிப்பா - தூங்கலோசை உடையது.

சீர் தோறும் துள்ளாது தூங்கி வருவது. தாழ்ந்தே வருவது.

இருவகை வெண்தளையால் வருவது - செப்பலோசை

இருவகை ஆசிரியத்தளையால் வருவது - அகவலோசை

கலித்தளையால் வருவது - துள்ளலோசை

இருவகை வஞ்சித் தளையாலும் வருவது - தூங்கலோசை

## அகவற்பாவும் அதன் இலக்கணமும்

அகவல், ஆசிரியம் ஒருபொருட் சொற்கள். நாற் சீரான் வரும் அளவடி யதாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவியும், பிறதளை மயங்கியும் கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் இரு சீரும் கலவாது மூன்று முதலிய பல அடிகளாதல் வருவது அகவற்பாவிற்கு பொது இலக்கணமாகும்.

1. கனிச்சீர் ஒழிந்த ஏனைய எட்டுச்சீரும் வரும்.
2. இருவகை வஞ்சித்தளையும் அல்லாத ஏனைய ஐந்து தளையும் வரும்.
3. நெடிலடி, கழிநெடிலடியும், ஏனைய மூன்றடியும் வரும்.
4. ஆசிரியப்பா "ஏ" காரத்தில் முடியும்.
5. ஆசிரியப்பா மூன்றடி முதல் ஆயிரம் அடிகளாலும் நடைபெறும்.

ஆசிரியப்பாவின் வகைகள்

1. நேரிசை ஆசிரியப்பா
2. இணைக் குறளாசிரியப்பா
3. நிலை மண்டில ஆசிரியப்பா
4. அடி மறி மண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பா வினங்கள்

1. ஆசிரியத்தாழிசை
2. ஆசிரியத்துறை
3. ஆசிரிய விருத்தம்

1. நேரிசை ஆசிரியப்பா

எல்லாவடியும் அளவடியாகி வந்து (நாற்சீரடியாக) ஈற்றயலடி (கடைசிக்கு முதலடி) சிந்தடியாக (முச்சீரடியாக) வருவது.

உதாரணம்:- பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வீாசக மதற்கு வாக்கியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசக லல்கும் வேய்த்தோளிடத் தவளே     என வரும்.

**2.** இணைக் குறளாசிரியப்பா

ஈற்றடியும் முதலடியும் ஒத்து நடுவடிகளில் ஒன்றும் பலவும் ஒருசீரும் குறைந்து வரும் அஃதாவது நேரிசை ஆசிரியப்பாவின் கண்ணே இடையிடையே குறளடியும் சிந்தடியும் வருவது.

நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர் பொல்லாதே     என வரும்.

**3.** நிலை மண்டில வாசிரியப்பா

எல்லா அடிகளும் அளவொத்த நாற்சீர் பெற்று வரும் பொழிப்பு மோனையும் பெற்றும் வரும்.

**4.** அடிமறி மண்டில ஆசிரியப்பா

எல்லா வடியும் அளவொத்து எவ்வடியை முதனடுவிறுதியாக உச்சரித் தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பக் கொண்டு வரும்

உதாரணம்:- தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே     என வரும்.

அகவற் பாவினம்

**1.** ஆசிரியத் தாழிசை

**2.** ஆசிரியத் துறை

**3.** ஆசிரிய விருத்தம்

**1.** ஆசிரியத் தாழிசை

எனைத்தும் சீரானும் தம்முள் அளவொத்த மூன்றடியதாய் தனித்தேனும் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி யேனும் வரும்.

உதாரணம்:- சந்தமு மாகியச் சந்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னனந்தன் கண்ணே
தனித்து வந்த ஆசிரியத் தாழிசை.

**2.** ஆசிரியத்துறை

எனைத்துச் சீரானும் வருமடி நான்குடையதாய் ஈற்றடியலடி குறைந் தேனும், முதலடியும் மூன்றாமடியுங் குறைந்தேனும் வரும். அவ்வாறு வருமிடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடை மடங்கியும், மடங்காதும் வரும்.

3. ஆசிரிய விருத்தம்

அளவொத்த கழிநெடிலடி நான்கினால் வரும். (ஐந்து சீருக்கு மேல்)

1. அறுசீர் விருத்தம் - அறுசீர்க் கழிநெடிலடி

2. எழுசீர் விருத்தம் - எழுசீர்க் கழிநெடிலடி

3. எண்சீர் விருத்தம் - எண்சீர்க் கழிநெடிலடி

4. ஒன்பதின்சீர் விருத்தம் - ஒன்பதுச் சீர் கழிநெடிலடி

5. ஒன்பதின் மிகக் சீர் - ஒன்பதின் மிகக் கழிநெடிலடி

## தொகையடியார்கள் ஒன்பதின்மர்

திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணம் கூறும் தொகையடியார்கள் ஒன்பது வகையினர் ஆவர். இதனை சுந்தரர் தனது திருத்தொண்டத் தொகையில் முதலில் பாடியுள்ளார்.

01. தில்லைவாழ் அந்தணர்கள் (மூவாயிரவர்)
02. பொய்யடிமை இல்லாத புலவர்கள்
03. பத்தராய்ப் பணிவார்கள்
04. பரமனாகிய சிவனையே பாடுபவர்கள்
05. சித்தத்தை சிவன் பால் வைத்தவர்கள்
06. முழுநீறு (திருநீறு) பூசிய அடியார்கள்
07. முப்போதும் திருமேனி தீண்டுவார்கள் (சிவனது திருவுருவத்தைத் தொட்டு அபிஷேகம் அலங்காரம் செய்து வழிபடுபவர்கள்.)
08. திருவாரூர் பிறந்தவர்கள்
09. அப்பாலும் அடிசார்ந்தார்கள்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் எழுதிய நூல்கள் 24 ஆகும். உதாரணம் சைவபோதம் முதற்புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம் முருகனின் திருப்பெருவ வடிவம் திருவருட்பயன் உரை, ஆறுமுகநாவலர்.

திருவிசைப்பா பாடிய ஒன்பது பேர்

திருமாளிகைத்தேவர், திருவாலியமுதனார், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், புருடோத்தநம்பி, பூந்துருத்திநம்பி, சேதிராயர், சேந்தனார், வேணாட்டடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சிவமயம்"

# சைவசித்தாந்த அடிப்படையில் நாத ஒலியின் நுண்பொருள்

சைவசித்தாந்த பண்டிதர்
சைவசித்தாந்தரத்தினம், சைவப்புலர்
திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம் M.A.
சமயப் பிரசார அமைச்சர்

## அறிமுகம்

தாய்ச் சமயமும் மூத்த சமயமுமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது சைவசமயம். கூத்தப்பெருமான் உயிர்களுக்காக உலகத்தைப் படைக்க வேண்டும் என்னும் திருவுள்ளத்தோடு பரமானந்தத் தாண்டவத்தை ஆடத் தொடங்கினார். அவரது கையில் ஏந்திய உடுக்கையில் இருந்து பதின்நான்கு வகை யான ஒலிகள் உண்டாயின. அவ் ஒலிகளே எழுத்துக்களுக்கெல்லாம் பிறப்பிடமா கும். எழுத்துக்களை முதலாகக் கொண்டு இயங்கும் மொழிகளுக்கெல்லாம் பிறப்பிடமும் இதுவே. அதிலிருந்து மொழிக்கு வரையறையாகிய இலக்கணமும் வந்தது. இவ்வுடுக்கை ஒலியை அடிப்படையாக வைத்தே பாணினிமுனிவர் வடமொழிக்கு இலக்கணம் வகுத்தார் என வரலாறு உண்டு. உலகப் படைப்பிற்கு இறைவனே முதற்காரணம். ஒலியும் ஒளியும் இணைந்து இயங்குகின்றன. அவ்வொலி உலகே, பொருளுலகிற்கு அடி என்பதும் அறியப்படுகிறது. அகத்தியர் கூத்தப்பெருமானின் ஒலி அமைப்பிலே இலக்கணங்களைக் கற்றார். இக்கருத் தையும் வரலாறு விளக்குகின்றது.

ஒலி ஆகாயத்தின் காரியம். பெருமானின் திருக்கரத்திலுள்ள துடி பிரகாச வடிவினதாதலால் அதிலிருந்து முதன்முதல் அதன் வழித்தாகிய தொழில்களும் படைக்கப்பட்டன. இக்கருத்தை வலியுறுத்த "மொழி முதற் காரணமாம் நாத காரிய ஒலி எழுத்து" என்ற இலக்கண விளக்க சூத்திரமும், "நாதப்பறையினர்", "பருமிக்க நாதப்பறை" என்ற திருவாசகப் பதிவும் நினைவுகூரப்படுகிறது. சைவமும் தமிழும் இரு கண்களென்பது இலக்கியத்தில் நனிநாகரிகமாக கூறும் வழமை. அதை நீள நினைவோமானால் எழுத்தின் முதலெழுத்து "அ" அது வாக்கின் விருத்தியாக இல்லாது சூக்குமையாக இருக்கும். இது பிராணவாயு கூடும்போது ஓங்காரம் எனும் எழுத்தாகிறது. இதை சைவம் திருவாசி என்கிறது. அதை உண்மை விளக்கப் பாடலிலும் "ஓங்காரமே நல் திருவாசி" (34) என திருவைந்தெழுத்தின் விளக்கத்தை காட்டுகிறார்.

## ஒலியின் தோற்றம்

மனிதன் தன் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளை வெளிப்படுத்த ஒலிகளைப் பிறப்பித்தான். இசைக்கு ஆதாரமானவையும் ஒலிகளே. இவ்வாறு ஒலிகள் தோன்றக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் வெவ்வேறு விதமானாலும் தோன்றிய பொருள் ஏழு ஒலி நிலைகளாகும். இதன் வழியில் நீண்ட பண்பாட்டுக் கலையும் கலாசாரமும் இசைத்தமிழை ஆதாரமாகக் கொண்டமைந்தன.

ஒலியினை ஒருங்கே முறைப்படுத்திய போது, இன்னொலி என்னும் இசை பிறந்ததை கண்ட மனிதன் இவை ஓரிரு சுரங்களைக் கொண்டிருந்ததாக அறிந்தான். பின்பு அவை 3, 4, 5 சுரங்களைக் கொண்டதாக பண்டைக் காலத்தில் அமைந்தன. பிற்காலத்தில் இரு ஒலி நிலைகள் இவற்றுடன் சேர்ந்து ஏழிசையாகின. இதை அடிப்படையாகக் கொண்டே 2ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் எழுதப் பட்ட சிலப்பதிகாரப் பண்களும், அதனால் உருவான பாலைகளும் இசை உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டன. அதற்கு முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயரிட்டன. இந்த ஏழிசைகளும் தான் அ, இ, உ, எ, ஐ, ஒ, ஔ என்ற எழுத்துக்களால் குறிக்கப்பட்டன. இந்த ஏழு ஒலி நிலைகளை அடிப் படையாகக் கொண்ட ஒரு ஒலித்தொகுதிக்கு "பண்" எனப் பெயரிடப்பட்டது. பண்டைக்கால தமிழிசையில்

1. செம்பாலைப் பண்
2. படுமப்பாலைப்பண்
3. செவ்வழிப்பாலைப் பண்
4. அரும்பாலைப் பண்
5. கோடிப்பாலைப் பண்
6. விளரிப்பாலைப் பண்
7. மேற்செம்பாலைப் பண்

ஏழு ஸ்வரமான ஒலித் தொகுப்பை பண் என்றும்,

ஆறு ஸ்வரமான ஒலித் தொகுப்பை பண்ணியம் என்றும்

ஐந்து ஸ்வரமான ஒலித் தொகுப்பை திறம் என்றும்

நான்கு ஸ்வரமான ஒலித் தொகுப்பை திறத்திறம் என்றும்

இப்பரிணாம வளர்ச்சியின் கடைவாயிலில் யாழ் நூல் தந்த விபுலானந்த அடிகளார் திருமுறையின் கண் காணப்பட்ட மொத்தப் பண்கள் நூற்று மூன்று என தமது யாழ் நூலில் குறிப்பிட்டுள்ளார். பரிமேலழகரும் தமது உரையில் முற்காலப் பண்கள் 103 எனக் குறிப்பிட்டுள்ளார். இவ் ஏழு அடிப்படை ஒலி நிலையும் தற்கால கரகரப்பிரியா இராகத்தை ஒத்ததாக கூறப்படுகிறது. இந்த ஏழு ஒலிநிலைத் தொகுப்பை மூர்ச்சனை என்றும் பெயர் வழங்கப்பட்டது. அவ்வாறான ஓர் மூர்ச்சனையிலிருந்து கிருக பேத முறையில் ஒலி நிலைகள் அமையப்பெற்று வேறு பல மூர்ச்சனைகள் பெறப்பட்டன.

## இலக்கண நூலில் நாத ஒலி (ஓசையின் தோற்றம்)

எழுத்துக்கு இலக்கணம் கூறும் நூல்கள் அவற்றை ஒலிவடிவம், வரிவடிவம்" என இரண்டாகப் பகுக்கின்றன. இலக்கண ஆசிரியர்கள் ஒலி வடிவம் என்பதில் ஒலி என்பதை "த்வனி" என்னும் சொல்லின் தமிழ் சொல்லாக கையாண்டுள்ளனரே அன்றி பொருள்தரும் ஓசை என்று பகுப்பில் அதனைக் கையாளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெட்டெழுத்தேழும் ஓரெழுத் தொருமொழி" (தொல் - எழுத்.மொழி மரபு 10) என்ற தொல்காப்பிய நூற்பா நெட்டெழுத்துக்கள் பொருள்தரும் சொற்களாகவும் இயங்குவதைச் சுட்டுகிறது. பொருள் தருவனவற்றை "மொழி" எனக் குறித்தார் தொல்காப்பியர். நன்னூலார் பொருள் தருவனவற்றை "பதம்" எனக் குறித்தார். "பொருள்தரின் பதமாம்" (நன்னூல் பதவியல் பாடல் - 1) என்றார். இப்பதவியலுக்கு மேற்கோள் ஆரியம் என்பார்.

தொல்காப்பியர் பிறப்பியலில் ஆறு இடங்களில் வளி (காற்று) என்று எழுத்தை உச்சரிக்கும் ஓசையைக் குறிக்கின்றார். அவற்றில் மூன்று இடங்களில் வளி, இசை என்று வருகின்றது. அவற்றுள்ளும் இரண்டு புறத்தே கேட்கும் ஓசையையும் அகத்தே எழும் ஓசையையும் சுட்டுகிறது. அகத்து ஓசையாவது உந்தியில் இருந்து எழும் காற்று தலைக்குச் சென்று நெஞ்சுக்கு மீண்டு, மிடற்றுக்கு (கழுத்தின் கண்டத்திற்கு) வரும்வரை உள்ள ஓசையாகும். அகத்து ஓசையை தொல்காப்பியர், "அகத்து எழு வளி இசை" (தொல் - எழுத்ததிகாரம் பிறப்பியல் பால் 20) எனக் குறிக்கிறார். இதுபற்றி வேதத்தில் உள்ளது எனவும், அவர் குறிப்பிடுகிறார். உந்திக் காற்று "பரா" எனப்படும்.அதைத்தான் "அனாகதம்" என்ற சொல் உணர்த்துகிறது. உந்திக்காற்று தலை, நெஞ்சு, மிடறு ஆகிய இடங்களில் இயங்கும் உள் சுழற்சிகளில் இடத்திற்கேற்றவாறு பைசந்தி, மத்திமை, வைகரி என்ற பெயர்களைப் பெறும். இச் செய்திகள் வேதத்தில் உள்ளது என்பதை (இருக்கு, அதர்வண) தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பிறப்பியல் 20 ஆம் பாடலில்,

"எல்லா எழுத்தும் வெளிபடக் கிளந்து,
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்,
பிறப்பொடு விடு வளி உறழ்ச்சி வாரத்து அகத்து எழு வளி
இசை அரில்தப நாடி அளபின் கோடல் அந்தணர் மறைத்தே".

என அறிவிக்கிறார். அதாவது வேதம் சொன்ன உண்மை அரில் (குற்றம்) தப (அழிந்தொழிய) நாடி (ஆராய்ந்து) சொல்லப்பட்ட உண்மையாகும் என்பது தொல்காப்பியரின் கணிப்பாகும். நாம் எழுப்பும் ஓசையின் அடிப்படைத் தோற்றம் உந்தியில் உள்ள அநாகத நிலையான - பரா - காற்றுச் சுழல் என்பது இதனால் பெறப்படுகிறது.

பின்னர் வந்த பவணந்தியார் சமணர் சமணம் வேத மறுப்புச் சமயம். "முன்னோர் நூலின் வழியே நன்நூல் பெயரின் வகுத்த", அவர் முன்னோர் நூலின் முக்கிய பகுதியை கூறாது விடினும் ஓசைத் தோற்றத்திற்கான ஆதி காரணத்தை "மொழி முதற் காரணம் ஆம் அணுத்திரள் ஒலி" (நன்னூல் எழுத்தியல் 3வது பாடல்) என்கிறார். அணுத் திரட்சியே ஆதி காரணம் என்பது இதன் கருத்து. இதற்கு குறிப்புரை செய்த தண்டபாணி தேசிகர் அவர்கள் அணுத்திரள் ஒலி - அணுத்திரளின் காரியமுமாகிய ஒலி. அதாவது சூக்கும நாதம், ஒலி - பரு ஒலி. அதாவது தூல நாதம், நாதமும் அதன் காரியமுமாகிய ஒலி என்பார் இராமானுஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிராயர். (நன்னூல் - எழுத்தியல் - குறிப்பு 3) இதனால் சூக்கும, தூல நாதங்களே ஓசைத் தோற்றத்திற்கு ஆதி காரணம் என்பது பெறப்படுகிறது. ஒலி என்பது நாதத்தைக் குறிக்கும் சொல் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அணுத்திரள் ஆதிகாரணம். அதற்கும் மேலாக அநாதி காரணம் என்பது ஒன்றுண்டு. அக்கருத்துப்பற்றி சங்கரநமசிவாயர் அநாதி காரணமாகிய மாயையினை ஈண்டு கூறாது ஆதிகாரணமாகிய செவிப்புலனாம் அணுத்திரளை எழுத்திற்கு முதற்காரணம் என்றார். இவ்வாசிரியருக்கு மாயை உடன்பாடன்று (நன்னூல் எழுத்தியல் விருத்தி 3) என்று நனி நாகரிகமாகக் குறிப்பிட்டார். எனவே ஒலி, ஓசைகட்கு அநாதி காரணம் மாயை என உணரலாம். அருட்பெருங் கவிஞர் ஸ்ரீ குமரகுருபரர் எழுத்தின் சப்தம் முதலியன ஓசை என்றும், நாதமே ஒலி என்றும் தெளிவாகக் கூறுகையில்,

“ஒருவருமுணராப் பரம வீட்டில்
இருள் அறை திறந்த பெருவெளி மண்டபத்து
உயர் நாதாந்தப் பெருவெளி அமளியில்
புளகம், மெய் போர்ப்ப, மொழி தடுமாற
உள்ளொலி நாதப் புள் ஒலி முழங்க
ஞான ஆரமுதப் பானம் அது ஆர்ந்து
கருவிகள் கழன்ற பரசவமாகிப்
பரமானந்தப் பரவையுள் படிந்து
பேரா இயற்கை பெற்று இனிது இருப்ப
ஆரா இன்பம்...” (பண் - 11)

இதில் “உள்ளொலி நாதப் புள்ளொலி” என நாதத்தை ஒலி எனக் கூறவேண்டும் என இருகாற் கூறி வற்புறுத்தியுள்ளார். நாதம், நாதாந்தம் என இரண்டும் இப்பகுதியில் வருகின்றன. அவை ஒலி எலாம் என்பதன் விளக்கமாகும்.

கந்தர் கலி வெண்பாவில் கூட,

“நாதமும் நாதாந்த முடிவும் நவை தீர்ந்த
போதமும் காணாத போதமாய்” (கண்ணி - 2)

நாதங்கள் பல வகையின என்பதை கவிஞர் அடுத்த பாடலில,

“நாதாதிகட்கு அணுபூதா தாலோ தாலேலோ”
(முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் முதல் தாலாட்டில் 10ம் பாடல்)

எனும் குறிப்பாலும் உணரலாம். எனவே நாதம் வேறு நாதாந்தம் வேறு. நாம் 36 தத்துவங்களில் முதல் தத்துவத்தைக் குறிக்கும். (நாத தத்துவம்) நாதாந்தம் அந்த தத்துவத்தில் தோன்றும் பிரணவம் ஆகிய ஓங்காரத்தைக் குறிக்கும்.

எழுத்துக்களின் சப்தத்தை ஓசை என்றே கொள்ள வேண்டும் என்ற தீர்ப்புரை கலிவெண்பாவின் (118 - 119) கண்ணிகளில்,



8334(P)
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆசுமுதல் நாற் கவியும் அட்ட அவதானமும் சீர்ப்
பேசும் இயல்க் காப்பியத் தொகையும் – ஓசை
எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து”

எனக் கூறுவதில் எழுத்தின் சப்தம் ஓசை தான் எனப்படுகிறது.

## பிரணவ ஒலி

சைவ சித்தாந்த அடிப்படையில் நோக்குமிடத்து பிரபஞ்சத்தில் ஐம்பூதங்களில் ஆகாயம் ஒன்று. அதன் சப்தந்தான் பிரணவம் எனும் ஒலி. இதில் வடிவ எழுத்து “ஓம்”. இந்தப் பிரணவ கலை சப்தப் பிரபஞ்சத்திற்கு மூல காரணம். பிரணவத்தை பிரசாத நெறி எனவும் கூறுவர். பிரணவம் என்ற சொல் “என்றும் புதுமையாக இருப்பது” என்ற பொருளுடையது. பிர – என்பதற்கு “அதிகம்” என் றும், நவம் – “துதிக்கப்படுவது” என்றும் பொருள்படும். இது அசபை எனப்படும். அசபை என்றால் “செபிக்காத, பேசாத மந்திரம்”. இந்தப் பிரணவம் இரு வகைப்படும். ஒன்று முக்கலைப் பிரணவம், மற்றையது ஐங்கலைப் பிரணவம் எனப்படும். முக்கலைப் பிரணவம் எனப்படுவது அகார, உகார, மகாரம் எனப்படும். ஐங்கலைப் பிரணவம் அகார, உகார, மகார, நாதம், விந்து எனப்படும். முக்கலைப் பிரணவம் “வியஷ்டிப் பிரணவம்” என்றும் ஐங்கலைப் பிரணவம் “சமஷ்டிப் பிரணவம்” என்றும் அழைக்கப்படும். வியஷ்டிப் பிரணவம் உடம்பின் மாட்டு நிகழ்வது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைக் குறிப்பது. சமஷ்டிப் பிரணவம் உயிரின் மாட்டு நிழ்வது. படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றிற்கு மேல் மறைத்தல், அருளல் ஆகிய தொழிலைக் குறிப்பது. பிரணவமே மற்றைய மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் சூக்குமமானது. எனவே அது அதி சூக்கும பஞ்சாட்சரம் எனப்படும். இதனை நோக்க திருவைந்தெழுத்தாகிய பஞ்ச (ஐந்து) அட்சரங்கள் – எழுத்து – அழியாத எழுத்து தூல பஞ்சாக்கரம் “நமசிவாய” ஆகும். சூக்கும பஞ்சாக்கரம் “சிவாயநம” ஆகும். இப்பிரணவ சப்த பிரபஞ்சத்திகு மூல காரணமாக அமைவது நமது உடம்பில் உறைந்திருக்கின்ற வெளிப்படாத சக்தியேயாம். அதாவது சராசரி நாம் நாளொன்றிற்கு இருபத்தோராயிரத்து அறுநூறு தடவை மூச்சு விடுகின்றோம். அது விஞ்ஞான அடிப்படையில் கூட ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பகலில் பத்தாயிரத்து எண்ணூறு இரவில் பத்தாயி ரத்து எண்ணூறு. மூச்சு நடனம் நமது இதயத்தானத்தில் நடைபெறுகின்றது. இவற்றில் நூறில் ஒரு பங்கு தான் அஷ்டோத்திர சத (108) மந்திரம் எனப்படுவது. (108 x 100 = 10800)

நாத ஒலியின் தோற்றமாக உள்ள வாக்குகளின் வகை ஐந்தாகும். அதாவது சூக்குமை, பைசந்தி, மத்திமை, சூக்கும வைகரி, தூல வைகரி என்பனவாகும். அவை அகரம், உகரம், மகரம், விந்து, நாதமாம். பஞ்சகலை வடிவினவாய் நின்று ஓரோ ஒன்று ஓரோ ஒரு கருவிகளைச் செலுத்தி உடன் நிற்கும் எனவும், அவ் அகாரம் முதல் ஐந்தினையும் கூட்டி உச்சரிக்குமாறு நாடுங்கால் பிரவணரூபமாம் எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் ஆகலின் சூக்கும பஞ்சாட்சரம் ஐந்தும் ஒன்றிற்கு ஒன்று முறையே காரணமாய் நாத கலை மூலகாரணமாம் எனவும் இங்ஙனம் பிரணவ ரூபமாகிய வாக்குகளினின்றும் வன்னம், பதம், மந்திரம் எல்லாம் தோன்றுதலிற் சப்தப் பிரபஞ்சம் அனைத்திற்கும் மூலகாரணம் பிரணவமாம் எனவும் சூக்கும பஞ்சாக்கரமே தூல பஞ்சாக்கர ரூபமாக நிற்பனவாகலின் அவையும் அவ்வியல் பினவாமெனவும் இங்ஙனம் கருவிகளை செலுத்தும் சூக்கும பஞ்சாக்கரம் "ஓம்" என அசபையாய் பர்ணமித்து பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நின்று உணர்த்து மெனவும் அதனாலே கணந்தோறும் நினைப்பு மறைப்புமாகிய சகல கேவலங்கள் மாறிமாறி நிகழும் எனவும் அங்ஙனம் மகா சகலத்தின்கண் (மேலால் அவத்தை அதாவது யோகாவத்தை கணந்தோறும் மாறி மாறி நிகழும் சகல கேவலங்களாய் உணர்வு உதித்தும் ஒடுங்கியும் வருமாறு சமுத்திரத்தின் கண் புதிது புதிதாய் அலை தோன்றியும் ஒடுங்கியம் வருமாறு போலுமெனவும். எனவே "உதிக்கும் கடல் திரையொத்து" என்றது.

பிரணவத்துள் ஆயகலைகள் அறுபத்து நான்கும் அடங்கும். 64 கலைகளுள் முதலாவது பிரணவம். அகர கலையில் 10 கலைகளும், உகர கலையில் 16 கலைகளும், மகர கலையில் 24 கலைகளும், விந்து கலையில் 4 கலைகளும், நாத கலையில் 10 கலைகளுமாக உள்ளது. சிவன் ஒருவனே என்பது எல்லா ஆத்மாக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். அவரவர் சிந்தனைகளுக்கு எட்டிய வகையில் பல வடிவங்களாகவும் பல மதங்களாகவும் உருவகம் செய்யப்படுகின்றது. சிவன் தனது சக்தியினால் கலா ரூபமாக உயிர்களை உடம்பில் இயங்கச் செய்கிறான்.

**நிறைவுரை**

எல்லா மந்திரங்களிலும் முதல் மந்திரம் அஞ்செழுத்து மந்திரமே. "இது மந்திர வேந்து" எனப் போற்றப்படுகிறது. நமசிவாய என்பது நாமம் ஆகிவிடுகிறது. "ஓம்" எனும் பிரணவ மந்திரத்தை சேர்த்துவிட்டால் நாமம் மந்திரமாகி விடும். அஞ்செழுத்து மந்திரத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு சொல்லைக் குறிக்கும். இவ்வுண்மையை, "பதத்து எழு மந்திரம் அஞ்சு ஓதி" என அப்பரடிகள் கூறுவார். உயிர்கள் அநாதியே ஆணவமலத்தைப் பற்றி அறிவு, செயல்களை இழந்து கிடக்கும். உயிர்களிடத்து இறைவன் கொண்டுள்ள இரக்கம் ஒன்றே காரணமாக மாயையிலிருந்து உலகத்தைப் படைத்து உதவுகையில் மாயையை கலக்குகிறான். அவ்வாறு கலக்கும் போது ஓர் ஓசை எழுகிறது. அந்த ஓசை அஞ்செழுத்த வடிவில் எழுகிறது. எனவே எல்லா ஓசைகளுக்கும் ஒலிகளுக்கம் மூலமாய் இருப்பது அஞ்செழுத்தே என்பது பெறப்படுகிறது. "ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க" (294 சிவஞானசித்தியார்). எனவே சைவசித்தாந்தப்படி நாத ஒலியின் நுண்பொருள் அஞ்செழுத்தே என முடிந்த முடிவாகப் பெறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சிவமயம்"

# சைவசித்தாந்தத்தில் பதி உண்மை

சைவப்புலவர் சித்தாந்தரத்தினம், தர்மாசிரியர்
சாமித்தம்பி பொன்னுத்துரை (B.A.Hons)
ஓய்வுநிலை உள்ளகக் கணக்காய்வாளர்
மக்கள் வங்கி
நிர்வாகசபை உறுப்பினர்

## அறிமுகம்

சைவசித்தாந்தம் இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) என்னும் முப்பொருள்களும் உண்மையானவை, அநாதியானவை எனக் கூறுகின்றது. இதைத் திருமந்திரம்,

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதியணுகிற் பசு பாசம் நிலாவே" (திருமந்திரம் - 115)

என்னும் பாடலின் மூலம் தெளிவாகக் குறிப்பிட்டு, இறையருள் கிட்டும் போது பசுவைப் பந்தித் பாசங்கள் வலி கெட்டு ஓடி விடும் எனவும் கூறுகிறது. பதி என்னும் சிவப்பரம்பொருள் அந்தம் ஆதி இல்லாத அரும்பெரும் சோதி, நித்தியமான சத்தியப் பொருள் என்பது தெளிவு

## சைவசித்தாந்தம்

சைவசித்தாந்தம் என்பதில் சைவம், சித்தம், அந்தம் என்று மூன்று ஆழமான சொற்பிரயோகங்கள் காணப்படுகின்றன. சைவம் என்பது சிவனோடு சம்பந்தமாவது; சித்தம் என்பது சிந்தனைத் தெளிவு; அந்தம் என்பது முடிபு. "சைவத்தின் முடிந்த முடிபாகிய பதியின் உண்மையை அறுதியிட்டுக் கூறும் இறுதி முடிபே சைவசித்தாந்தம்" ஆகும்.

"சைவம் சிவனோடு சம்பந்தமாவது
சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம் தனைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே" (திருமந்திரம் - 1512)

எனத் திருமூலர் சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன் என்பதையும், அவனை அடையும் சிவானந்தம் என்னும் பேரின் நிலையே பரமுத்தியாகிய சாயுச்சியம் என்பததையும், திறம்பட எடுத்து உரைக்கின்றார்.

சைவசித்தாந்தம் என்ற சொல்லாடலைக் கூடத் திருமந்திரமே முதன்முதல் பிரயோகித்திருக்கின்றது. சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் போற்றப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருமந்திரம்,

“கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞானம் முறை முறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுள்ளோர் **சைவசித்தாந்தரே**” (திருமந்திரம் - 1421)

மேன்மை தங்கிய சிவனையே மனம் மொழி மெய்களால் தற்பரன் எனக் கண்டு உணர்ந்தவர்களே **சைவசித்தாந்தர்** என்பதற்கு அருமையான விளக்கம் தருகிறது. காமிகயாகமம் முதலாம் தந்திரத்திலுள்ள 119 ஆவது சுலோகமும் சைவ சித்தாந்தம் என்ற பதத்தினைக் கையாண்டிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பதிக் கோட்பாடு

பிரபஞ்ச அவயவப் பகுப்புக்களான தனு, கரண, புவன, போகங்களை சிவன் உயிர்களுக்கு அவ்வவற்றின் வினைகளுக்கு ஏற்பக் கொடுத்து, வினைப்பயனை நுகரச் செய்கிறான். இதன்மூலம் அவற்றின் மலவாதனைகளை மடங்கச் செய்து அவ்வுயிர்களைப் பக்குவமடையச் செய்கிறான். பக்குவமடைந்த உயிர்கள் நல்வினைகளையும், தீவினைகளையும் சமநிலையில் வைத்து நோக்கும் போது இருவினையொப்பும், அதன் மூலம் மலபரிபாகமும் ஏற்படுகின்றன. மலபரிபாகம் அடைந்ததன் காரணமாகச் சத்திநிபாதம் கைகூடி அவ்வுயிர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்து இறைவனோடு இரண்டறக் கலக்கும் அத்துவித நிலையை அடைகின்றன. இதுவே உயிர்கள் அடையும் முத்திநிலை. உயிர்களின் மீது கொண்ட பெருங்கருணையின் காரணமாகவே அவற்றிற்கு, வினைப் பயன்களுக்கிணங்கப் பிறவியைக் கொடுக்கும் முற்றறிவுள்ள பரிபூரணனே பதி என்ற உண்மையைச் சைவசித்தாந்தக் கோட்பாடு தெட்டத் தெளிவாகக் கூறுகிறது.

## மெய்கண்ட சாத்திரங்கள் கூறும் பதி உண்மை

ஆன்மாக்கள் வினைகளைப் புசிப்பதை நெறிப்படுத்தும் முதல்வனையே பதி என்று மெய்கண்ட சாத்திர முதனூலான சிவஞானபோதம் அழுத்திக் கூறுகிறது.

“அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்” (சிவஞானபோதம் சூத்.1)

இந்த உலகத்தை ஆண், பெண், அவை என்று உயிர் வர்க்கமும் சடவர்க்கமுமாக அவை என்ற சொல்லால் உணர்த்தி தோற்றம், நிலைத்தல், ஒடுக்கம் என்ற முத்தொழில்களை ஆற்றுவதற்குரிய ஒருவனையே, முதல்வனாகிய பதியையே ஒடுங்கி என்று மாதவச் சிவஞானமுனிவர் கூறுகிறார். மாயையில் அவை என்ற இவைகளை ஒடுக்குபவனான பதியை ஒடுக்கி (ஒடுங்கி) எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. சங்காரகாரணனான பதியே உலகத்தின் புனரோற்பவத்திற்குரிய முதல்வன் ஆவான் என்று இச்சூத்திரம் வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருவனோடொருத்தி யென்று உரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை, வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான் முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே"

(சிவஞானசித்தியார் சூ.1பாடல் - 1)

என்ற சிவஞாதனசித்தியார் பாடல், உலகத் தோற்றத்துக்கு ஆதியும், அந்தமுமான பதியை அநாதிமுத்த சித்துரு என்று பதி உண்மையை வலியுறுத்துகின்றது.

"அவையே தானேயாய் இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே" (சிவஞானபோதம் சூத் - 2)

என்ற சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம், அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று இறைவன் உடல் உயிர்களுடன் ஒன்றாய், சூரியனும் கண்ணொளியும் போல அவற்றிற்கு (ஆன்மசக்தி) வேறாய், பொறி புலன்களோடு உடனாய், நிமித்த காரணனாய் நிற்கும் இறை உண்மை விளக்கப்படுகிறது. இக்கருத்தைச் சம்பந்தப் பெருமான்,

"ஈறாய் முதல் ஒன்றாய் இரு ஆண் பெண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் வருவூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழோடிசை எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனாய் திருவீழிம் மிழலையே" (1.11.2)

என்ற தேவாரத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

## காரண காரியத் தொடர்

காரணம் இன்றி எக்காரியமும் இல்லை என்பது சைவசித்தாந்தக் கருத்து. "உள்ளது இல்லதாகாது; இல்லது உள்ளதாகாது" என்ற சற்காரியவாதக் கருத்துப்படி, உள்பொருளான பிரபஞ்சமான தனு கரண புவன போகங்களையும், உயிர்களையும் சிற்சக்தியின் துணையோடு பதி, மாயையிலிருந்து தோற்றுவித்து, சங்கார வேளையில் அவற்றை அம்மாயையிலே ஒடுக்குகிறான். எனவே இங்கு உள்பொருள்களாகிய மூன்று காரணங்களிலிருந்தே பிரபஞ்சமும், ஆன்மாக் களுமாகிய காரியங்கள் தோற்றம் பெறுகின்றன. அவை.

1. முதற் காரணம் - மாயை
2. துணைக்காரணங்கள் - திரோதானசத்தியும், (வினைகளும்)
3. நிமித்தகாரணம் - சிவன்

குடம் செய்வதற்கு மண் முதற் காரணமாகவும், தண்ட சக்கரங்கள் துணைக் காரணங்களாகவும், குயவன் நிமித்த காரணமாகவும் இருத்தலை வழமையான உதாரணமாகக் கொண்டு பதியையே உலகத்தின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நிமித்த காரணமாகப் பதியின் உண்மையைச் சைவசித்தாந்தம் எடுத்துக் காட்டுகிறது. இவ்வுண்மை அளவை முறை மூலங்களான காண்டல் (பிரத்தியட்சம்), கருதல் (அனுமானம்), உரை (ஆப்தவாக்கியம்) என்பவற்றின் மூலம் நிலை நாட்டப்படுகிறது.

### தாதான்மிய நிலை

"போக்குவரவு புரிய ஆணையின் நீக்கமற" நின்று சிவன் உயிர்களை நல்வழிப்படுத்துகிறான்.

"தன் நிலமை மன்னயிர்கள் சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" (திருவருட்பயன் - 2)

என்று ஆணையாகிய சக்தியுடன் இறைவன் அத்துவிதமாகப் பிரிவின்றி நின்று உயிர்களுக்கும் அருள்புரியும் தாதான்மிய நிலையையும்,

"ஆக்கி எவையும் அழித்து ஆசுடன் அடங்கப்
போற்றும் அவன் போகாப் புகல்" (திருவருட்பயன் - 4)

என்று சிவன் தோற்றம், நிலைத்தல், ஒடுக்கலைச் செய்து உயிர்களின் மல பந்தத்தை நீக்குகிறான் என்று திருவருட்பயன் சுட்டுகிறது. சக்தியோடு சிவன் சேர்ந்திருந்தே அனைத்தையும் செய்கின்றான் என்பது சைவசித்தாந்தம் காட்டும் உண்மை.

### பதி ஏகனும் அநேகனுமானவன்

சிவன் ஏகனாகவும், அநேகமானவனகாகவும் நின்று உயிர்களின் நலனைப் பேணுகிறான் என்பதைத் திருமந்திரம்

"சேயன் அணியன், பிணியிலன், பேர்நந்தி,
தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு மாயன்"
(திருமந்திரம் - 1540)

என்று விபரிக்கின்றது.

"ஏகனுமாகி அநேகனுமானவன்
நாதனுமானான் என்று உந்தீபற" (திருவுந்தியார் - 5)

என்ற திருவுந்தியார் அடிகளும்,

திருவாசகத்தில்,

"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க" (சிவபுராணம் - 5)

என்ற சிவபுராண அடியும் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

"ஈறாகி அங்கே முதல் ஒன்றாய் ஈங்கிரண்டாய்
மாறாத எண்வகையாய் மற்று இவற்றின் - வேறாய்
உடனாய் இருக்கும் உருவுடையை என்றும்
கடனாய் இருக்கின்றாய் காண்" (திருக்களிற்றுப்படியார் - 86)

என்ற திருக்களிற்றுப்படியாரிலும் இவ்வுண்மை தெரித்துரைக்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதி இலக்கணம்

பதியின் இலக்கணத்தை சைவசித்தாந்தம் பின்வருமாறு கூறுகிறது.

1. சொரூப இலக்கணம் (சிறப்பு இயல்பு)

2. தடத்த இலக்கணம் (பொது இயப்பு)

1. சொரூப இலக்கணம்

பதி எவ்வித கலப்புமின்றி, தன் உண்மையான நிலையே சொரூப நிலையாயும் - சிறப்பு இயல்பாயும் - எடுத்தாளப்படும் நிலையைச் சுத்தசிவம் என்றும், பரமசிவம் என்றும் சைவசித்தாந்தம் விளக்குகிறது. இவன் அருவம், உருவம், அருவுருவம் கடந்தவன் ஆவான். பஞ்சகிருத்தியங்கள் எல்லாவற்றையும் செய்பவனுமல்லன்.

"சிவன் உருவுமல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன்
தவம் முதல் யோக போகம் தரிப்பவனல்லன் தானே
இவை பெற இணைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே"

(சிவஞானசித்தியார் சுபக்கம் 90)

என்ற சிவஞான சித்தியார் செய்யுள் பதியின் சொரூபநிலையின் இயல்புகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. சிவப்பிரகாசப் பாடல் கூடப் பதியின் சொரூப இலக்கணத்தை ஆழமாகத் தெரிவிக்கிறது.

"பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல் பரமே யதுதான்
நிலவும் அரு உருவன்றி குணம் குறிகளின்றி
நின்மலமாக ஏகமாய் நித்தமாகி
அலகில் உயிர்க்கு உணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாயன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாகித்
திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந்துளோரே"

(சிவப்பிரகாசம் 13)

சொரூப நிலையில் பதி குணங்குறிகளற்றதாய், மல சம்பந்தமற்றதாய், அகண்டிதமாய், ஆனந்தமயமாய் இருக்கும் குணாதீதப் பொருளாகும்.

"விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய், விளங்கொளியாய்"

(சிவபுராணம் 23 - 24)

என்பார் மாணிக்கவாசகர்.

"ஊரிலான் குணங்குறிகளிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்கடவுளாய் என்னுலோ நின்றான்.

என்பது கந்தபுராணக்கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யான்" (திருவருட்பயன் - 3)

என்பது திருவருட்பயன்

2. தடத்த இலக்கணம்

உயிர்களின் உய்வுகருதிப் பதி, படி இறங்கி உருவ அருவ, அருவுருவ மேனிகளில் நவந்தரு பேதங்களைத் தாங்கிப் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் நிலை தடத்த இலக்கணமாகும். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி ஆகிய முச்சக்திகளைப் பொருந்தி, நிஷ்களத் திருமேனியாகிய அருவுருவத் திருமேனியைப் பெறும் சிவம் சிவன் என்றும், சத்தர் என்றும், இலயசிவன் என்றும், நிஷ்களசிவன் என்றும் பெயர் பெறுகிறான். இந்த இலயத்தானம்சிவதத்துவம் ஆகும். ஞானா சக்தியும், கிரியாசக்தியும் சமமாகப் பொருந்தும் நிஷ்களசகளத் திருமேனியாகிய அருவுருவத் திருமேனியைப் பெறும் போது சிவம் சதாசிவன், உத்தியுத்தர், போகசிவன், நிஷ்களசகள சிவம் என்ற பெயரைப் பெறுகிறான். இப்போகத்தானம் சாதாக்கிய தத்துவம் ஆகும். ஞானாசக்தி குறைந்தும், கிரியாசக்தி மிகுந்தும் இருக்கும் அவதரம் சகளத்திருமேனியாகிய உருவத்திருமேனி ஆகும். இந்த நிலையிற் சிவம், மகேஸ்வரன், பிரவிருத்தர், அதிகாரசிவன் என்று பெயர் பெறுகிறான். இவ்வதிகாரத்தானம் ஈஸ்வரதத்துவம் ஆகும். சிவம், மகேஸ்வரம், சதாசிவம் ஆகிய இவை மூன்றுக்கும் தம்முட் பேதம் இல்லை. சக்திகளின் தொழில் வேறுபாட்டாலே இப்பேதம் என்பது உபசார வழக்காகும். இம் மூன்று வடிவங்களும் பதியினது தடத்த இலக்கணம் ஆகும்.

"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன் (திருவருட்பயன்)

என்று திருவருட்பயன் தடத்த இலக்கணம் பற்றிக் கூறுகிறது.

மேலும் சிவஞானசித்தியார்,

"அருவமோ உருவா ரூபமானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங்கென்னின்
அருவமும் உருவாரூப மானதுமன்றி நின்ற
உருவமும் முன்றுஞ் சொன்ன ஒருவனுக்குள்ளவாமே"
(சிவஞானசித்தயார் சுபக்கம் - 58)

என்ற விளக்கத்தைத் தருகிறது. சிவப்பிரகாசமும் இங்கு விளக்கப்பட்ட தடத்த இலக்கணத்தை அருமையாகப் பாடலிற் காட்சிப்படுத்துகின்றது.

"நீடு பராசக்தி நிகழ் இச்சாஞான
நிறை கிரியை தர அதனை நிமலன் மேவி
நாடரிய கருணை திருவுருவமாகி
நவின்று பலகலைநாத விந்துவாகி
கூடுமொளி வளர்குடிலை மாயைமேவிக்
கொடுவினை கொள் தனுகரணபுவன போகம்
பீடுபெற நிறுவி அவை ஒடுக்கு மேனி
பிறங்கிய நிட்கள சகளப் பெற்றியாமே" (சிவப்பிரகாசம் 14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தடத்த நிலையிற் பஞ்சகிருத்திய கர்த்தாவாகிய பதி, குணவியல்பு உடையவனாக விளங்குகிறான்.

“கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை” (திருக்குறள் - 8)

என்ற வள்ளுவம், இறைவனை எண்குணத்தானாக வர்ணிக்கிறது.

“மறையவனை எண்குணத்தானை” (சுந்தரர் தேவாரம். 406)

என்கிறார் சுந்தரர்.

## முத்தி நிலையில் பதி

முத்தி நிலையில் இறையும் உயிரும் அத்துவிதமாக தாடலை போல் கூடிய பிரிவற்ற திருவடிசேர் முத்தியைப் பதி, உயிர்களுக்கு அளிப்பன் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. இந்த நெறி “பேதமற நின்றிவனைத் தானாக்கி வைப்பன், பெருகு சிவபோகம் எனப் பேசும் நெறி” என்று உண்மை நெறிவிளக்கமும் (6), “அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே” என்று சிவஞான போதமும் (8), “மலமகற்றித் தானாக்கி மலரடிக் கீழ் வைப்பன்” என்று சிவஞான சித்தியாரும் (253) அத்துவித அடிசேர் முத்தியை உயிர்களுக்கு அளிக்கும் பதி உண்மையை உரத்துச் சொல்லுகின்றன.

## நிறைவுரை

சைவசித்தாந்தம் கூறும் பதி அநாதி சித்தமுத்தன். காரண காரியத் தொடர்பிற் சங்கார காரணனே முதல்வன் என்ற நிலையில் நிற்பவன், சிறப்பு, பொது இயல்பில் - சொரூப இலக்கணம் உடையவனாக, குணங்குறிகள் அற்றவனாகவும் தடத்த இலக்கணம் உடையவனாக, சக்தியோடு கூடித் தாதான்மிய நிலையில் நின்று பஞ்சகிருத்தியம் செய்பவனாகவும் விளங்குபவன். முத்தி நிலையில் உயிர்களின் மலத்தினை வலியடக்கிக் காணும் உபகாரத்தையும் காட்டும் உபகாரத்தையும் செய்து அவற்றைத் தன்னோடு அத்துவிதமாகக் கலக்கச் செய்து, அப்பெருங் கருணை காரணமாகப் “பேரின்பவீடு” அளிப்பவன். இத்தகைய மேலாம் தன்மை யைச் சைவசித்தாந்தம் பதி உண்மை எனச் சிறப்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சிவமயம்"

# சைவசித்தாந்த நூல்களில் உமாபதி சிவாசாரியாரின் பங்களிப்பு

சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்
சைவப்புலவர் சங்க செயற்குழு உறுப்பினர்
(முன்னாள் சைவப்புலவர் சங்க தேர்வுச் செயலாளர்
BA, MA, MED, PGDE, PGDEM
S.L.E.A.S II பிரதிக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

சைவசித்தாந்தம் என்பது பதி பசு பாசம் எனும் முப்பொருள்கள் தொடர்பாக விளங்குவதாகும். சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் சாத்திர நூல்களாக மெய்கண்ட சாத்திரங்கள் விளங்குகின்றன. மெய்கண்ட சாஸ்திர நூல்கள் பதின்நான்கு.

திருவுந்தியர் 45 பாடல்கள் - திருவியலூர் உய்யவந்தேவ நாயனார்

திருக்களிற்றுப்படியார் நூறு பாடல்கள் - திருக்கடவூர் உய்யவந்த தேவர்

சிவஞானபோம் 12 சூத்தரங்கள், 81 வெண்பாக்கள் - மெய்கண்டதேவர்

சிவஞான சித்தியார் - அருணந்தி சிவாசாரியார். சுபக்கம் பரபக்கம் எனும் இரு பிரிவுகளுடையது. சுபக்கம் 328 விருத்தப் பாடல்களைக் கொண்டது. பரபக்கம் 301 விருத்தப் பாடல்களைக் கொண்டது.

இருபா இருபஃது அருணந்தி சிவாசாரியார் இரண்டு பாடல்கள் இருபது வரியாக அமைந்துள்ளது. பத்து திருவெண்பாக்களையும் பத்துத் திருவாசியங் களையும் கொண்டமைந்தது.

உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசகம் கடந்த தேவர் 53 பாடல்கள்.

சிவப்பிரகாசம் - உமாபதிசிவாசாரியார். 100 விருத்தப் பாக்களைக் கொண்டது. பொது அதிகாரம் உண்மை அதிகாரம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

திருவருட்பயன் - உமாபதி சிவாசாரியார். காப்புச்செய்யுள் - 1 பத்து அதிகாரங்கள் 10 பத்து குறள்கள் பாடல்கள் மொத்தம் 100.

| | | |
|---|---|---|
| அதிகாரம் 1 | - | பதிமுது நிலை |
| அதிகாரம் 2 | - | உயிரவை நிலை |
| அதிகாரம் 3 | - | இருள்மல நிலை |
| அதிகாரம் 4 | - | அருளது நிலை |
| அதிகாரம் 5 | - | அருள் உரு நிலை |
| அதிகாரம் 6 | - | அறியுறு நெறி |
| அதிகாரம் 7 | - | உயிர் விளக்கம் |
| அதிகாரம் 8 | - | இன்புறு நிலை |
| அதிகாரம் 9 | - | ஐந்தெழுத்து அருள் நிலை |
| அதிகாரம் 10 | - | அணைந்தோர் தன்மை |

10 அதிகாரத்திலும் 10 குறட்பாக்கள் மூலம் உவமைகளுடன் விளக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா வெண்பா 13 வெண்பாக்கள் - உமாபதி சிவாசாரியார்

போற்றிப்பஃறொடை - உமாபதி சிவாசாரியார்

கொடிக்கவி 4 பாடல்கள் - உமாபதி சிவாசாரியார்

நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாசாரியார் 121 கண்ணிகளால் ஆனது.

உண்மை நெறி விளக்கம் - ஆறு பாடல்களையும் கொண்டது.

சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாசாரியார் 20 அகவற்பாக்களைக் கொண்டது.

பதின்நான்கு மெய்கண்ட சாத்திர நூல்களில் எட்டு நூல்களைத் தந்த உமாபதி சிவாசாரியார் சைவசித்தாந்த விளக்கத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். எட்டு நூல்களையும் சேர்த்து சித்தாந்த அட்டகம் என்பர். ஏனைய ஆறு நூல்களும் ஆறு பேரால் தனித்தனி ஒவ்வொரு நூல்களாகப் பாடப் பட்டுள்ளன.

திருவருட்பயன் இரண்டு அடிகள் கொண்ட குறள் வடிவில் அமைந் துள்ளது. திருக்குறள் இரண்டறக் குறளில் ஆழமான கருத்துக்களைச் சொல்வது போன்று திருவருட்பயன் குறள்களில் அமைந்துள்ளன. மனனம் செய்ய இலகு வானது. உவமைகளுடன் எடுத்துக்கூறுவதால் விடயங்கள் மனதில் இலகுவாகப் பதிந்து விடும். சைவசித்தாந்தம் கற்க முயல்வோர் முதலில் திருவருட்பயனை கற்கவேண்டும் எனும் வகையில் திருவருட்பயன் பாடல்கள் சைவசமய பாடம் கற்கும் 10ஆம், 11ஆம் வகுப்புப் பாடப் புத்தகங்களிலும் பாடத்திட்டமாகச் சேர்க்கப்பட்டுள்ளமை மாணவர்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களை இலகுவில் விளங்கிக் கொள்வதற்காக எனக் கூறலாம்.

மெய்கண்ட சாத்திர நூல்கள் பதின்நான்கில் எட்டு நூல்களை இயற்றியமையால் உமாபதி சிவாசாரியார் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார் எனலாம்.

## கோ தரிசனம்

மகாகும்பாபிஷேகத்தன்று கும்பநீர் அபிஷேகித்த பின் 10 வகையான மங்கலப் பொருட்களில் பசு மாட்டையும் ஒரு பொருளாக பூசை செய்து திருநாவுக்கரசு நாயனார் திருமறைக்காட்டில் கதவு திறக்கப் பாடிய தேவாரத் திருப்பதிகம் பாடி திருக்கதவு திறக்கப்படும். ஆதிமூலத்திலுள்ள சுவாமி பசுவைப் பார்த்து தரிசிப்பார்.

திருமணக்கிரியைகளில் மணமகன் மணமகளுக்கு திருமாங்கல்யம் எனும் தாலி சூடிய பின் பசுவுக்கு உணவுகொடுத்து அட்ட லக்சுமி கடாட்சம் பெறப் பசுவை வழிபடுதல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சைவப்பண்பாட்டு மரபில் விருந்தோம்புதல் இளையான் குடிமாற நாயனார் புராணத்தினூடாக ஓர் நோக்கு

சைவப்புலவர் சி.ரமணராஜா,
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
நிர்வாகசபை உறுப்பினர்

## அறிமுகம்

திருத்தொண்டர் பெருமையை அறிவுறுக்கும் பெருங்காப்பிய நூலாக சைவசமயப் பண்பாட்டு மரபில் பெரியபுராணம் தனித்தன்மை பெற்றுத் திகழ்கின்றது. தமிழர் பண்பாடு தன்னுட்கிடையாகக் கொண்டிருந்த மனித இனநல மேம்பாட்டிற்கான உயர்சிந்தனைகளை காலந்தோறும் தமிழ்ப் பண்பாட்டு மரபிலெழுந்த இலக்கியங்கள் பலவும் பொருண்மையாக விளக்கி வந்துள்ளன. இப்பின்னணியில் தென்னிந்திய அரசியலில் பாரிய மாற்றங்களூடாக தனித்த அடையாளத்தைப் பெற்றிருக்கின்ற சோழர்காலப்பரப்பில் எழுந்த இருபெரும் புராணங்களில் ஒன்றாக பெரியபுராணம் சிறப்புப் பெறுகின்றது. அறுபத்து மூன்று தனியடியார்களினதும் ஒன்பது தொகையடியார்களினதும் சரிதங்களினூடாக உயர்ந்த சமூக வாழ்வியலை இந்நூல் கட்டமைத்திருக்கின்றது. மனிதனுடைய வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்பதில் சேக்கிழார் பேரார்வம் காட்டியதனாலேயே அவ்வாறு சமூகத்தில் சிறந்த முறையில் வாழ்க்கை நெறியினைக் கைக்கொண்டொழுகிய சங்கம கூட்டத்தினரின் வாழ்வியலை தன் நூலுக்கான பொருண்மையாக எடுத்தாண்டுள்ளார்.

சைவப்பண்பாடு இல்லற வாழ்வியலுக்கு அதிக முக்கியத்துவம் அளித் துள்ளமை சிறப்பான அம்சமாகும். வரலாற்றுக் காலந்தொடக்கம் விருந்தோம்புதல் என்னும் நெறிமுறை சார்ந்த பண்பு தமிழர் சமுதாயத்தில் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும், இல்வாழ்க்கையின் தலையாய பண்பியல்பாகவும் இருந்து வருகிறது. இல்லற வாழ்வியலுக்கான உயிரோட்டமும் இருப்பியலும் விருந்தோம்பும் பண்பிலேயே தக்கவைக்கப்பட்டுள்ளது. இத்தகைய உயர்ந்த இல்லறம் சார்ந்த வாழ்வியல் செல்நெறி காலந்தோறும் மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பின்னணியில் இளையான்குடி மாற நாயனார் வாழ்வியலினூடாக அதியுச்சநிலையடைந்திருந்த சமூக வரலாற்றை சேக்கிழார் பெரியபுராணத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு சேக்கிழாரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள சமூக வரலாற்றினூடாக புலப்பட்டுத் தெரிகின்ற இல்லறவியல் சார்ந்த நெறிமுறைக் கூறுகளையும், அதன் தனித்தன்மைகளையும் இளையான்குடி மாறநாயனார் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு உற்று நோக்குவதற்கு இக்கட்டுரை எத்தனம் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்பாடு**

ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் தனித்த அடையாளமாக அதன் இருப்புக்கான எச்சங்களாக இனங்காணப்படுகின்ற பண்பாடு குறித்த வரைவிலக்கணங்கள் பல்வேறுபட்ட துறைசார்ந்த அறிஞர்களால் காலந்தோறும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. பண்பாடு பற்றிய வரையறைகளை அறிய விழைவோர குரோபரும்(kroeber), குளுக்கானும் (kluchonhn) எழுதிய நூலினைப் படிக்க வேண்டும் எனக் கூறும் பக்தவத்சல பாரதி, பண்பாடு பற்றிய வரையறைகள் எவ்வாறு வேறுபட்டுள்ளன என்பதனையும் எடுத்துக் கூறியுள்ளார்.[1] இன்று பண்பாடு என்பதனை எவ்வாறு பொருள் கொள்கிறோமோ அதே வகையில் இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் எட்வட் பர்னட் டைலர் என்பவரே. இவர் தனது தொன்மைப் பண்பாடு (Primitive Culture) என்னும் நூலில், "பண்பாடு அல்லது நாகரிகம் என்பதனை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் பின்வருமாறு சொல்லலாம்: பண்பாடு என்பது அறிவுஇ நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவற்றை உள்ளடக்கியதாகும். கூடவே மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தொகுதியாகும்" எனப் பண்பாடு பற்றிய வரையறையை விபரித்துள்ளதாகவும் அவர் எடுத்தாண்டுள்ளார்.

சுருக்கமாகக் கூறின், சமுதாயத்திலிருந்து ஒருவர் கற்றுக் கொள்ளும் நடத்தைக் கோலங்களை பண்பாடெனக் கூறலாம். பண்படு என்ற சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டதே பண்பாடு ஆகும். ஆங்கிலத்தில் Culture என்று சுட்டுவதற்கு நேராகவே பண்பாடு என்னும் சொல் எடுத்தாளப்படுகின்றது. இச்சொல்லை இப்பொருளில் முதன்முதல் எடுத்தாண்ட பெருமை டி. கே. சிதம்பரநாத முதலியாருக்கே உரியது என்பர்.[3] மக்கள் சமூகத்தினுடைய வாழ்க்கை முறைகள், அணியும் உடைகள், ஆபரணங்கள், வாழும் உறைவிடம், உண்ணும் உணவுகள், பழக்கவழக்கங்கள், பயன்பாட்டுக் கருவிகள் போன்றன யாவும் பண்பாட்டின் வெளிப்பாடுகளேயாகும்.

இதனடிப்படையில் சமுதாயத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதும், அச்சமூகத்தில் இழையோடியுள்ள தனித்த அடையாளங்கள், மதிப்புகள், செயற்பாடுகள் போன்றவற்றை கடத்தக் கூடியதும் பண்பாடு ஆகும் என பொதுவாகக் குறிப்பிடலாம்.[4] இப்பண்பாடு பற்றிய பர்மியம் மொழி, இனம், மக்கள் மற்றும் பிராந்தியம் சார்ந்ததாக அமைந்துள்ளதென்பர். பண்பாடானது எண்ணற்ற பல அம்சங்களை வெளிப்படுத்தும் பன்முகங்களை உடையதாகக் காணப்படினும், பண்பியல்புகள், கூட்டுத்தன்மை, தொடர்ச்சி, உள்ளடக்கமும் வடிவமும் என்னும் நான்கு அடிப்படையான முகங்களைப் பண்பாடு கொண்டிருக்கின்றது எனவும் மானிடவியலாளர் எடுத்துரைப்பர்.

பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (material Culture), பொருள் சாராப் பண்பாடு (non material Culture) என இருவகையாகவும் எடுத்தாள்வர்.[5] மக்கள் தங்களின் தேவைகளின் பொருட்டு பயன்பாட்டில் கொள்ளும் அனைத்து வகையான பொருட்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். பொருள்சாராப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டில் பொருள்வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். இவற்றை முறையே உருவப்பண்பாடு, அருவப்பண்பாடு என்றும் சுட்டித்துக் கூறுவர். இவையிரண்டும் தனித்தவையாகவன்றி ஒன்னுடனொன்று அறுபடாத் தொடர்புடையனவாகவும் விளங்குகின்றன. இவ்விரு பண்பாடுகளும் இளையான்குடி மாறநாயனாஉ வாழ்வியலில் புலப்படுவதனை நுட்பமாக அவதானிக்கலாம். சான்றாக வணக்கம் செலுத்திய முறைமை, முன்னுரை செய்தமை, ஆசனத்தில் அமரச் செய்தமை, கலந்துரையாடல்கள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், நெறிமுறைகள் என்ற வகையில் பொருள்வடிவம் பெறாதனவற்றை பொருள்சாராப் பண்பாட்டிலும், உழவுக்குப் பயன்படுத்திய பொருட்கள், கருவிகள், இல்லறப் பாவனைப் பொருட்கள், விதைத்த நெல்லை வாரி எடுத்துவரப் பயன்படுத்திய கூடை, விருந்தினர் இருக்கை, முதலியனவற்றை பொருள்சார் பண்பாட்டிலும் உள்ளடக்கி நோக்கலாம்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம்பெற்றுள்ள கூறுகள் பல்வேறு தன்மை வாய்ந்தவை. இருப்பினும் அவற்றின் பண்புகளைத் தொகுத்துக் காணும் போது, பொருள் சார் கூறுகள், அறிதல் சார் கூறுகள், நெறியியல் சார் கூறுகள் என மூன்று நிலைகளாக வரிசைப்படுத்திக் கூறுவர்.[6] மக்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருட்களும் பொருள்சார் கூறுகளாகவும், அப்பண்பாட்டைச் சார்ந்தவர்களின் அறிதிறன் கூறுகளைக் குறிப்பனவற்றை அறிதல் சார் கூறுகளாகவும், அத்தகைய பண்பாட்டிற்குரிய மக்களின் வாழ்வினை நெறிப்படுத்தும் கூறுகளை நெறியியல் கூறுகளாகவும் எடுத்தாள்வர்.

### நெறியியல் கூறுகள்

சமுதாயத்தில் ஒருவன் எவ்வாறு வாழ வேண்டும்? எவற்றைச் செய்ய வேண்டும்? எவற்றைச் செய்யக்கூடாது? ஏன் செய்யக்கூடாது? எவ்வாறு செய்தல் வேண்டும்? போன்ற விதிமுறைகளோடு தொடர்புடைய கூறுகளே நெறியியல் கூறுகளாகும்.[7] பண்பாட்டுக் கூறுகளுள் நெறியியல் சார் கூறுகளே பண்பாட்டுப் பெறுமானத்தை தீர்மானிக்கவும் நிலைநிறுத்தவும் துணைபுரிகின்றன. விழுமியங்கள், நெறிமுறைகள், விதிகள், குடிவழக்குகள், வழக்கடிபாடுகள், மரபாண்மைகள், தடைவிதித்தல், வழக்கங்கள், பழக்கங்கள் முதலானவை முதன்மையான நெறியியல் சார் கூறுகளாக எடுத்தாளப்படுகின்றன. மாறனார் சைவப்பண்பாடு சார்ந்த வாழ்வியலுக்கு அவசியமான செயல்களையும், நடத்தை முறைகளையும் கொண்டிருந்தாரெனக் கொள்ளுமிடத்து, அவற்றை அவரிடமிருந்த விழுமியங்களாகவும், இவரின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைப்படுத்தப்பட்ட நெறிமுறைகளாகவும், இயல்பாய் அதேவேளை சிந்திக்காமல் அவரது பழக்கத்தால் நிகழ்ந்தனவற்றை குடிவழக்குகளாகவும் இனங்காணலாம்.

### சமுதாய மதிப்புக்கள்

அருவப்பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக சமுதாய மதிப்புக்கள் காணப்படுகின்றன. மேற்கூறியவண்ணம் நெறியியல் சார் கூறுகளில் விழுமியங்களாகவும், நெறிமுறைகளாகவும் இனங்காட்டப்பட்டவற்றை சமுதாய

8334 (



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புகளாக எடுத்தாளலாம். உயர் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எவை உயர்வானவை, எவை இழிந்தவை, எவை புனிதமானவை, எவை நகைப்பிற்குரியவை என்பதனை மக்கள் கற்பித்துக் கொள்கின்றனரோ அத்தகைய அடிப்படையான உணர்வுகளை சமுதாய மதிப்புக்கள் எனலாம்.[8] இளையான்குடி மாறநாயனார் சைவப் பண்பாடுசார்ந்த வாழ்வியலுக்கான கருத்தியல் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும், நடத்தை முறைகளையும் கொண்டிருந்தார் என உற்றுநோக்குமிடத்து அவற்றை அவரிடமிருந்த சமுதாய மதிப்புகளாகக் கூறலாம். பெரும்பாலான சமுதாய மதிப்புக்கள் பண்பாட்டுப் பூர்வமாகவே உருவாக்கப்படுகின்றன எனக் கருதப்படுகின்றது.

சமுதாய மதிப்புக்களின் அடிப்படையில் பண்பாட்டினை, உண்மைப் பண்பாடு (True Culture), கருத்துப் பண்பாடு (Ideal Culture) என இரு நிலைகளில் வகைப்படுத்திக் காண்பர். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் எவ்வெவற்றைப் பின்பற்றி வாழ்கின்றனர் என்பதனை உண்மைப் பண்பாடும், மக்கள் எவ்வெவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதனை கருத்துப் பண்பாடும் காட்டுவனவாக சமூகவியலாளர்கள் கருதுவர். எந்தப் பண்பாட்டையும் மதிப்புக்கள் மூலம் விளக்கிக் காட்ட முடியும் எனவும் கூறுகின்றனர். இதனடிப் படையில் சமுதாய மதிப்புக்கள் வாழ்வியற் பண்பாட்டின் இன்றியமையாத பகுதியாக உள்ளன எனலாம்.

பெரியபுராணம் கட்டமைத்துக் கூறியிருக்கின்ற சைவமக்களின் சமூக வரலாற்றினூடாக இத்தகைய உண்மைப்பண்பாடு மற்றும் கருத்துப் பண்பாடு குறித்த சிந்தனைகளை அறிந்து கொள்ளவியல்கிறது. பெரியபுராணத்தின் பொருண்மைப் பகுதியாகவுள்ள இறைவன் - அடியவர்கள் - அவர்களைச் சார்ந்தவர்கள் - பெண்கள், இவர்களுக்கிடையே நிகழ்ந்த சரித்திர பூர்வமான நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சைவ வாழ்வியற் பண்பாட்டின் கூறுகளை பலதளங்களினூடாக வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒவ்வொரு அடியவர்களின் சரித்திரத்தினூடே சைவ வாழ்வியற் பண்பாடு வெளிக்கொணரப்பட்டு சமுதாய மதிப்புக்கள் உயர்வதற்கான செயற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன. சைவ இலக்கியங்கள் இத்தகைய நிகழ்வுகளூடாக சமுதாய மதிப்புக்களை உயர்த்த முயன்றன. இதன் தொடருறு நிலையிலேயே சேக்கிழாரும் பெரியபுராணம் என்னும் பெருங் காப்பியத்தில் அடியவர்களின் அன்பு தொண்டு என்பவற்றால் உயர்ந்த சான்றோர் வரலாற்றினூடாக சைவ வாழ்வியற் பண்பாட்டை வெளிக்கொணஉந்துள்ளர்.

பெரியபுராணம் கூறும் அடியவர்களை வெறும் பக்தர்கள் என்ற அடையாளத்துடன் நோக்குவது பொருத்தமானதல்ல. இவர்கள் இறைவனை நாடிச்செல்லும் ஆன்மிக இன்பவியலாளர்கள். இதுவே இவர்களின் உயரிய இலக்குமாகும். மெய்ப்பொருளை நாடிச் செல்பவர்களை மிஸ்ரிக்ஸ் (Mystics) என மேனாட்டார் குறிப்பிடுவர். அந்தச் சொல்லின் நேர்ப்பொருளுடையதாகவே அடியார்கள் என்ற சொல்லைக் கருதவேண்டும்.[9] பல்வேறு வாழ்க்கை முறைகளை மேற்கொண்டு வாழ்ந்த நாயன்மார்களுடைய வரலாற்றினை சேக்கிழார் கூறியிருப்பினும் அவ்வடியார்களின் வாழ்க்கையின் அடித்தளத்தில் நிற்பது தொண்டுள்ளமே என்பதனையும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருநாளும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்"[10]

என்று தொண்டர்களின் இயல்பினைச் சுருக்கமாக விளக்கியுள்ளார். மனிதனின் உணர்வுகள் தடைப்படும் போது அவனின் சிந்தனை ஆற்றலும் அவற்றின் வெளிப்பாடுகளான செயற்பாடுகளும் தடைப்பட்டுவிடுகின்றன. இங்கு "குன்றாத உணர்வு" என்பதனால் தொண்டர்களின் சிந்தனைப் போக்குகளும், சமுதாய உணர்வு நிலையும் சேக்கிழாரால் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிந்தனைகளும் உணர்வோட்டங்களும் தொண்டு நெறிக்கு வழிப்படுத்துகின்றது. தொண்டு செய்வதற்குத் தேவையான அன்பும் இதிலே அடங்கிவிடுகிறது. "பாரம் ஈசன் பணியலது ஒன்றிலர் ஈர அன்பினில் யாதும் குறைவிலர்"[11] என்றும், "ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவர் கூடும் அன்பினில் கும்பிட லே யன்றி"[12] என்றும், அன்பு மற்றும் அதன் விளைவாகிய திருத்தொண்டினது சிறப்புகள் கூறப் பட்டுள்ளமை கவனித்தற்குரியது.

இந்த வகையில் இளையான் குடிமாறநாயனார் வாழ்வியலூடாகவும் உயர்ந்த சைவ வாழ்வியற் பண்பாட்டினை பெரியபுராணம் வெளிப்படுத்தியிருக்கின்றது. எனவே, இளையான் குடிமாற நாயனார் வரலாறு கூறும் பகுதியினூடாக சேக்கிழார் காட்டியிருக்கின்ற - கையளிப்புச் செய்ய முனைந்த வாழ்வியல் நெறி பெறுமதியானது. சமுதாய மதிப்பினை உயர்த்த வல்லது.

**இளையான் குடிமாற நாயனார்**

பெரியபுராணம் சுட்டித்துக் கூறும் அறுபான் மூவருள், உணவிடுதல் தொண்டின் மூலம் சிறப்புற்று விளங்கும் நாயன்மார்களுள் இளையான்குடி மாறநாயனார் தலையாயவர். மாறன் என்னும் பெயருடைய இவர் வாழ்ந்த இடம் இளையான்குடி. இவ்வூர் சோழ நாட்டிலே திருநள்ளாற்றுக்குத் தெற்கே உள்ளது என்றும், பரமக்குடிக்கு வடக்கேயுள்ளது என்றும், தொண்டை மண்டலத் திலுள்ளது என்றும் வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. எவ்வாறாயினும் மதுரை ஜில்லாவில் பரமக்குடிக்குச் சற்று வடகீழ்த்திசையில் ஏழு மைல் தூரத்தில் இளையான்குடி என்ற வளநகரம் இருக்கின்றது என்ற கருத்து ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. சேக்கிழார், "இளையான் குடிப்பதி மாறனார்"[13] என்று குறிப்பிடுவதனூடாக இளையான் குடிப்பதி என்பது அவர் வாழும் குடிக்குரிய பெயராக இருத்தல் வேண்டும். எனவே இளையான்குடி என்ற ஊர்ப் பெயரோடு மாறன் என்ற பெயரும் இணைந்து "இளையான்குடி மாற நாயனார்" என்ற பெயர் நிலைபெறுவதாயிற்று.

வேளாண்மைக் குலத்தைச் சார்ந்தவரான இவர், மிக்க செல்வந்தராகவும் சிவபக்தி உடையவராகவும் விளங்கினார். வேறுபாடு நோக்காத தன்மையில் அடியவர் யாவராயினும் உணவளித்தல் தொண்டினை பெரும் சிறப்பாகச் செய்து வந்தவர். இவருடைய சிறப்பினை கூறவந்த சேக்கிழார், "தம்பிரான் அடிமைத் திறத்து உயர் சால்பின்மேன்மை தரித்துள்ளார்.."[14] என்கிறார்.

(மிகுதி அடுத்த மலரில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவஞானபோதம்

சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம்
B.A., H.N.Dip-in-Eng
உதவிப் பதிவாளர் நாயகம்
நிர்வாகசபை உறுப்பினர்

சிவஞானபோதம் பதினான்கு மெய்கண்ட சாஸ்திர நூல்களுள் தலையாயது ஆகும்.

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ."

என்று தாயுமானவரால் போற்றப்பட்டவர், சிவஞான போதத்தை அருளிச் செய்த மெய்கண்ட தேவநாயனார்.

சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களையே கொண்டதாயினும் அது சித்தாந்தச் செழுங்கருத்தினைச் சுருக்கமாகவும் அதேநேரம் செறிவாகவும் எடுத்துரைக்கின்றது. மெய்கண்டார் பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் பன்னிரண்டு கருத்துக்களையும் முப்பத்தொன்பது மேற்கோள்களையும், முப்பத்தொன்பது ஏதுக்களையும், எண்பத்தொரு உதாரண வெண்பாக்களையும் இயற்றித் தந்துள்ளார்.

சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டிருப்பது போல அதன் மங்கல வாழ்த்தும் கூட பன்னிரண்டு சொற்களைக் கொண்டிருக்கிறது.

"கல்ஆல் நிழல் மலை வில்லார் அருளிய
பொல்லார் இணை மலர் நல்லார் புனைவரே"

சிவஞானபோதத்திற்கு சிவஞான முனிவர் எழுதிய பேருரை சிவஞானபோத மாபாடியம் அல்லது திராவிட மாபாடியம் என அழைக்கப்படுகின்றது.

சிவஞான போதத்தின் வழிநூல் அருணந்தி சிவாசாரியாரால் எழுதப்பட்ட சிவஞான சித்தியார், சார்புநூல் உமாமபதி சிவாசாரியார் எழுதிய சிவப்பிரகாசம் என்பனவாகும்.

சிவஞானபோதம் பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என இரண்டு அதிகாரங்களையும் அந்த ஒவ்வொரு அதிகாரமும் இவ்விரு இயல்களையும் கொண்டதாக அமைந்திருக்கிறது. பொது அதிகாரமானது பிரமாண இயல், இலக்கண இயல் என இரு பகுதிகளையும் ஒவ்வொரு இயலும் மும்மூன்று சூத்திரங்களையும் கொண்டிருக்கிறது. உண்மை அதிகாரமானது சாதனஇயல், பயன்இயல் ஆகிய இரு பகுதிகளையும் ஒவ்வொரு இயலும் அவ்வாறே மும்மூன்று சூத்திரங்களையும் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து நோக்கும்போது சிவஞானபோதம் இரண்டு அதிகாரங்கள், நான்கு இயல்கள், பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டு உள்ளது.

முதலாவது இயலாகிய பிரமாண இயல் பதி, பாசம், பசு ஆகிய முப்பொருள் உண்மை பற்றி கூறுகிறது. இரண்டாவது இயலாகிய இலக்கண இயல், பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம் பற்றிப் பேசுகிறது.

மூன்றாம் இயலாகிய சாதன இயல் பசுவின் சிறப்பு இலக்கணம், பசுவானது குருவின் வழி பதியை உணர்த்தல், ஞானம் பெறல் என்பனவும் நான்காவது இயலாகிய பயனியல் பாசநீக்கம், சிவப்பேறு, சீவன் முத்தி என்பவை பற்றி எடுத்து விளம்பும்.

இனி பன்னிரு சூத்திரங்களும் கூறும் கருத்தினைச் சுருக்கமாக நோக்கு வோம்.

*01.* உலகமானது உள்பொருள். உலகம் உள்ளதாயின் அதனை உண்டாக் கிய ஒருவனும் உள்பொருள் பிரபஞ்சத்தை (உலகத்தை) படைத்தலும், காத்தலும், அழித்தலும் பின்பு மீள உருவாக்கலையும் செய்கின்ற காரணகர்த்தாவாக கடவுள் இருக்கின்றார் என்பதை எடுத்து வலியுறுத்துகிறது முதலாம் சூத்திரம்.

*02.* சிவன் உயிர்களோடும் பாசத்தோடும் இரண்டறக் கலந்திருக்கிறான். உயிருக்கு உயிராகவும் கண்ணுக்கு ஒளி போலவும் இருப்பவன் இறைவன். இறைவன் ஆணைப்படியே உயிர்களின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப அவற்றின் பிறப்பும் இறப்பும் நிகழும் என்கின்றது இரண்டாம் சூத்திரம்.

*03.* ஆன்மா உள்பொருள். அதற்கு உடல் உள்ளதும் ஐம்புல அறிவும் புலனும் கொண்டிருப்பதும் அந்த ஐம்புலன் ஒடுக்கத்தினால் புலனுணர்வு இல்லாது ஒழிவதுமாகிய இயல்பு ஆன்மாக்களுக்கு உண்டு. அத்துடன் ஆன்மா ஐம்புலனால் அறியும் அறிவுடன், அறிவிக்க அறியும் அறிவல்லாது தானே அறியும் இயல்பு அதற்கு இல்லை என்பதையும், ஆன்மா மாயை காரணமாக இவ்வாறு சுய அறிவு அற்று நிற்கின்றது என ஆன்மாக்களின் இயல்புபற்றி கூறிநிற்கின்றது மூன்றாம் சூத்திரம்.

*04.* நான்காம் சூத்திரமானது ஆன்மாக்களின் இலக்கணம் பற்றிப் பேசுகிறது. ஆன்மா மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களுள் ஒன்று அல்ல. ஆயினும் அவற்றோடு சேர்ந்து நிற்பது காரணமாக ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் தன்னைப் பீடித்திருப்பதை உணராது நிற்றலின் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்து அவத்தை களுக்கும் உட்படும் என்பதை விளக்கி நிற்கிறது.

*05.* ஆன்மாக்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் உதவியால் அறியும். ஆயினும் ஆன்மா இல்லாது வெறும் ஐம்புலன்களும் எதுவும் அறியாது ஐம்புலன்வழி சூழும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள் அதாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசங்கள், ஆன்மாபற்றியும் அறியா; பதியைப் பற்றியும் அறியா. இத்தகைய தன்னறிவு மற்றும் அறிவிக்க அறியும் இயல்பு ஆகிய இருவகை அறிவும் அற்றவை பாசங்கள். காந்தத்தினால் இழுக்கப்படும் இரும்பு ஆனது தன்னுணர்வு இன்றி இழுபடுவதுபோல, ஆன்மாக்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இழுபடும் இயல்பை உடையன பாசங்கள் என்று பாசத்தின் இயல்பைப் பேசுகின்றது, ஐந்தாம் சூத்திரம்.

*06.* ஆறாம் சூத்திரமானது பதியின் இலக்கணம் பற்றிப் பேசுகிறது. பதியானது காட்சி போன்ற அளவைகளால் அறியப்படக்கூடிய பொருளல்ல. அதே நேரம் அறிவால் அறியப்பட முடியாத பொருளுமல்ல என்கிறது.

*07.* சத்தாகிய பதியின் எதிரிலே மற்ற யாவும் அறியும் பொருள்கள் அல்ல. பாசங்களாகிய அசத்து எதுவும் அறியாது தானே அறியா; அறிவிக்கவும் அறியா. ஆனால் ஆன்மா, தானே அறியாவிட்டாலும் சத்தாகிய பதியுடன் சேர்ந்து, சத்தாகிய பதியினை அறியும். சத்தாகிய பதியுடனும் அசத்தாகிய பாசத்துடனும் சேரும். ஆகையால் சதசத்து என்று அழைக்கப்படும். இவ்வாறு பசுக்களாகிய ஆன்மாக்களின் இயல்புபற்றி விளக்குகிறது, ஏழாம் சூத்திரம்.

*08.* அரசகுமாரனும் வேடர்கள் மத்தியில் வளர்ந்தால் வேடரின் இயல்பைப் பெறுவான். ஐந்து புலன்கள் என்கின்ற வேடர்களால் சூழப்பட்டு வாழ்வதனால் ஆன்மா தனது மெய்யறிவினை இழந்து புலனறிவுடன் கூடி வாழ்கிறது. இந்த ஆன்மாக்களுக்கு அவற்றின் உண்மை இயல்பை அறிவிக்க, பதியாகிய இறைவன் தானே குரு வடிவங்கொண்டு வந்து உபதேசித்து அருள, அறிவு பெற்ற ஆன்மாவானது பதியினை அணைந்து முத்தி பெறும் என எட்டாம் சூத்திரம் உதாரணத்துடன் விளக்கி நிற்கிறது.

*09.* ஊனக் கண்ணால் மட்டுமன்றி ஐம்புலன்கள் உதவியினாலும்கூட, பாசங்களின் பிணைப்பு காரணமாக ஆன்மாவால் பதியை உணரமுடியாமல் உள்ளது. அத்தகைய நிலையில், அறிவாகிய ஞானத்தால் உய்த்து உணர்ந்து, பதியே உண்மைப்பொருள் என உணர்ந்து, தெளிந்து பதியாகிய இறைவனைச் சார்ந்து; அந்த ஞானம் நிலைபெற்று விளங்க; பாசங்கள் எல்லாம் பேய்த்தேர் கானல்நீர் போன்று உண்மையானவை அல்ல, நிலையானவை அல்ல என்ற ஞானத் தெளிவு பெற்று; ஞானம் விலகாது இருக்க ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சரத்தை மனத்தில் எண்ணி ஓதி பதியினை சார்ந்து நிற்கும் ஆன்மா என்கின்றது ஒன்பதாம் சூத்திரம்.

*10.* இறைவன் குருவடிவாய் வந்து வழங்கிய ஞானத்தினால் சிவனை அறிந்து, அவனே தான் என உணர்ந்து, பாசவிளக்கம் பெற்று, பாசத்தின் நீங்கி பதியைச் சேர்ந்து இறைபணியில் நிலைத்து நிற்க, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நல்வினை தீவினை ஆகிய இரு வினைகளும் ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். இம் மலபரிபாகம், சத்திநிபாதம் என்பவற்றை எடுத்துக் கூறுவது பத்தாம் சூத்திரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*11.* கண் ஆனது காண்பதற்குரிய கருவி. ஆயினும் கண் தானே காண முடியாது. ஆன்மாவே கண்மூலம் காண்கிறது. உள்ளம் எனும் அந்தக் காரணத்தின் வழி, கண் எனும் கருவியால் ஆன்மா காண்கிறது. ஆக, ஆன்மா தானே அறியாது; அறிவிக்க அறியும். கருவிகளின் துணையினால் ஆன்மாவை அறிய வைப்பது பதி. அவ்வாறு தன்னறிவாகிய பதியை அதன் அருளினால் அறிந்து கொள்கிற பசுவானது, பதியை அன்பொழுக அணைத்து இன்புற்று இருக்கும். அதாவது முத்தி பெற்று நிலைபேறான பேரின்ப பெருவாழ்வு பெறும் ஆன்மா என்கின்றது பதினொராம் சூத்திரம்.

*12.* சிவந்த மலர்போன்ற பாதங்களையுடைய பதியினை சேர்ந்து முத்தி பெற்று இன்புற்று இருப்பதனை தடுக்கின்ற மலங்களை விட்டு நீங்கிய ஆன் மாவானது, அவ்வாறு மலநீக்கம் பெற்ற ஏனைய ஆன்மாக்களோடு கூடியும் பதியின் உருவத்தையும் பதியாகிய கடவுள் உறைகின்ற கோயிலையும் வணங்கி வழிபட்டு வாழும் என்பதனை பன்னிரண்டாம் சூத்திரம் விளக்கி நிற்கிறது.

தொகுத்து நோக்கும்போது பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் உள்பொருள், நிலையான பொருள் ஆகும். பதி சுயஅறிவு உடைய பொருள். ஆன்மாக்கள் சுய அறிவு அற்றவை. அறிவற்ற மலங்களால் பீடிக்கப்பட்டிருப்பவை. ஐம்புலன்கள் வழி அறிவிக்க அறிவுபெற்று மலநீக்கம் பெற்று இறைவனை அறிந்து அவனை சரணடைந்து முத்திபெறும். இறைவனே உலகத்தையும் உயிர்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் தானே முதற்பொருளாயும் முடிவுப் பொருளாயும் உள்ளான் என்ற தத்துவத்தை சிவஞான போதம் விளக்கி நிற்கின்றது எனலாம்.

புறச்சந்தான குரவராகிய மெய்கண்டர், சுவேதவனப் பெருமாள் எனும் பிள்ளைத் திருநாமத்துடன் திருவெண்ணெய் நல்லூரிலே பிறந்து மூன்று வயதுக் குழந்தையாக இருந்த பொழுது, அகச் சந்தான குரவர் ஆகிய பரஞ்சோதி முனிவர், குழந்தையின் பக்குவநிலையை கண்டு உணர்ந்து, தானே வந்து உபதேசம் செய்து, மெய்கண்டார் என தீட்சாநாமம் வழங்கி அருளினார்.

ஞானம் பெற்ற மெய்கண்டார், திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையார் சந்நிதியில் நிட்டைகூடி அதன்மூலம் பெற்ற ஞானக் தெளிவினை "சிவஞானபோதம்" எனும் நூலாக இந்த உலகுக்கு ஆக்கித் தந்தார்.

மூன்று வயதிலே உமையம்மையாரிடம் ஞானப்பால் குடித்த ஞானசம்பந்தர் போன்று மெய்கண்டாரும் மூன்று வயதிலே பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் பெற்ற சிறப்பினை உடையவர். அத்தகைய சிறப்புக்கு உரிய மெய்கண்டரால் இயற்றப்பட்ட நூலாகையினாலே சிவஞானபோதமானது சித்தாந்த சாத்திர நூல்களுள் தலையாயதாக சிறந்து விளங்குகின்றது.

இத்தகைய சிறப்புக்குரிய சிவஞானபோத நூலை பயன்தெளிந்து படித்து பயன்பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவருட்சக்தி

சைவசித்தாந்த பண்டிதர்
சைவப்புலவர் சி.கா. கமலநாதன்
விரிவுரையாளர்
ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி
பத்தனை
உதவித் தேர்தல் செயலாளர்

சைவசமயத்திலே மிகவும் முக்கியம் பெறுவது திருவருட்சக்தியாகும். சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் என்பதும் சிவமின்றி சக்தியில்லை சக்தியின்றி சிவமில்லை என்று சைவசித்தாந்த நூல்கள் எல்லாம் சிவத்தையும் சக்தியையும் பேதப்படுத்திப் பார்க்காத் தன்மையை நன்கு வலியுறுத்தியுள்ளன. நெருப்பையும் சூட்டையும் நீரையும் குளிர்மையையும் பிரிக்க முடியாதது போல சிவமும் சக்தியும் இருப்பதை உணர்கிறோம். இதேவேளை சிவம் எத்திறம் நின்றதோ சக்தியும் அத்திறம் நிற்கும் என்பது உண்மை. இறைவன் அறிவாகவும் சக்தி ஆற்றல்களாகவும் வியாபித்து நிற்கின்றனர். இறைவனுடன் இணைந்திருக்கின்ற சக்திகளிலே திருவருள் சக்தி என்பது என்றும் எமக்கு அவசியமாகின்றது. எதற்கு எடுத்தாலும் பெரியவர்கள் இறைவன் திருவருள் எமக்கு இருக்கவேண்டும் என்பர். திருவருள் நோக்கறிதல் என்பதும் முக்கியமாகின்றது. திருவருட் சக்தியின் ஆற்றலை நிறையப் பெற்றாலே திருவருள் நோக்கறிதலும் இலகுவாகும் என்பதை அறிக.

ஆன்மாக்கள் முன்செய்த இருவினைப் பயன்களை நுகரும் வண்ணம் இறைவன் தனுகரணபுவன போகங்களை அளிக்கின்றான். எல்லாம் பிறவிகளிலும் பார்க்க மானிடப் பிறவியே சிறந்ததென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். பிறந்திறந்து மேலும் பிறவியை எடுக்காது விடுவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. பேரின்ப சொரூபியான சிவபெருமானுடைய திருவருளினாலேயே அது சாத்தியமாகும். இது பற்றியே பட்டினத்தடிகள்

"ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கியுழன்ற நெஞ்சே
அழியாப் பதவிக் கவுடதங் கேட்டி யநாதியனை
மழுமான் கரத்தினை மால்விடை யானை மனதிலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மி யழு நன்மை வேண்டுமென்றே" என்று கூறுகின்றார். எனவே பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு திருவருட்சக்தி துணை அவசியமாகிறது.

திருவருட் சக்தியானது பல சந்தர்ப்பங்களிலே எம்மில் படிகிறது. முதலிலே தாய் தந்தையார் இறைவழி நின்று சைவ ஒழுக்கத்தில் மேலோங்கியிருக்கும் போது தாயின் திருமுலைப் பாலூடாகவும் தந்தையின் அறிவூடாகவும் சுவறத் தொடங் குகிறது. பின்பு சிவதீட்சை பெறும் போது குருவானவர் வாய்க்கப் பெறுகின்றார். அவரூடாக மந்திர உபதேசமும் முறையாக விபூதி தரித்தலும் அதிகாரம் பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது திருவருட் சக்தி மேலும் கூடுதலாகப் படிகிறது. இதன் பின் சைவநாற் பாதங்களை விருப்பிற்கேற்ப முறையாகப் பின்பற்றும் போது பக்தியும் அதனால் உண்டாகும் வைராக்கியமும் திருவருட்சக்தி போலும் ஊறியிருக்கிறது என்பதற்கு அறிகுறியாகும்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையா றொடங் கினர்க் கோர்"
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கிற்கேற்ப இறைவனே சற்குருவாக வந்து தனது திருவருட் சக்தியை ஊட்டுவார் என்பதை உணரவேண்டும். இதேவேளை ஞான உரைகளைக் கேட்டல், திருவருட் சக்தியை மேலும் கூட்டும். அதேவேளை அறத்திற்கு புறம்பாகச் சொல்லாது இருத்தல் பிரதானமானது. அப்போதே திருவருட் சக்தி நிலைத்திருக்கும்.

திருவருளின் நோக்கறியாது நாம் செயற்படுதலாகாது. இன்றைய கலியுக கால கட்டத்திலே நாம் பலரும் திருவருட் சக்தியைக் குறைவாகக் கொண்டுள்ளதால் திருவருளின் நோக்கறியாது செயற்பட்டு பல பழிவாங்கல்களுக்குள் சிக்குண்டு தவிக்கிறோம். இதற்கு நல்ல உதாரணமாக அப்பர் சுவாமிகளின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறலாம். திருநாவுக்கரசு நாயனார் முற்பிறப்பிலே வாகீச முனிவராகப் பிறந்து கைலை மலைச் சாரலிலே தவஞ் செய்து வந்தார். அந்தக் காலத்திலே இராவணன் தனது புஸ்பவிமானத்திலே வான்வழியாகச் சென்று கொண்டிருந்த போது கைலை மலை தடக்கியது. சிவபக்தனான அவன் அதன் பெருமைகளைச் சற்றும் சிந்திக்காது தூக்கி அகற்றி விட்டுச் செல்வேன் என்று நினைத்து தனது தவ வலிமையால் அதனைத் தூக்கினான். அப்போது கைலை மலை அசைவதற்கான காரணத்தை உமையம்மையார் வினாவினார். சிவபெருமான் இராவணனது செயலைக் கண்ணுற்று அவனுக்கு தண்டனை கொடுப்பதற்காக தனது கால் பெருவிரலினால் ஊன்றினார். இராவணன் மலை இடுக்கினுள் அகப்பட்டு அபயக்குரலில் கத்தினான் துடிதுடித்தான். அயலிலே தவஞ்செய்த வாகீசமுனிவர் இதனைக் கேட்டு விரைந்து வந்து இராவணன் நிலையைக் கண்டு கருணைகூர்ந்து சிவபெருமானிற்கு சாமகானம் மிகவும் பிடித்தமானது நீ அதனை இசைத்து தப்பித்துக் கொள்ளுமாறு கூறவே இராவணன் தனது ஒரு தலையை ஒடித்து தலைமுடியை இழுத்துக் கையோடு கட்டி வீணை செய்து சாமகானம் பாடவே சிவபெருமான் தனது பிடியைத் தளர்த்தினார். இராவணன் தப்பித்துக் கொண் டான். ஆனால் மறுகணம் வாகீச முனிவர் திருவருளின் நோக்கறியாது செயற் பட்டதால் தண்டனையை அனுபவிக்க நேரிட்டது. அதாவது சிவன் தவறு செய்தவருக்கு தண்டனை கொடுக்க நினைத்ததைத் தடுத்ததால் அடுத்த பிறவியிலே வாகீச முனிவர் திருநாவுக்கரசராகப் பிறந்து சைவசமயத்தை விட்டு சமண சமயத்தில் உழன்று நீண்ட காலத்தின் பின் விபூதி ஊடாக திருவருட் சக்தி கிடைக்கப்பெற்று சைவசமயத்தில் இணைந்து மிகவும் துன்பங்களைச் சந்தித்தே சிவனை அடைய முடிந்தது. எனவேதான் நாம் திருவருள் நோக்கறியாது நடத்தலாகாது திருவருளின் நோக்கையறிய திருவருட்சக்தியை நாம் பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த தத்துவப்படி இருவினையொப்பு மலபரியாகம் சக்தி நிபாதம் என்பன முக்கியமானவை. ஆன்மாவிடம் உண்மை ஞானம் பத்து வகை ஏற்படுத்தலும் திருவருட்சக்தியிலேயாகும். அவையாவன தத்துரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பவையாகும். இவற்றை தசகாரியம் என்றுமழைப்பர். இவற்றிலே முதல் மூன்றுமான தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி ஏற்படும்போது மாயா மலம் நீங்குவதற்கு வழி ஏற்படுகின்றது. இதனையே திருக்களிற்றுப் பிடியார்.

"தூய உடம்பாய முப்பத்தோர் தத்துவமும் மூல உடம்பாம் முதல் நான்கும் - மேலைச் சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த பவமாம் பரிசறுப்பார் பார்" என்று குறிப்பிட்டார்.

ஆன்மாவிடம் மலரிபாகம் ஏற்படும் போது திருவருட் சக்தி தோன்றும் என்பர். அப்பொழுது ஆன்மா திருவருளின் துணையால் தான் இதுவரை அறிந்தவை எல்லாம் கருவிகளைக் கொண்டு அறிந்தனவென்றும் அக்கருவிகள் மாயா காரியம் என்றும் சடம் என்றும் தனக்கு வேறானவை என்றும் அவற்றை உணரச் செய்தது திருவருட் சக்தியே என்றும் தெளிவடையும் இதனையே ஆன்மரூபம் என்பர்.

ஆன்மாவானது 36 கருவிகளும் தானல்லவென்றும், தனதல்லவென்றும் திருவருள் சக்தியின் துணை கொண்டு அறிந்த பின் தனக்கெனச் செயல் இல்லை யென அறிந்து கொள்ளும் அவ்வேளை அவ்வருளோடுகூட நிற்கும் அதுவே ஆன்ம தரிசனமாகிறது. ஆன்மாவானது தனக்கு சடப்பொருட்கள் அந்நியமானவை என்று ஆராய்ந்தறியும் வேளை சிவஞானம் உதயமாகிறது. அந்நிலை தோன்ற திருவைந் தெழுத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும். அப்போது பற்று நீங்கும் தனக்கொரு செயலுமில்லாததாய் திருவருள் சக்தியில் அடங்கி அத்திருவருளே தானாகி நிற்கும் நிலை ஆன்ம சுத்தியாகும்.

ஆன்ம நல்வினை தீவினை இரண்டையும் சமமாகக் கருதுதலே இருவினை மெய்யாகும். அதற்கும் இறைவனது திருவருட்சக்தியே தெளிவைக் கொடுக்கிறது. அந்த வேளையிலேயே மலபரிபாகம் ஏற்படுகிறது. முதலில் மாயாமலமும் பின்பு கன்ம மலமும் நீங்குகின்றன. இதன்பின்பு ஏற்படுவது சத்திநிபாதமாகும். இறைவனுடைய திருவருள் சக்தி ஆன்மாவில் படிதலே சத்திநிபாதம் எனப்படும். இதனை திருவருட் பயன் பின்வருமாறு கூறுகிறது

"நீடு மிருவினைக ணேராக நேராதல்

கூடுமிறை சத்தி கொளல்" இதன் பொருள் ஒன்றை ஒன்று ஒவ்வாத புண்ணிய பாவங்கள் ஆகிய இரண்டையும் சமனாக மதித்து விலக்கும் எண்ணம் ஆன்மாவின் உள்ளத்தில் உண்டாகும் நேரம் இறைவனுடைய திருவருட்சக்தி ஆன்மாவிற் பதியும் என்பதாக அமைகிறது. மேலும் இருவினை யொப்பைப் பற்றி திருவுந்தியார் பின்வருமாறு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சித்தமுந் தீய கரணமுஞ் சித்திலே

ஒத்ததே யொத்ததென் றுந்தீபற

ஒவ்வாத தொவ்வாதென் றுந்தீபற”

இதன்படி ஆன்மாவும் பொல்லாங்கு விளைக்கும் அந்தக் காரணங்களும் திருவருட்சக்தியுடன் பொருந்துதலே இருவினை யொப்பாகும். அதேவேளை இருவினையொப்பு ஏற்படாவிடின் திருவருட்சக்தியை பொருந்துதல் முடியாது என்பதையும் உணர்க.

ஆணவம் அநாதியே ஆன்மாவுடன் இயைந்துள்ளது. பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள், முனிவர்கள், மன்னர்கள், மனிதர்கள் யாரையும் ஆணவம் விட்டு வைக்கவில்லை. ஆணவத்தை நீக்க முடியாது - ஆனால் வலி குன்றச் செய்யலாம். அதனை திருவருட்சக்தியே செய்யவல்லது. சத்திநிபாதமூடாக அது நிகழ்கிறது. இது நான்கு வகையாக உண்டு. சிவப்பிரகாசப் பாடல் இதனை தெளிவுறுத்துகிறது.

“நாடிய சத்தி நிபாத நாலு பாத நண்ணும் வகை யெண்ணரிய ஞான பாதங்

கூடுமலர் தமக்குணர்வாய் நின்ற ஞானக் கூத்தனொரு மூர்த்திகொடு குறுகி மோக

நீடியகே வலசகல நிகழா வாறு நிறுத்திமல மறுக்குமிது நிலையார் சுத்தங்

கேடில் புகழ் தருஞ்சரியை கிரியா யோகக் கேண்மையரேல் இவையுணர்த்தக் கிளக்கு நூலே”

இதன்படி பார்க்கும் போது பக்குவத்திற்கேற்ப சத்திநிபாதம் பொருந்தும் முறை நான்கு வகைப்படும்.

01) மந்ததரம் : ஒரு கூறு திருவருட்சக்தி பாய ஒரு கூறு ஆணவம் வலி கெடல்.

02) மந்தம் : இருகூறு திருவருட் சத்திபடிய இருகூறு ஆணவம் வலி கெடல்.

03) தீவிரம் : மூன்று கூறு திருவருட்சத்தி படிய மூன்று கூறு ஆணவம் வலி கெடல்.

04) தீவிரதரம் : நான்கு கூறு திருவருட்சத்தி படிய ஆணவம் முற்றாக வலி கெடல்.

இங்கே ஆணவம் மலம் பக்குவமாகும் பொருட்டு உதவியாயிருந்த திரோதான சத்தி ஆணவமலம் பரிபாக முறுங் காலத்தில் திருவருட் சத்தியாக மாறி ஆன்மாக்களில் பதிதலை அவதானிக்கலாம். திருவருட்சத்தி உச்சமாக பதியும் போது வறுத்த வித்து முறைக்கின்ற ஆற்றலை இழப்பது போல ஆணவமலம் வலி குன்றிப் பிறவியைக் கொடுக்க முடியாத நிலையை அடைகிறது. இதனால் ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலந்து மோட்சமடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்ததர சத்திநி பாத முடையோர் சைவசமய தீட்சை பெற்று சிவபெருமானுடைய உருவத்திருமேனியை நோக்கி வழிபடுதலாகிய சரியை நெறியில் நிற்பார் என்று கூறப்படுகிறது.

மந்த சத்திநிபாத முடையோர் சரியை நெறியினின்றும் முன்னேறி விசேட தீட்சை பெற்று அகமும் புறமும் அருவுருவத் திருமேனியை அதாவது சிவலிங்கத்தை நோக்கி கிரியை நெறி நிற்பர்.

தீவிர சத்திநிபாத நெறியில் நிற்போர் பக்குவநிலை எய்தி அகத்தே சிவபெருமானது அருவத் திருமேனியை நோக்கி வழிபாடு செய்து யோக நிலையில் நிற்பர்.

தீவிரதர சத்திநிபாத நெறியில் நிற்போர் ஞானநிலையில் சிவனை வழிபட்டு இருவினையொப்பு மலபரிபாகம் உண்டாகி முத்திநிலையை அடைவார்கள்.

இவ்வகையிலே தொகுத்துப் பார்க்கும்போது சிவனுடைய திருவருட் சக்தி எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்கின்றோம். சைவசமயத்தவர்க ளாகிய நாம் சிறிய வயதிலிருந்தே படிப்படியாக திருவருட் சத்தியை அறிந்து அதனைக் கூட்டிக்கொள்வதற்கான வழிகளைப் பின்பற்ற வேண்டும். அதன் மூலம் திருவருளின் நோக்கறிதல் அவசியமாகிறது. அப்போதே தீய வழியில் செல்லாது காப்பாற்றப்படுவோம். மேலும் அற வாழ்க்கை வாழ வழிபிறக்கும். மேலும் ஆணவத்தை வலிகெடச் செய்யும் முழுமையான ஆற்றல் திருவருட் சத்திக்கே உண்டு என்பதை உணரமுடிகிறது. எனவே திருவருள் சத்தியைப் பெருக்கி சிவனுடன் இரண்டறக் கலந்து பேரின்ப பெருவாழ்வு பெறுவோமாக.

பகுபதம் என்பது ஒரு சொல்லைப் பொருள்படப் பிரிக்கக்கூடியதாக இருக்கும் சொல் பகுபதம் எனப்படும்.

உதாரணம்:- பனையோலை -- பனை + ஓலை

கும்பாபிஷேகம் -- கும்ப + அபிஷேகம்

பகாப்பதம் என்பது ஒரு சொல்லை மேலும் பொருள்படப் பிரிக்கமுடியாததாயின் அச்சொல் பகாப்பதம் எனப்படும்.

உதாரணம்:-

ஓரெழுத்துச் சொற்கள் :- பூ, கோ, ஆ, வா, போ, நா, சா, தீ, மா, ஓ

| **மனிதனும்** | **சிவாலயமும்** | **ஆறு ஆதாரம்** |
|---|---|---|
| புருவநடு | மூலஸ்தானம் | ஆக்ஞை |
| கழுத்து | அர்த்தமண்டபம் | விசுக்தி |
| நெஞ்சு | மகாமண்டபம் (அம்மாள்சந்நிதி) | அநாகதம் |
| வயிறு | தம்பமண்டபம் (நந்தி பலிபீடம்) | மணிபூரகம் |
| குறியருகில் | கொடிக்கம்பம் | சுவாதிஸ்டானம் |
| ஆண்/பெண் குறி | கொடித்தம்பப் பிள்ளையார் | மூலதாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவ சமயமும் சகவாழ்வும்

சைவப்புலவர் N.P ஸ்ரீந்திரன்
B.A.(Hons),M.A,Dip.in.Ed
ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்
மருதனார்மடம், சுன்னாகம்
உதவிச் செயலாளர்

## அறிமுகம்

உலகெங்கிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமயங்கள் பின்பற்றப்பட்டு வரினும், சைவ சமயமே! காலத்தால் முற்பட்டது என்பது ஆய்வாளர்கள் முடிவாகும். "இந்து" என்ற சொல் "சிந்து" நதியை குறித்து நின்றது. காலப்போக்கில் அப் பிரதேச மக்கள் பின்பற்றி வந்த சமய நம்பிக்கைகளையும், பண்பாட்டு அம்சங்களையும் குறித்து நின்றது.

சைவ சமயம் "சனாதனதர்மம்" என போற்றப்படும் மரபு காணப்படுகிறது. சைவ சமயம் மிகப் பழமையானது என்பதை இது விளக்கும். இச் சமயம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து நிலவிவருகின்றது. சிந்துவெளியில் கிடைத்த தொல்பொருள் சான்றுகள் இதனை விளக்கும். மிகப் பழங்காலம் தொட்டு இன்று வரை காலத்தால் அழியாது நிலைத்து நிற்பதுடன், பலகோடி மக்களின் வாழ்வியல் ஒழுக்கத்துக்கும், ஆன்மீக நாட்டத்துக்கும் வழிகாட்டியாக இருந்து வருகிறது.

சைவ சமயம் பல கடவுள் மூர்த்திகளையுடையது. எனினும், அதன் தலைமைக் கடவுள் மூர்த்தமாக சிவன் எனவே போற்றப்படுகிறது. சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவர்; அன்பின் வடிவினர்; உயிர்களிற்கு சுகம் அளிப்பவர்; பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் இருந்து வருபவர். இதனைத் திருவாசகம் "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றியனே!" எனக் குறிப்பிடும்.

உலகிலுள்ள ஒவ்வொரு சமயத்துக்கும் புனிதமான நூல் இருப்பது போல், சைவ சமயத்துக்கும் பல புனிதமான நூல்கள் உள்ளன. காலத்தால் முற்பட்ட வேத இலக்கியங்கள், இதிகாச புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள் என்பன அவையாகும். இவை இந்து சமயத்தின் பொது நூல்கள் ஆகும். ஆகமங்கள், திருமுறைகள் (12), சித்தாந்த சாஸ்திரங்கள் (14) என்பன சிறப்பு நூல்களாக உள்ளன.

இந்து சமயம், அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் எனும் மூவகை வேதாந்த கோட்பாடுகளையும், சாங்கியம், யோகம், நியாயம், சைவசேடியம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாமசை எனும் அறுவகை தரிசனங்களையும் கொண்டுள்ளது. சைவ சமயத்துக்கு தமிழர்களின் தனிப் பெரும் தத்துவமான சைவ சித்தாந்த தத்துவத்தையும் கொண்டுள்ளது. இந்து சமயம் சனாதன சைவம், சாக்தம், காணபத்தியம், வைஷ்ணவம், கௌமாரம், சௌரம் எனும் அறுவகைச் சமய பிரிவுகளையும் கொண்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம் – மதம் – சகவாழ்வு

சமயம் என்பது மனிதனை மனிதனாக வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பது. இதனை வள்ளுவர் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனக் குறிப்பிடுகிறார். மனிதனை இறைவனோடு தொடர்புபடுத்தி அல்லது மனிதன் இறைவனிடத்தில் தன்னை வழிப்படுத்தி வாழ்வாங்கு வாழும் முறையைக் கூறுவது சைவம்.

சமயத்தைக் குறிக்கும் இன்னொரு சொல் "மதம்" என்பதாகும். இதன் கருத்து மனிதர்களின் மனத்தோடும் உணர்வோடும் உறவாடுவது என்பதாகும். எனவே தான் எந்த மதமாக இருப்பினும் அது உலகிலுள்ள எல்லா மனிதர்களினுடைய மனங்களுடனும் மனித நேயத்துடன் உறவாடக் கூடிய மனித நேயப் பண்பைக் கொண்டிருக்கவேண்டும் எனக்கூறப்படுகிறது. சைவ சமயத்தின் பரந்த நோக்குகளில் ஒன்றாக மனித நேயம் பேசப்பட்டு வருவதாலேயே, காலாதி காலமாக நின்று நிலைத்து மனுக்குலத்துக்கு வழிகாட்டி வருகிறது.

சைவ சமயம் "இன்பமே! சூழ்க எல்லோரும் வாழ்க" என்று கூறுவதும் "வான்முகில் வழாது பெய்க" எனக் கூறுவதும், "குறைவிலாதுயிர்கள் வாழ்க" என வாழ்த்தி வழிகாட்டி வருவதும் இதற்கு தக்க சான்றுகளாகும். எனவே சமய சக வாழ்வு பற்றி சைவ சமயம் சிந்தித்திருப்பது போல் பிற மதங்கள் சிந்தித்திருக் கின்றனவோ என்பது தேடிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

சைவ சமயம் உலக மதங்கள் எல்லாவற்றிற்கும் சகோதரத்துவத்தைப் போதித்து நிற்கின்றது. அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் 1893ம் ஆண்டு நடைபெற்றிருந்த சர்வ மத தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த வீரத்துறவி விவேகானந்தர் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து "சகோதர சகோதரிகளே" என விழித்துக் கூறி சர்வமத தலைவர்களின் பாராட்டைப் பெற்றிருந்தார். எங்களின் சமய சக வாழ்விற்கு இதை விட சிறந்த உதாரணத்தை நாம் எங்கும் காணமுடியாது.

சைவ சமயம் போதிக்கும் உயர்ந்த கொள்கைகளில் ஒன்று வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பதாகும். இலங்கை வாழ் சைவர்களைப் பொறுத்தவரை இந்தக் கொள்கையினை அவர்களது வாழ்வியலில் கண்டுகொள்ளலாம். இங்குள்ள இந்துக்கள் பௌத்த விகாரைக்கு சென்று வருகிறார்கள். சைவர்களின் சமய சமரசம் நிலவும் மிக முக்கிய இடமாக கதிர்காம கந்தன் ஆலயம், நல்லூர் கந்தன் ஆலயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் என்பன வரலாற்றில் இடம்பெற்றிருப்பதை எவரும் அறிவர்.

கண்டங்களும், நாடுகளும் கலாசாரங்களும் மக்களைப் பிரித்தாலும் தொலைத்தொடர்பு, இணையம், வியாபாரம், உல்லாசப் பயணம், உலகளாவிய குடிப் பரம்பல் காரணமாக தூரமாய் இருந்து வந்தவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களாக ஆகியுள்ளனர். இந் நிலையில் பிற மத சமூகங்களுடனும் கலாசாரங்களுடனும் ஒத்துப் போவது காலத்தின் கட்டாய தேவையாகும். இந்த விடயத்தில் சனாதனதர்மமாகிய சைவ சமயம் உலகிற்கு பல செய்திகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

போதிக்க முடியும். இந்தியாவைத் தவிர உலகில் எந்தவொரு இடத்திலும் மதங்கள் நெருக்கமாகவும் சுமுகமாகவும் வாழ்ந்து வந்ததாக தெரியவில்லை. உலகில் எல்லா மதங்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியா ஒரு வீடாக இருந்து வருகிறது. யூதர்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், நாஸ்திகர்கள் எனப் பலரும் இங்கு அடைக்கலம் பெற்றுள்ளனர். இந்தியாவில் நூறு மில்லியன்களுக்கு மேல் முஸ்லிம்கள் இருக்கின்றனர். இதனைப் பெரும்பான்மை இந்து சமூகத்தினர் பெரு மனத்துடன் ஏற்று வாழ்ந்து வருகின்றனர். இந்து சமய வேதம் சொன்ன "ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி" என்ற உண்மையை இந்நிலை மெய்ப்பித்து காட்டுகின்றது. அதாவது உண்மைப் பொருள் ஒன்றே!. இதனைப் பலரும் பலவாறு கூறுவர் என்ற வேத சுலோகம் உலக மதங்களுக்கும் சமூகங்களுக்கும் சமய சமரச உண்மையை போதித்து நிற்கின்றது.

இந்து மதம் அன்பை அடிநாதமாக கொண்டது. சிவனையும் அன்பையும் ஒன்றாக நோக்குவது. எல்லா உயிர்களிலும் சிவனைக் காண்கின்றது. இதனைத் திருமந்திரம்

"அன்பும் சிவமும் இரெண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்
அன்பே சிவமாவது யாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருப்பாரே" எனக் குறிப்பிடுகின்றது.

இந்த உயர்ந்த கோட்பாடு ஏனைய மதங்களை மதிப்பதற்கும் அவர்களுடன் இணைந்து வாழ்வதற்கும் வழிகாட்டியாக உள்ளது.

சைவம் போதிக்கும் உயர்ந்த கொள்கைகளில் ஆன்மீகம் முக்கியமானது. ஆன்மீகம் என்பது எல்லா உயிர்களையும் சமமாக நோக்கி தத்தமது ஆத்மாவினால் பணி செய்வது ஆகும். மக்கள் பணி மகேசன் பணி ஆகும். வேறுபாடுகள் அற்றுப் போய்விடும். உலக உயிர்கள் அனைத்தையும் ஒன்றாக நோக்கும் மனப்பக்குவம் வந்துவிடும். இவ்விடமே சமய சமரசம் நிலவும் இடமாகும்.

சைவ சமயத்திலுள்ள ஆன்மீக ஞானிகள் அனைவரதும் வாழ்க்கை வரலாறுகள் இதற்குத் தக்க சான்று பகர்கின்றன. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என நாவுக்கரசர் கூறுவதும், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என வள்ளலார் கூறியிருப்பதும் சமய சமரசத்தின் அதி உச்சத்தைக் காட்டுவதாகும்.

சைவ சமயம் ஆன்ம விடுதலைக்கான வழிகளில் ஒன்றாக யோக மார்க்கத்தை கூறியுள்ளது. இந்த யோகக் கலையானது இன மத வேறுபாடின்றி உலகெங்கும் உள்ள மனிதர்களினால் பயிலப்பட்டு வரும் ஒரு ஆன்மீக அருங்கலை யாகும். மனுக் குலத்தின் விடுதலைக்காக யோகாக் கலையைக் கூறியிருக்கும் எம் சமயம் பரந்த நோக்குடையது என்பதனையும் மனித விடுதலையில் அதிக அக்கறை கொண்டுள்ளது என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றது. எனவேதான் இந்துத்துவ கொள்கைவாதியாகிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா. ஸ்தாபனத்திடம் சர்வதேச யோகா தினத்தை அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விட்டிருந்தார். அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக ஜூன் 25ம் திகதி சர்வதேச யோகா தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது சமய சமரச போக்கிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஏனைய சமயத்தவர்களும் இதனை ஏற்றுள்ளார்கள்.

சைவம் பிற உயிர்கள் மீது கருணை, இரக்கம் கொள்ளவேண்டும் என போதிக்கின்றது. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி மன்னனையும், புறாவிற்கு தசையை வெட்டிக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியினையும், தேர்ச் சில்லில் அகப்பட்ட பசுக் கன்றிற்காக தன் மகன் மீதே தேரையேற்றி மனு நீதியை நிலைநாட்டிய மனு நீதி கண்ட சோழனின் வரலாற்றையும் எமது சமயம் போதிக்கின்றது.

யாதார்த்த வாழ்வில் சனாதன சமயத்தவர்களின் சமய சமரச வாழ்வியலை கல்வி நிலையங்களிலும் வேலைத்தளங்களிலும் கலாசார நிகழ்வுகளிலும் கண்டு கொள்ளலாம். சைவர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், பாடசாலைகளில் சமய சமரச நிகழ்வுகளைக் கண்டுகொள்ளலாம். இங்கெல்லாம் கல்வி கற்கும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவர்கள் தத்தம் சமய விழாக்களையும் மத அனுஷ்டானங்களையும் எவ்வித தடையுமின்றி மேற்கொண்டு வருகின்றனர். காரியாலயங்களில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய தெய்வங்களினுடைய படங்களை வைத்து வழிபடுவதனையும் காணலாம்.

இவ்வாறு சனாதன சமயத்தவர்கள் சமய சமரச போக்குடையவர்களாக இருந்துவரினும், வேற்றுமத கடும் போக்காளர்கள் தங்களது கல்வி நிலையங்களில் சைவ சமய அனுஷ்டானங்களுக்குரிய இடம் வழங்கப்படாமை மன வேதனையைத் தருகின்றது. பெரும்பான்மை இஸ்லாமியர்களைக் கொண்டுள்ள கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரிகளில் கற்று வரும் எமது மாணவர்கள் சமய ரீதியாகவும், உணவு ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். கிறிஸ்தவ பாரம்பரியம் உள்ள பாடசாலைகளில் சைவ மாணவர்கள் கலாசார ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் வழிபாட்டிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இதன் மறுபக்கமாக அந்தரங்கமான முறையில் மத மாற்றங்களும் இடம் பெற்றுவருகின்றன. ஆனால் பரந்த நோக்குடைய சைவர்கள் பிற மதத்தினரை மதம் மாற்றிய செய்தியினை இலங்கையில் காணமுடியாது. ஆனால் தாமாகவே சிறப்பு கருதி சைவத்தில் மதம் மாறியுள்ளார்கள்.

எனவே சைவ மதம் தனது பரந்த நோக்கினாலும், சகிப்புத்தன்மையினாலும், ஆன்மீக வழிகாட்டலினாலும், சகோதரத்துவத்தினாலும் உலக மதங்களுடன் இனங்களுடனும் சமய சமரச வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டி வருகிறது எனின் மிகையன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "சைவாகமபூஷணம்"
# கௌரவப் பட்டம் பெறுவோர்



### வேதாகமவித்தகர், சிவபூஜாதுரந்தரர், சோதிடபூஷணம்,
### *சிவஸ்ரீ கந்தையா கிருபானந்தக் குருக்கள்*

நிலவளமும், நீர்வளமும், கனிவளமும் நிறைந்து விளங்கும் தென்மராட்சி யின் தலைநிலையாம் சாவகச்சேரியில் மீசாலைப் பதிசேர், பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் சோதிடராகவும் விளங்கிய பெரியதம்பிஐயா கந்தையா அவர்களின் தர்மபத்தினியாம் சாவகச்சேரி வடக்கு சின்னத்தம்பிக் குருக்கள் மகள் தங்கம்மாள்மணி வயிற்றினுள் சனித்து 1947.08.14இல் இவ்வுலகில் தோன்றியவரே சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள் அவர்கள்.

இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்விகற்று 1964இல் க.பொ.த. (சா.த)இல் மும்மொழித் தகமை சகிதம் சித்திபெற்றவர். தொடர்ந்து தொழில்நுட்பக் கல்லூரியின் மோட்டார் வாகனப் பொறியியலாளர் டிப்புளோமா நெறியில் கற்று விசேட தகமைச் சித்தியினை 1968ம் ஆண்டில் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு கல்வியினைப் பெற்றவர் ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சம்மேளனத்தின் சிங்கள மொழி லிகிதராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் 1970 முதல் 1973 வரை கடமையாற்றினார். அங்கு சேவையாற்றியதன் பின்னர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் சிங்கள மொழிபெயர்ப்பாளராக 1975 தொடக்கம் 1978 வரை சிறப்பாகக் கடமையாற்றி உத்தியோகப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

இதன் பின்னர் சைவசமய ஆகம குருத்துவப் பயிற்சியினையும் சோதிடப் பயிற்சியினையும் தமிழ்நாடு வேதாரண்யம் சிவஸ்ரீ வே. தியாகராஜக் குருக்களிடம் 1979 - 1980ம் ஆண்டுகளில் குருகுலப் பயிற்சியாகப் பயின்று 1981 ஆம் ஆண்டில் சிவாச்சாரிய அபிடேகம் பெற்றுக்கொண்டார்.

இதன் பேறாக 1981 தொடக்கம் 1982ஆம் ஆண்டுகளில் மலேசியா ஜோகூர் அருள்மிகு மகாமாரி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியராகப் பணியாற்றினார்.

இவரின் பரம்பரை ஆதீனக்குருத்துவத்துக்கு உரிமையான சாவகச்சேரி அருள்மிகு இலஞ்சியாரணிய மண்டுவில் சோலையம்மன் ஆலய பிரதம குருவாக 1984 முதல் இற்றைவரை நித்திய நைமித்திய கிரியைகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றார்.

இவரின் சைவாகம கிரியை முறைகளை உணர்த்தும் ஏனைய தரவுகளைக் கணித்தும் அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை 1983ம் ஆண்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினரான இவரை 2002ம் ஆண்டு முதல் தொடர்ந்து இன்றுவரை சபைத் தலைவர் பதவியில் நிலைபெறச் செய்து பெருமையுடன் அரும்பணிகள் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

சமய சமூகப்பணி ஆற்றுதலின் முன்னிற்பவரான குருக்கள் அவர்கள் யாழ் மாவட்ட சர்வமத அமைப்பில் (நான்கு சமயங்கள் ஒன்றிணைந்தது) 2007 முதல் உறுப்பினராகவும் 2011 முதல் மேற்படி அமைப்பின் சமகாலத் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

மேலும் இவர் தென்மராட்சிப் பிரதேசசபை சைவசமய ஆலய தர்மகர்த் தாக்கள், சைவாலய அபிவிருத்திச் சபை சம்மேளனம் ஆகியவற்றின் ஆலோசகரா கவும் போஷகராகவும் விளங்குகின்றார்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் இத்தகைப் பெரியாராகிய சிவஸ்ரீ கந்தையா கிருபானந்தக் குருக்கள் அவர்களின் சைவாகமகிரியா நெறிப் பணி களையும் சைவ சமய சமூகப் பணிகளையும் மதித்தும் பாராட்டியும் **"சைவகாம பூஷணம்"** என்னும் கௌரவப் பட்டத்தினை அன்னாருக்கு வழங்கிக் கௌரவிக் கின்றது.

ஏறாதிருந்த கொடியை ஏறச்செய்த சிதம்பரத்தில் உமாபதிசிவாசாரியார் கொடிக்கவிப் பாடல்களைப் பாடினார். இந்த நான்கு பாடல்களும் 14 சைவசித்தாந்த நூற் தொகுப்பில் சித்தாந்த அட்டகத்தில் காணப்படுகின்றது. கொடியேற்றத் திருவிழான்று இப்பாடல்கள் பாடிக் கொடியேற்றம் செய்யப்படுகின்றது.

ஓடாதிருந்த தேரை ஓடச்செய்ய மார்கழித் திருவாதிரை நாளில் சிதம்பரத்தில் சேந்தனார் திருப்பல்லாண்டுப் பாடல்களை பாடினார். இப்பதின்மூன்று (13) திருப்பல்லாண்டுப் பாடல்களும் பன்னிரு திருமுறையில் ஒன்பதாம் திருமுறையாக திருவிசைப்பாவை அடுத்து தொகுக்கப்பட்டுள்ளது.

### மகேஸ்வர பூசை

மகேஸ்வரன் ஆகிய சிவபெருமானுக்கு சிவாசாரியார்கள் அதாவது சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, சிவாசாரியார் அபிஷேகம் செய்யப்பெற்ற சிவாசாரியார்கள் செய்யும் பூசை ஆகும்.

### மாகேஸ்வர பூசை

மாகேஸ்வர பூசை என்பது மாக்கள் என்போர் அறிவிற் குறைந்தவர்கள். அதாவது மகேஸ்வரன் பேரறிவாளன். மகேஸ்வரனின் அடியார்களே மாகேஸ்வரர்கள் ஆவார். மாகேஸ்வரர்களாகிய திருநீறு, உருத்திராக்கம் தரித்த சிவனடியார்களை அழைத்து பாதபூசை செய்து அன்னதானம் செய்தல் மாகேஸ்வர பூசை எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "சைவாகமபூஷணம்" கௌரவப் பட்டம் பெறுபவர்



**ஆகமகிரியாஜோதி, ஆகமபிரதிஷ்டாசக்கரவர்த்தி, துவாஜாரோகண துரந்தரர், கிரியாகிரம விசாரத, பதிபசுபாசர்,**

***சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள்*** J.P.

சைவநாயன்மார்களுக்குக் குருபூசை மடம் அமைத்து வழிபாடாற்றிய நாயன்மார்கட்டுக் கிராமத்தில் மகாகவி காளிதாசரின் இருகுவம்சத்தை தமிழில் மொழி பெயர்த்த மகாவித்துவான் அரசகேசரி வழிபட்ட அரசடிப் பிள்ளையார் ஆதீன கர்த்தாக்களில் ஒருவராகத் திகழும் சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள் அவர்கள் 1949ம் ஆண்டில் சிவஸ்ரீ சதாசிவக் குருக்களுக்கு மகனாகத் தோன்றியவர்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் கல்விகற்று க.பொ.த. பரீட்சையில் சித்திபெற்ற பின் நல்லூர் பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் சிவானந்த குருகுலத்தில் சமஸ்கிருத குருகுலக் கல்வியைப் பெற்றார். கட்டுவன் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்களிடம் சைவக்கிரியைகள் தொடர்பாகக் கற்றதோடு யாழ் பல்கலைக்கழக சேர்.பொன்.இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனத்தில் கற்று சிவாச்சாரிய குருகுலப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர்.

*1979*ம் ஆண்டு சித்திரை உத்தர நன்னாளில் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்களினால் சிவாச்சாரிய அபிடேகம் செய்யப்பெற்றவர்.

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை, குருகுலவகுப்பு, சைவக்குரு மணிகள் நிறுவனம் நடத்தும் குருகுலவகுப்பு என்பவற்றில் போதகாசிரியராக பணியாற்றி வருவதோடு குருமார்களுக்கான கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து விரிவுரைகள் நிகழ்த்தி வருவதோடு பல சிவாச்சாரியார்களை உருவாக்கி குருபட்டா பிடேகமும் செய்து பயிற்சியும் வழங்கி வருகின்றார்.

இலங்கையின் பல பாகங்களிலும் ஆலய மகாகும்பாபிடேகங்களையும், மகோற்சவங்களையும் கிரியா பக்திபூர்வமாக நிகழ்த்தியுள்ளார். இதனால் குருக்கள் அவர்கள் ஆகமகிரியாஜோதி போன்ற எட்டுக்கும் மேற்பட்ட கௌரவப் பட்டங் களைப் பெற்றுள்ளார்.

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளராகவும், சைவக் குருமணிகள் குருகுலத்தின் முதல்வராகவும் பணியாற்றுவதோடு, யாழ் மாவட்ட சர்வமதப் பேரவை இந்து அமைப்புக்களின் ஒன்றியம், யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், பசுக்கள் இடபங்களின் பாதுகாப்புக்கான சகல சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் இணையம், நல்லூர் சங்கு தொண்டர்சபை ஆகியவற்றின் உறுப்பினராக இணைந்து பல சைவசமய சமூகப் பணிகளைச் செய்து வருகின்றார்.

மேலும் யாழ்ப்பாணம் சேவாலங்கா மன்றத்தின் சேவையை அறிமுகப்படுத்தி சமய சமாதான கலந்துரையாடல்களை நிகழ்த்துதல், சேவாலங்கா மூலம் தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற சமயங்களின் கலந்துரையாடலில் கலந்து சைவ சமயப் பெருமைகளை வெளிப்படுத்தியமை, சர்வோதயம் இலங்கை சமாதானப் பேரவை நடாத்தும் சர்வமதக் கலந்துரையாடல்களில் பங்குபற்றிச் சைவசமய சம்பந்தமான உரைகளை நிகழ்த்தியும் வருகின்றார்.

இவற்றோடு ஸ்ரீ நடராஜ சகலரநாமம், அக்னிகார்யம் (தமிழ் விளக்கக் குறிப்புகளுடன்), ஆன்மார்த்த சிவபூஜை, விக்கினேஸ்வர மகோற்சவப்பத்தகி, விக்கினேஸ்வர பிரதிஷ்டாவிதி போன்ற பல கிரியா சம்பந்தமான நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவரின் பல்வேறு நற்பணிகளையும் பாராட்டிக் கௌரவித்து இலங்கை சமாஜ சேவா நலன்புரிச் சம்மேளனம் இவருக்கு "தேசமானிய" என்னும் பட்டம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய நன்னாளில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் குருக்கள் அவர்களின் சிவாகம கிரியைகளின் முறைதவறா நெறிப்படுத்தலினையும் சைவ சமயப் பணிகளையும் பாராட்டி அன்னாருக்கு "சைவாகமபூஷணம்" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "சிவநெறிப்புரவலர்" கௌரவப் பட்டம் பெறுபவர்



## *லயன் திருநாவுக்கரசு சீவரத்தினம்,*

**உரிமையாளர் நந்தலாலா இரும்பகம், யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி நந்தலாலா இரும்பக ஸ்தாபனத்தின் உரிமையாளர் திருமிகு. திருநாவுக்கரசு சீவரத்தினம் அவர்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வேலணை சேர் சிற்பனைப் பதியில் பெருமைமிகு திருநாவுக்கரசு தருமலட்சுமி தம்பதியினருக்குப் புத்திரனாக 1948.02.27ந் திகதி பிறந்தவர்.

இவர் தீவகத்திலேயே முதன்முதலாக ஸ்தாபிக்கப் பெற்ற சைவப் பாட சாலையாகிய வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றபின் வேலணை மத்திய கல்லூரியில் உயர் கல்வியினை நிறைவு செய்தார்.

இயல்பாகவே கற்றலில் ஊக்கமும் இசையில் நாட்டமும் கொண்டதனால் இவர் கல்லூரி நாட்களில் பண்ணிசைப் போட்டிகளிலும், தேவார பாராயண நிகழ்வுகளிலும் பங்குபற்றிப் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர்.

கல்லூரிப் படிப்பினைப் பூர்த்தி செய்த பின்னர் கொழும்பு மாநகரிலும் யாழ்ப்பாணத்திலும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டு உயர்வடைந்து இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு நல்லறப் பணிகளை ஒல்லும் வகையால் செய்து வருபவர்.

மண்வாசனையாலும் பெரியார் தொடர்புகளினாலும் தம் வாழ்வில் சமயப் பணிகளிலும், சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டு பல்வேறு தொண்டுக ளையும் பணிகளையும் செய்துள்ளார்.

வேலணை சிற்பனை முருகன் ஆலயத்தின் பரிபாலன சபையின் பொருளாளராகவும் பின்னர் உபதலைவராகவும் விளங்கி ஆலய நித்திய நைமித்திய ஒழுங்குகளையும், ஆலயத் திருப்பணி வேலைகள், மகாகும்பாபிடேக வைபவம் போன்ற கருமங்களிலும் காத்திரமான பங்களிப்பினையும் பணிகளையும் செய்து வருபவர். இவ்வாலயத்தின் சப்பறத் திருவிழா உபயகாரரான இவர் ஆலயத்துக்கான பெரிய சப்பறத்தையும் செய்வித்துக் கொடுத்து ஆலயத்தின் சிறப்பிற்கு உதவியுள் ளார்.

மற்றும் வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோவில் நிர்வாகசபை உறுப்பினரான இவர் அக்கோயில் நிர்வாகத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணி வேலைகளிலும், திருவிழாக்கால கருமங்களிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டு பணி செய்பவராக விளங்குகின்றார்.

தீவக அரிமாக்கழகத்தின் நீண்டகால உறுப்பினரான இவர் 2009ம் ஆண்டில் தீவகவலய அரிமாக்கழகத் தலைவராகவும் இருந்துள்ளார். அதனூடாக பல பொதுச் சேவைகளையும் முன்னெடுத்துச் செய்து வருகின்றார்.

பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனத்தில் கோகுலப் புரவலர் லயன் கு. கங்கைவேணின் அவர்களுடன் இணைந்து தொழிற்பட்டு வருகின்றார்கள்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் இப்பெரியாரின் சைவ சமய சமூகப் பணிகளைப் பாராட்டி **"சிவநெறிப்புரவலர்"** என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "சிவநெறிப்புரவலர்" கௌரவப் பட்டம் பெறுபவர்



## *திருமிகு. சுப்பிரமணியம் சிற்றம்பலம்,*

**உரிமையாளர் KST ரெக்ஸ்,**
**மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

சைவமும் தமிழும் தழைத்து விளங்கும் யாழ்ப் பாணத்தில் பொன்னாலை பதியில் சைவப் பாரம்பரியத்தின் வழிநின்று ஒழுகும் குடும்பத்தில் சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1956.08.25ல் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத் திலும் உயர்கல்வியை காரைநகர் இந்துக்கல்லூரியிலும் பயின்றார். அதன் பின்னர் நல்லூரில் ஆசிரியர்களுக்கான புடைவைக் கைத்தொழில் பயிற்சியை பயின்று, கொழும்பு Cntex புடைவை தொழிற்சாலையில் தொழிநுட்பவியலாளராக பணி புரிந்தார். பின்னர் யாழ்ப்பாணத்தில் நெசவு கைத்தெறி தொழிற்சாலையை ஆரம்பித்து 10 வருடங்கள் நடாத்தியபின் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் KST புடைவை நிறுவனத்தை ஸ்தாபித்து இன்றுவரை சிறப்பாக நடாத்தி வரு கின்றார்.

தொழில் முயற்சியாளராக மட்டும் இல்லாமல் சிறுவயது முதல் சமயப் பணியையும் மேற்கொண்டு வருகின்றார். பொன்னாலை வைரவர் ஆலயம் மற்றும் பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூஜை வழிபாடுகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளார். அது மட்டுமல்லாது புண்ணிய பூமி என்று இந்துக்களால் போற்றப்படும் வட இந்தியா (காசிவிஸ்வநாதர் ஆலயம்) மற்றும் தென்னிந்தியாவில் அண்ணாமலை, மதுரை, சிதம்பரம் உட்பட பல பாடல் பெற்ற ஆலயங்களுக்கும் தல யாத்திரை மேற்கொண்ட வண்ணம் உள்ளார்.

சைவசமயம் திகழவேண்டும் என்ற மனப்பாங்குடன் தொழிற்பட்டு வருபவர். அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தாருடன் பலகாலமாக தொடர்பு பட்டு உதவிகள் புரிந்து வருகின்ற இப்பெரியாரின் பணிகளைப் பாராட்டி அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் **"சிவநெறிப்புரவலர்"** எனும் விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# கௌரவிக்கப்பெறும்

## செல்வி சு. மீனாட்சி அவர்கள்

## அறநெறி ஆசிரியர் திருநெறிய தமிழ் மறைக் கழகம் இணுவில்

இசையினால் இறைவனை இசையச் செய்யலாம் எனும் வகையில் பாடும் பணியே பணியாய் அருளாய் எனக் கேட்டவர் போன்று இணுவில் மேற்கில் பிறந்தவர் சு. மீனாட்சி அவர்கள். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்றார். வட இலங்கை சங்கீதசபை பரீட்சைகளில் சித்தி பெற்றவர். சைவசமய தீட்சைபெற்று விபூதி, சந்தன குங்கும திலகத்தோடு சைவாசார சீலராய் வாழ்ந்து வருகின்றார். தினமும் காலையில் பூவொடு நீர் சுமந்து தமிழோடு இசைபாடி வருகின்றார்.

பஞ்சபுராணம் பாடுதல், பஜனை பாடுதல், பிள்ளையார் பெருங்கதை படித்தல், திருமுறை, திருவாசகம் முற்றோதல், ஊஞ்சல் பாக்கள் பாடுதல், புராண படனம் செய்தல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றார். மேலும் இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தின் அறநெறிப்பாடசாலை ஆசிரியராக இணைந்து மாணவர்களை வழிப்படுத்தி வருகின்றார். நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவ காலத்தில் அறநெறிப் பிள்ளைகளின் பஜனை நிகழ்வை வழிப்படுத்தினார். இவை ஓம் தொலைக்காட்சியில் ஒலிஒளிபரப்பப்படுகின்றது.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் நால்வர் குருபூசையை முன்னிட்டு அவர்களது திருமுறைகளை முற்றோதல் செய்வதில் முன்னின்று பாடுபவர் சு. மீனாட்சியாவார்.

தம்மூரில் உள்ள இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார், இணுவில் கந்த சுவாமி கோயில், இணுவில் நரசிங்க வைரவர் கோயில், சுதுமலை சித்தி விநாயகர் ஆலயமான பல ஆலயங்களுக்கு சென்று திருமுறை பாடி வழிபடுவது மட்டுமன்றி, இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து அறநெறி மாணவர்களை அழைத்துக்கொண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில், இணுவில் சிவகாமி அம்மன் கோயில், தாவடி பத்திரகாளி கோயில், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோயில் போன்றவற்றிற்கு பாதயாத்திரை செய்தும் வழிபட்டு வருகின்றார்.

தன்கடனடியேனையும் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே எனும் அப்பர் வாக்கிற்கமைய சைவப் பணியாற்றிவரும் செல்வி. சு. மீனாட்சி அவர்களை அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் பொன்னாடை போர்த்தி மலர்மாலை சூட்டிக் கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞ் சைவப்புலவர்கள் விபரம் - 2017

## அறிமுகக் குறிப்பு



**01. செல்வி ஜயலோஜனா சிவஞானசுந்தரம் :-**

இல 70 A, 3/1 பாமன் கடை வீதி கொழும்பு - 06 எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 08.01.1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் மருத்துவ உத்தியோகத்தராக பயியாற்றுகின்றார். M.B.B.S(Ceylon), M.Sc(Comm.med) Colombo ஆகிய பட்டங்களை பெற்றுள்ளார்.



**02. திரு. முருகப்பன் சேமகரன் (கல்லோடைக்காரன், அம்பிகைதாசன்)**

இல 23/2 பிள்ளையார் கோவில்வீதி கல்லடி உப்போடை மட்டக்களப்பு எனும் முகவரியை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு தற்பொழுது 3 Carroll Crt Narre Warren vic 3805 Australia எனும் முகவரியை வதிவிடமாகவும் கொண்டவர். 1954.07.20 ஆம் திகதி பிறந்த இவர் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். தொழில் சார் தகமைக் கல்வியாக கல்வி டிப்ளோமா (ஆங்கிலம்) ஆங்கில தொடர்பாடல் கற்கை நெறிகள் (பேச்சு இலக்கணம்) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். கூட்டுறவுப் பரிசோதகர் ஓய்வுநிலை உத்தியோகத்தரான இவர் உற்பத்தி ஆய்வு உதவியாளர் பதவியினை வகிக்கின்றார். மெல்லத் தமிழ் இனிவரும் (கவிதை), புலம் பெயர்ந்தோரின் புலம் பெயரா நெஞ்சங்கள், சித்தவனத்தில் சக்திமயம் (கவிதை), கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ பேச்சியம்மன் மற்றும் சித்திவிநாயகர் ஆலய தலவரலாறு ஆகிய நூல்களினை எழுதியுள்ளார்.

சைவமய சமூகப் பணிகளாக ஆன்மீக சொற்பொழிவு, பட்டி மண்டபம், கவியரங்கம், வானொலி நேரடி வர்ணனை, வானொலி நிகழ்ச்சித் தொகுப்பு, தமிழ் போட்டிகள் நடுவர் ஆகிய பணிகளை ஆற்றுகின்றார்.



**03. திரு. செல்வம் கேமநாதன் :-**

இல 74 சமன்பிட்டி பொலனறுவை எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 29.09.1994 ஆம் ஆண்டு பிறந்த இவர் தேசிய கல்வியற் கல்லூரி மட்டக்களப்பு ஆசிரியர் ஆவார். சைவசமய சமூகப் பணிகளாக அறநெறி ஆசிரியர் ஆலய தொண்டு, ஆலய வர்ண வேலை செய்தல் ஆகிய பணிகளை ஆற்றி வருகின்றார்.



**04. திருமதி கமலாதேவி சபாரத்தினம் :-**

இல 435 கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 11.02.1945 ஆம் ஆண்டு பிறந்த இவர் உதவி மருத்துவ உத்தியோகத்தராக (A.M.P) பணியாற்றுகின்றார். தர்மாசிரியர் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய சமூகப் பணிகளாக ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் ஆலயப் பொருளாளர், ஸ்ரீ துரவடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை பொறுப் பாசிரியர், நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய நிர்வாக உறுப்பினர், ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர் ஆகிய பணிகளினை ஆற்றிவருகின்றார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல வகையிலும் உதவி வருகிறார்.



**05. திரு. நாகநாதன் அகிலன் :-**

அண்ணாவீதி, கீரி, மன்னாரை வதிவிடமாகக் கொண்டவர் 04.08.1997 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். சைவ சமய சமூகப் பணிகளாக கீரி ஸ்ரீமுருகன் அறநெறி ஆசிரியராகவும் கீரி ஸ்ரீமுருகன் ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.



**06. செல்வி நித்தியா இராமலிங்கம் :-**

இல 23 கறப்பளை முத்துக்கல் பொலனறுவை எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 22.04.1995 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். அறநெறி இறுதிநிலை ஆசிரியர், இந்து தர்மாசிரியர் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்து அறநெறி பாடசாலை ஆசிரியராகப் பணியாற்று கின்றார். இவர் சைவசமய சமூகப் பணிகளாக அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குரிய கலை நிகழ்வுகள் பண்ணிசை, பஜனை மற்றும் யோகாசனம், தியானம் போன்றவற்றையும் ஆலய சிரமதானம் அன்னதான குழுவோடு பணி செய்தல், காமதேனு இந்து சமய வளர்ச்சி மன்றம், சமன்பிட்டி இந்து மக்கள் மன்றம், பொலனறுவை இந்து இளைஞர் பேரவை என சமன்பிட்டி இந்து மன்றங்களில் அங்கத்தவராகி அதனூடாக சமயப் பணி புரிகின்றார்.



**07. திரு. செல்லத்தம்பி சதீஸ்குமார் :-**

இல 41 சமன்பிட்டி பொலனறுவை எனும் முகவரியை வதி விடமாகக் கொண்டவர். 11.09.1982 ஆம் ஆண்டு பிறந்த இவர் சுகாதார அமைச்சில் அலுவலராக பணியாற்றுகின்றார். இந்து தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். சைவசமய சமூகப் பணிகளாக ஆலயப்பணி, சமூகசேவை, சிரமதானம், அறநெறி மாணவர்களுடைய கற்றலுக்கும் மேம்பாட்டிற்கும் உதவுதல் ஆகிய பணிகளினை மேற்கொண்டு வருகின்றார்.

**08. திருமதி சுவாசினி ரவேந்திரன்**

இல 90 N சமன்பிட்டி கறப்பளை பொலனறுவை எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 08.09.1989 ஆம் ஆண்டு பிறந்த இவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராதனைப் பல்கலைக்கழக விடுகைநிலை மாணவியாவார். தர்மாசிரியர், இறுநிலை அறநெறியாசிரியர் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளார். தற்பொழுது அன்னை ஸ்ரீ சாரதாதேவி அற நெறிப் பாடசாலை பிரதி தலைமையாசிரியராக பணியாற்றுகின்றார். சைவசமய சமூகப் பணிகளாக அறநெறி சிவதொண்டர் மாணவர் களுக்கான பயிற்சி வகுப்புக்கள், கலை நிகழ்வுகளை மேடையேற்றல், இறுதிநிலை பயிற்சி வகுப்புக்கள், மாணவர்களுக்கு சொற்பொழிவு பேச்சு என்ப வற்றுக்கு தயார்படுத்தல், ஆலய சிரமதானம் மேற்கொள்ளல் போன்ற பணிகளை ஆற்றிவருகின்றார்.



**09. செல்வி சின்னையா வதனி :-**

பன்ன வெட்டுவான் மடுவீதி, மன்னார் எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 09.08.1996 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். சைவசமயப் பணிகளாக பன்ன வெட்டுவான் இந்து இளைஞர் மன்ற அங் கத்தவராக பணியாற்றுகின்றார்.



**10. திருமதி ருக்மணிதேவி சிவபாலன் :-**

28-3/1 கிங்றோஸ் அவனியூ கொழும்பு 04 எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 09.08.1958 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். இவர் சித்தாந்தரத்தினம் திரு முறை நெறிச் செல்வர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார். கணக்கு லிகிதராகப் பணியாற்றும் இவர் சைவ சமய சமூகப் பணிகளாக கோயில் தொண்டு, திருமுறை முற்றோதல், கந்தபுராணம் முற்றோதல், திருவிளையாடற் புராணம் முற்றோதல் ஆகிய பணிகளையும் மேற் கொண்டு வருகின்றார்.



**11. திரு கந்தசாமி கௌசிகன் :-**

பாடசாலை வீதி தேத்தாத்தீவு - 01 களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 30.08.1993 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இசைப்பிரிவில் கல்வி பயிலும் நான்காம் வருட மாணவன் ஆவார். சமய பணிகளாக ஆலயங்களில் பஜனை செய்தல் பணியினை மேற்கொண்டு வருகின்றார்.

**12. திரு தம்பிஐயா மனோஜ்குமார் :-**

செட்டிவளவு இணுவில் மேற்கு இணுவில் எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 06.02.1985 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனியார் கல்வி நிலையத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்த இவர் சமயச் சொற்பொழிவாளர் ஆவார். சைவநெறிச் சன்மார்க்கர், சைவசின்மயர் ஆகிய பட்டங்களை பெற்றுள்ளார். தரம் 10, 11 சைவநெறி வினாவிடை நூலின் ஆசிரியராவார். சைவ சமய சமூகப்பணிகளாக இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபையில் செயலாளராகவும் தற்பொழுது பொதுச் செயலாளராகவும் அறநெறிப் பாடசாலை அதிபராகவும் பணியாற்றுகின்றார்.



**13. செல்வி தீபா அர்ச்சனா துரைராஜ் :-**

இல 60, ஏக்கர் முந்தல் புத்தளம் எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 08.04.1993 ஆம் ஆண்டு பிறந்த இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிக சிறப்புக் கற்கையை பூர்த்தி செய்து இளங்கலைமாணி பட்டத்தினை பெற்றுள்ளார்.



**14. செல்வி குயிலினி பஞ்சலிங்கம் :-**

செட்டியார் குறிச்சி பூநகரி எனும் முகவரியை வதி விடமாகக் கொண்டவர். 28.01.1997 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். ஆலய சரியைத் தொண்டுகளை மேற்கொண்டு வருகின்றார்.



**15. செல்வி லோஜினி முத்துக்குமார் :-**

இல 144, கறப்பளை முத்துக்கல் பொலனறுவை எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 02.10.1995 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். அறநெறி ஆசிரியராக பணியாற்றும் இவர் இந்து தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். சைவசமய சமூகப் பணிகளாக அறநெறி ஆசிரியப்பணி சிவதொண்டர் அணி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.



**16. செல்வி அறிதா பஞ்சலிங்கம் :-**

செட்டியகுறிச்சி பூநகரி எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 11.05.1994 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். ஆலய சரியைத் தொண்டுகளை மேற்கொண்டு வருகின்றார்.

**17. செல்வி மந்தாகினி பாலச்சந்திரன் :-**

நரியிட்டான் மல்லாகம் எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 15.08.1996 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை தேசிய மாணவர் படையணியின் சார்ஜன் பதவியிலும் இலங்கை பெண்கள் வழிகாட்டல் அமைப்பில் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார். இவர் சைவசமய சமூகப் பணிகளாக ஆலய சிரமதானப் பணிகள், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சமய நிகழ்வுகளின் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி வருகின்றார்.



**18. செல்வி சின்னராசா சனுஷ்யா :-**

கணேஸ்வரம் அளவெட்டி எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 01.12.1995 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். சைவசமய சமூகப் பணிகளாக தனியார் வகுப்புக்களை நடாத்துதல், அறநெறி மாணவர் களின் சமய நிகழ்வுகளில் உதவுதல் ஆகிய பணிகளினை ஆற்றி வருகின்றார்.



**19. திருமதி நரேந்திரதிலகை நடராஜா :-**

50, சென் லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 29.01.1935 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஓய்வுநிலை ஆசிரியர் ஆவார். அத்துடன் சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச் செல்வர், பிரவேச பண்டிதர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார். தமிழ் பட்டயம் ஆய்வு நூலை எழுதியுள்ளார். சைவசமய சமூகப் பணிகளாக திருமுறை, திருவாசகம் ஓதல், இந்துசமய கலை கலாசார பணிமன்றம், கொழும்பு தமிழ்ச் சங்கம் திருவாவடுதுறை ஆதீனம் ஆகியவற்றின் ஆயுள் அங்கத்தவர் ஆவார்.



**20. செல்வி. வேல்நாயகம் லவனியா :-**

இல 17, கறப்பளை முத்துக்கல் பொலனறுவை எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 29.05.1996 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ளார். தற்பொழுது அறநெறிப் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்று கின்றார்.



**21. திரு. குணசிங்கம் கந்தபாலன் :-**

கோயில் தெரு விதானையார் ஒழுங்கை கோப்பாய் தெற்கு கோப்பாய் எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்டவர். 15.09.1975 ஆம் ஆண்டு பிறந்த இவர் கட்டுமான தொழில் நுட்பம் NVGS சான்றிதழ் கற்கையை மேற்கொண்டுள்ளார். தற்பொழுது காப்புறுதி ஆலோசகராக பணியாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



22. திருமதி நிர்மலாதேவி தனசிங்கநாதன் :-

இல 17A, 55 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06 எனும் முகவரியை வதி விடமாகக் கொண்டவர். 10.02.1955 ஆம் ஆண்டு பிறந்த இவர் க.பொ.த. சாதாரணதரம் வரை கல்வி கற்றுள்ளார். சித்தாந்த ரத்தினம் பட்டத்தினை பெற்றுள்ளார். சமயப்பணியாக தேவார, திருவாசக முற்றோதலை மேற்கொண்டு வருகின்றார்.

## 2017.11.04 இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவுக்கு அன்பளிப்பு வழங்கிய இளஞ்சைவப் புலவர்கள் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. | திரு. நாகநாதன் அகிலன் | 2000.00 |
| 02. | செல்வி அநிதா பஞ்சலிங்கம் | 2000.00 |
| 03. | செல்வி. குயிலினி பஞ்சலிங்கம் | 2000.00 |
| 04. | திருமதி. ருக்மணி சிவபாலன் | 2500.00 |
| 05. | திருமதி. நரேந்திரதிலகை நடராஜா | 3000.00 |
| 06. | திரு. குணசிங்கம் கந்தபாலன் | 2500.00 |
| 07. | செல்வி. வேல்நாயகம் லவனியா | 2000.00 |
| 08. | திரு. செல்வம் கேமநாதன் | 2000.00 |
| 09. | திரு. செல்லத்தம்பி சதீஸ்குமார் | 2000.00 |
| 10. | செல்வி. நித்தியா ராமலிங்கம் | 2000.00 |
| 11. | திருமதி. சுவாசினி ரவேந்திரன் | 2000.00 |
| 12. | செல்வி. லோஜினி முத்துக்குமார் | 2000.00 |
| 13. | செல்வி. சின்னையா வதனி | 2000.00 |
| 14. | திருமதி. நிர்மலா தனசிங்கநாதன் | 2500.00 |
| 15. | செல்வி. தீபாஅர்ச்சனா துரைராஜ் | 2000.00 |
| 16. | செல்வி. ஜெயலோஜனா சிவஞானசுந்தரம் | 2200.00 |
| 17. | செல்வி. மந்தாகினி பாலச்சந்திரன் | 2000.00 |
| 18. | செல்வி. சின்னராசா சனுஷ்யா | 2000.00 |
| 19. | திருமதி. கமலாதேவி சபாரத்தினம் | 5000.00 |
| 20. | திரு. கந்தசாமி கௌசிகன் | 2000.00 |
| 21. | திரு. தம்பிஜயா மனோஜ்குமார் | 2000.00 |
| 22. | திரு. முருகப்பன் சேமகரன் | 2000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# அமரர் நி. தசீதரன் நினைவுகள்

தெல்லிப்பழை பன்னாலையில் திரு.க. நித்தியானந்தன் தம்பதிகளுக்கு 24-10-1975ஆம் ஆண்டு மூத்த பிள்ளையாகப் பிறந்தார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்தும் சைவப்புலவர் தேர்ச்சியில் சித்திபெற்று 2000ம் ஆண்டில் சைவப்புலவர் பட்டம் பெற்றார். இத்தோடு சைவசித்தாந்த பண்டிதர் இந்து தர்மாசிரியர் பட்டங்களையும் பெற்றார். யாழ் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டமும் பெற்றார்.

இரண்டாயிரமாமாண்டிலிருந்து சங்கத்தோடு இணைந்து பணியாற்றி வந்தவர். ஆண்டுதோறும் பட்டமளிப்பு விழாக்களில் தவறாது முன்னின்று உழைத்தவர். யாழ்ப்பாணம், திருகோணமலையில் வகுப்புக்களை நடத்தியவர், பல மாணவர்களை இளம் சைவப்புலவர் தேர்வில் கற்பதற்கு வழிகாட்டியவர். மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாண நிலையங்களில் சங்கத்தின் தேர்வுகளை நடத்தியவர்.

சங்கத்தின் சைவசமய பிரசார செயலாளராகவும், தேர்வு உபசெயலாளரா கவும் 2014ஆம் ஆண்டு முதல் தன்னுயிர் பிரியும் வரை செயலாளராகவுமிருந்து தன்னலம் கருதாது தொழிற்பட்டார். சைவப்புலவன் (2010), சைவநாதம் மலர்கள் வெளிவர விளம்பரங்கள் பெறுவதோடு மலரை வடிவமைப்பதில் முன்னின்று உழைத்தவர். பல கட்டுரைகளை எழுதியவர்.

சமயகுரவர் குருபூசைகள், சந்தான குரவர் குரு பூசைகள், சைவசமய தீட்சை வழங்குதல் போன்ற பணிகளை ஆங்காங்கே நடத்தி சைவசமயம் வளரப் பணி யாற்றினார். சங்கம் நடாத்தும் குருபூசைகள் எல்லாவற்றிலும் தவறாது பங்கு பற்றுவதோடு தாம்சார்ந்தவர்களையும் பங்குபற்றச் செய்தவர். சைவப்புலவர், சைவாசாராசீலராக வாழ்ந்தது மட்டுமன்றி செ. கந்த சத்தியதாசனின் வழிகாட்ட லில் தன் நாவன்மையால் ஆலயங்கள், பாடசாலைகள் தோறும் சைவசமயச் சொற்பொழிவுகளை தொடராக நிகழ்த்தி வந்தவர். புராணபடனம், பட்டிமன்றங் களிலும் கலந்து சைவம் வளரச் செயற்பட்டார். சைவபரிபாலன சபையிலும் ஆயுள் அங்கத்தவராக இணைந்து பல சைவப்பணிகளை ஆற்றியவர்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி, அமுத சுரபி க. மோகனதாஸ் சுவாமிகளுடன் இணைந்து மலைநாடுகளில் சைவப் பிரசாரப் பணிகளை ஆற்றியவர். அவர்களோடு தென்னிந்திய, வடஇந்திய தலயாத்திரை மேற்கொண்டு வாழ்வில் புண்ணியம் சேர்த்தார்.

தனது 42ஆவது வயதில் செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் தன் பணிகளுக் காகச் சென்று நோய்வாய்ப்பட்டு 13-05-2017ஆம் நாள் காலையில் பூதவுடல் நீத்து தில்லை நடராஜப் பெருமான் திருத்தாளில் சென்று சேர்ந்தார். அன்னாரின் இழப்பு சங்கத்திற்கு பேரிழப்பாக உள்ளது. அன்னாரின் பணிகளை சைவப்புலவர்கள் மறந்து விடமுடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தில்லைக்கூத்தன் திருப்பாதங்களைப் பிரார்த்திப்போமாக.

**சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்**

**தேர்வுச் செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயலாளர் க. நித்தியதசீதரன் சிவபதமெய்திய 13-05-2017**
**அன்று சங்கத்தினர் வெளியிட்ட துண்டுப்பிரசுரம்**

# இதய அஞ்சிலி

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் கௌரவ செயலாளராய்
அனைத்துச் செயல்களிற்கும் முதுகெலும்பாய் திகழ்ந்து அரும்பணியாற்றிய

## அமரர். சைவப்புலவர் நித்திய தசீதரன்

**அவர்களின் ஆத்மசாந்திக்கான இதய அஞ்சலிகள்**



சுற்றும் புவியில் அறிவுச் சூரியராய் - நன்றே
கற்ற வித்தையால் ஞாலம் போற்றி ஏற்ற
முற்றிய பண்பாட்டு முதுசமாய் திகழ்ந்த - எம்
பற்றுமிகு உறவே புலவ! - உம் பிரிவால் தவிக்கிறோம்
தரணியில் சொல்லாட்சி புரியும் வித்துவமே!
பரமசிவன் புகழ்பாடும் நிகரில்லா கவித்துவமே - அன்புக்
கரம் நீட்டி யாவர்க்கும் உதவும் தனித்துவமே!
உரமான சைவப்புலவர் சங்க செயலாளரே - தவிக்கிறோம்
உறங்காமல் சங்கத்திற்காய் வாழ்ந்தாய் - மேடை
இறங்காமல் அனைத்துமாய் உழைத்தாய்
கறங்குபோல் சுழன்று பணிபல புரிந்தாய்!
அறவாழ்வே அற்புதம் என நயந்தாய்!
வினைக்கொள்கை தனை உம் வாழ்வால்,
அனைவருக்கும் விளம்பலுற்றாய் போலும் - கல்வி
அணையாய் விளக்கை ஏற்றினாய் - ஈசன் பாதமே
துணையென பற்றினாய் அடைக ஆத்மா சாந்தி

13-05-2017

**அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்**
**நடத்தும்**

## சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவ மகாநாடும்

**காலம்**

மங்கலகரமான ஏவிளம்பி வருடம் ஐப்பசித்திங்கள்
பதினெட்டாம் நாள் சனிக்கிழமை
(2017.11.04)

**இடம்**

யா / வண் நாவலர் மகாவித்தியாலய மண்டபம்

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
நித்திய தசீதரன் அரங்கு

**தலைவர்**

சைவப்புலவர், சித்தாந்த சிரோமணி
முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்
(தலைவர் அ.இ.சை.பு.சங்கம்)

**திருமுன்னிலை**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**முதன்மை விருந்தினர்**

பேராசிரியர் Dr. மா.வேதநாதன் அவர்கள்
தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்
நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

153. கே.கே.எஸ் வீதி
கொக்குவில்

விழாக்குழு
அ.இ.சை.பு.சங்கம்

**சிறப்பு விருந்தினர்**

சிவஸ்ரீ. க.கிருபானந்தக் குருக்கள் அவர்கள்
(பிரதம குரு - சோலை அம்மன் தேவஸ்தானம், சாவகச்சேரி)
தலைவர்- அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை

" தேசமானிய " "ஆகம கிரியா ஜோதி"
சிவஸ்ரீ. சதா.மகாலிங்க சிவக்குருக்கள் அவர்கள்
(பிரதம குரு - அரசடிப்பிள்ளையார் ஆலயம், நாயன்மார்கட்டு

லயன் திருநாவுக்கரசு சீவரத்தினம் அவர்கள்
(உரிமையாளர் நந்தலாலா இரும்பகம் யாழ்ப்பாணம்)

திருமிகு. சுப்பிரமணியம் சிற்றம்பலம் அவர்கள்
(உரிமையாளர் கே.எஸ். ரி.ரெக்ஸ். யாழ்ப்பாணம்)

**கௌரவ விருந்தினர்**

பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள்
(தலைவர்.அகில இலங்கை திருமுறை மன்றம் - யாழ்ப்பாணம்)

செல்வி.சு.மீனாட்சி அவர்கள்
(இணுவில் ஸ்ரீ பரராசப் பிள்ளையார் கோவில் அறநெறிப்
பாடசாலை ஆசிரியர் )

**நிகழ்ச்சி நிரல்**

காலை 8.30 மணி
யா வண். சாந்தையர் மடம் கற்பகப் பிள்ளையார் கோவில்
வழிபாட்டின் பின் விருந்தினர் விழா மண்டபம் வருகை

**அமர்வு I**

தலைமை
சைவப்புலவர் சித்தாந்த சிரோமணி
மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்

**காலை 9.00 மணி**

* ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலைக்கு மலர் மாலை அணிதல்
* மங்கல விளக்கேற்றல்
* நந்திக்கொடி ஏற்றல்
  கொடிக்கவி பாடல்: சைவப்புலவர் சண்முகவடிவு தில்லைமணி அவர்கள்
* திருமுறை ஓதல்
  சைவப்புலவர் கவிதா கதிரமலை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலை 9.15 மணி**

வரவேற்புரை:-
சைவப்புலவர் வ.தயாபரசிவம் அவர்கள்
(ஓய்வு நிலைப் பொறியியலாளர்)

* ஆசியுரை:-
சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள் அவர்கள்
* அருளுரை:- ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்
* தலைமையுரை:-
சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்ச
* முதன்மை விருந்தினர் உரை:-
பேராசிரியர் மா. வேதநாதன் அவர்கள்

**காலை 10.45 மணி கௌரவிப்பு வைபவம்**

நெறிப்படுத்தல்
**சைவப்புலவர் ச.முகுந்தன் அவர்கள்**
( பொருளாளர் அ.இ.சை.பு.சங்கம்)

**1. கௌரவப் பட்டம் வழங்கல்**

பெறுநர்
1. சிவஸ்ரீ. க. கிருபானந்தக் குருக்கள்
2. சிவஸ்ரீ.சதா. மகாலிங்கசிவக்குருக்கள்

அறிமுக உரை
1. சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் அவர்கள்
( பிரசார அமைச்சர் )
2. சைவப்புலவர் கா.கமலநாதன் அவர்கள்
( உதவித் தேர்வுச் செயலர்)

பெறுநர்
1. லயன் திருநாவுக்கரசு சீவரத்தினம் அவர்கள்
2. திருமிகு. சுப்பிரமணியம் சிற்றம்பலம் அவர்கள்

அறிமுக உரை
1. சைவப்புலவர் ந. புகன் ஸ்ரீ இந்திரன் அவர்கள்
( உதவிச் செயலர் )
2. சைவப்புலவர் சி. நந்தகுமார் அவர்கள்
( செயற்குழு உறுப்பினர் -
முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி அச்சுவேலி )

**கௌரவிப்புப் பெறுவோர்**

பெறுநர்
1. பண்டிதர். வ. பேரின்பநாயகம் அவர்கள்
2. செல்வி சு. மீனாட்சி அவர்கள்

அறிமுக உரை
1. சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம்
( செயற்குழு உறுப்பினர்)
2.சைவப்புலவர் உருத்திராதேவி பகீரதன் அவர்கள்
( செயற்குழு உறுப்பினர்)

**2. இளஞ்சைவப்புலவர் பட்டமளிப்பு**

நெறிப்படுத்தல்
சைவப்புலவர் கந்தசத்தியதாசன் அவர்கள்
( தேர்வுச் செயலாளர் அ.இ.சை.பு.சங்கம்)

பெறுவோர்
2017 ம் ஆண்டுத் தேர்வில் சித்தி பெற்றவர்

## அமர்வு II

**காலை 11.30 மணி**
**"சைவநாதம் மலர் - 07" வெளியீடு**

தலைவர்
சைவப்புலவர் கலாபூஷணம் அ.பரசுராமன் அவர்கள்
( உப தலைவர் - அ.இ.சை.பு. சங்கம்)

*தலைமையுரை*
*வெளியீட்டுரை:*
வாழ்நாள் பேராசிரியர், இலக்கியகலாநிதி
பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்
(யாழ்.பல்கலைக்கழகம்)

முதற் பிரதி பெறுபவர்
லயன் திருநாவுக்கரசு சீவரத்தினம்
நந்தலாலா இருப்பகம்

இரண்டாம் பிரதி பெறுபவர்
திருமிகு சுப்பிரமணியம் சிற்றம்பலம்
கே எஸ் ரி ரெக்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமர்வு III

தலைமை
சைவ்புலவர் சு.தேவமனோகரன் அவர்கள்
( பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாம கல்வி வலயம்
செயற்குழு உறுப்பினர்
தலைமையுரை

நிகழ்வுகள்
1. கதாப்பிரசங்கம்:- செல்வி பானுஜா தில்லைமணி
( கன்னியர் வைரவர் அறநெறிப்பாடசாலை - புத்தூர்

2. புராணபடனம்
(யா / ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்
வலயப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள்

3. பண்ணிசை
யா / அருணோதயாக் கல்லூரி
வடமாகாண பண்ணிசைப் போட்டியில் முதலாம் இட
பெற்ற மாணவர்கள்

3. நன்றியுரை :- சைவப்புலவர் த. குமரன் அவர்கள
( செயலாளர் அ.இ.சை.பு.சங்கம்)

4. திருமுறை ஓதுதல்

மதியம் 1.00 மணிக்கு மதிய விருந்து

மு. திருஞானசம்பந்தபிள்ளை — த. குமர
தலைவர் — செயலாள

20.10.2017

## 2017 ம் ஆண்டுத் தேர்வில்
## சித்தி பெற்று
## இளஞ்சைவப் புலவர் பட்டம் பெறுபவர்

1. திருமதி. ஜயமோகனா சிவஞானசுந்தரம் - கொழும்பு 6
2. திரு.முருகப்பன் சேமகரன் - அவுஸ்திரேலியா
3. திரு. செல்வம் கேமநாதன் - பொலநறுவை
4. திருமதி. கமலாதேவி சபாரத்தினம் - அரியாலை
5. திரு.நாகநாதன் அகிலன் - கீரி மன்னார்
6. செல்வி. நித்திய இராமலிங்கம் - பொலநறுவை
7. திரு. செல்லத்தம்பி சதீஸ்குமார் - பொலநறுவை
8. திருமதி. சுவாசினி ரவேந்திரன் - பொலநறுவை
9. செல்வி. சின்னையா வதனி - பன்ன வெட்டுவான் மன்னார்
10. திருமதி ருக்மணி தேவி சிவபாலன் - கொழும்பு 4
11. திரு. கந்தசாமி கௌசிகன் - தேத்தாத்தீவு -01 மட்டக்களப்பு
12. திரு. தம்பிஜயா மனோஜ்குமார் - இணுவில்
13. செல்வி துரைராஜ் தீபாஅர்ச்சனா - முந்தல் புத்தளம்
14. செல்வி பஞ்சலிங்கம் குயிலினி - பூநகரி
15. செல்வி லோஜினி முத்துக்குமார் - பொலநறுவை
16. செல்வி பஞ்சலிங்கம் அநிதா - பூநகரி
17. திருமதி நிர்மலா தனசிங்கநாதன் - கொழும்பு -6
18. செல்வி மந்தாகினி பாலச்சந்திரன் - மல்லாகம்
19. செல்வி சின்னராசா சனுஷ்யா - அளவெட்டி
20. திருமதி. நரேந்திரதிலகை நடராஜா - கொழும்பு 6
21. செல்வி வேல்நாயகம் லவனியா - பொலநறுவை
22. திரு.குணசிங்கம் கந்தபாலன் - கோப்பாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# எம் மனமார்ந்த நன்றி


சிவநெறியே தவநெறியாக கொண்ட அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் 57ஆம் ஆண்டு சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாரும் யா/வண் நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கு பொருளுதவி செய்த புரவலர்களால் மதிய உணவு வசதிகள் செய்த அன்பர்கள் நாவலர் மாகாவித்தியாலயத்தை தந்துதவிய அதிபர் அவர்கட்கும் நன்றிகள்.

மேலும் எமது சங்கத்தின் உறுப்பினர்கள் நிதியுதவி செய்தும் உடலு ழைப்பையும் தந்து உதவியதோடு பல பிரதேசங்களிலும் வாழ்ந்தாலும் சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவிகள் புரிந்த சைவப்புலவர்களுக்கும் விருதுகளையும் சைவநாதம் மலரையும் அழகுற அமைத்துத் தந்த நிறுவனத்தினர்க்கும் நன்றிகள்.

முதற் பிரதி சிறப்புப் பிரதிகளை பெற்று எம்மை மகிழ்வித்தவர்களுக்கும் நன்றிகள். கலைநிகழ்வுகளை தந்துதவிய புத்தூர் கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை, அளவெட்டி அருணோதயக்கல்லூரி, ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும் அதிபர்களும் ஆசிரியர்களும் விளம்பர அனுசரணை செய்தவர்களுக்கும் பொருள்களாகவும் தந்த யாழ் நகர் வர்த்தகர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் மண்டப அலங்காரம் முதலாக பல வகையிலும் உதவிகள் செய்த அத்தனை சைவ உள்ளங்களுக்கும் இருகரம் கூப்பிய நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

8334(P)

சைவப்புலவர் த. குமரன்
கௌரவ செயலாளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T. Seevaratnam
Proprietor

# நந்தலாலா இரும்பகம்
# Nanthalala Hardware

Dealers in All kind of Power Tools
Machine
Electronic Scale
Silver Pipes
Fittings






No. 29, Stanely Road,
Jaffna.

Tel:
021 - 2226234

KEN DEWALT makita HUGO BOSCH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org